விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 23 ஞாயிற்றுக்கிழமை (07.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 078

## வாக்குறுதிகளை நிறைவேற்றியிருந்தால் புலிகள் உருவாகியிருக்க மாட்டார்கள்

### ஐ.நாவில் இலங்கையின் நிலைப்பாடு தொடர்பில் கூட்டமைப்பு அறிக்கை

(கொழும்பு)

தமிழ் தலைவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியிருந்தால் புலிகள் உருவாகியிருக்க மாட்டார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நியாயமான கோரிக்கைகளை முன்வைத்த தமிழர்கள் அச்சுறுத்தப்பட்டதுடன் பாதிக்கும் மேற்பட்டவர்கள்நாட்டை விட்டு வெளியேறினர் 15

## பெண் ஊடகவியலாளருக்கு யாழில் அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பெண் ஊடகவியலாளர் ஒருவரை மர்மக் குழுவைச் சேர்ந்த சிலர் அச்சுறுத்தியுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்றையதினம் இடம்பெற்றுள்ளது.

யாழ். சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமில் அரசுக்கு ஆதரவான பெரும் பொதுக் கூட்டமொன்றுநேற்று இடம்பெற்றுள்ளது. 15

## ஐ.நா மனித உரிமைகள் பேரவையில்

# இலங்கைக்கு எதிராக வாக்களிக்க வேண்டும்

## உறுப்பு நாடுகளிடம் ஆதரவு திரட்டும் கனடா, பிரிட்டன் தூதுவர்கள்

(ஜெனிவா)

ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு வாக்களிக்க வேண்டும் என உறுப்பு நாடுகளிடம் கனடா, பிரிட்டன் தூதுவர்கள் ஆதரவு கோரியுள்ளனர்.

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் சாரா ஹல்டன் தென்கொரிய தூதுவரையும் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவையும் கடந்த இரண்டாம் திகதி சந்தித்துள்ளார்.

இதேவேளை இலங்கைக்கான கனடா தூதுவர் டேவிட் மக்கினன் இலங்கைக்கான பங்களாதேஷ் தூதுவரை சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். 15

## அரசிலிருந்து வெளியேறோம்

### மைத்திரியால சிறிசேன

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசிலிருந்து வெளியேறும் தீர்மானத்தை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இன்னமும் எடுக்க 15

## 500ஐ அண்மித்த கொரோனா மரணங்கள்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற் 15

## பொலிகண்டியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் கிளிநொச்சி விபத்தில் பலி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிகண்டியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் விபத்தில் உயிரிழந்துள்ளார். 15

## மன்னாரில் ரயிலுடன் மோதி உயிரிழந்தவர் உட்பட வடக்கில் 4 பேருக்கு நேற்று கொரோனா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் மேலும் 4 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று சனிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

மன்னாரில் நேற்று தொடருந்துடன் மோதி உயிரிழந்தவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று 457 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவர்களில் 4 15

## இரணைதீவில் அடக்கம்

### இலங்கையின் பிரித்தாளும் சூழ்ச்சி

### சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

கோவிட் தொற்றால் மரணிப்பவர்களை அடக்கம் செய்ய கிளிநொச்சி - இரணைதீவு தேர்ந்தெடுக்கப்பட்டமையானது தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரிக்கும் சூழ்ச்சியின் விளைவே என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீ 15

## சர்வதேசத்தை பகைத்தால்

### பாரதூரமான விளைவு ஏற்படும் – சம்பிக்க

(கொழும்பு)

அரசாங்கம் சர்வதேசத்தை பகைத்துக் கொண்டால் பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரி 15

## ஓட்டமாவடியில் நேற்றும் 7 ஜனாஸாக்கள் அடக்கம்

(மட்டக்களப்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்யலாம் என்று சுகாதார அமைச்சின் சுற்றுநிருபத்துக்கமைய நேற்று சனிக்கிழமை இரண்டாவது நாள் ஏழு ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மஜ்மா நகரில் 15

## இலங்கையில் பாரதிய ஜனதாக் கட்சி யாழில் நேற்று திடீரென உதயம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை பாரதிய ஜனதாக் கட்சி எனும் பெயரில் நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் புதிய கட்சி ஒன்று உதயமாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் யாழ்.ஊடக 15

## ஐ.நாவின் பிரேரணையில் தோற்றுப் போனாலும்

### போர்க்குற்ற விசாரணைகள் என்ற பேச்சுக்கே இடமில்லை சரத் வீரசேகர இறுமாப்பு

7ஆம் பக்கம் பார்க்க

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணக வாழ்வு
29 ✿ 04 ✿ 1930

விண்ணக வாழ்வு
05 ✿ 02 ✿ 2021

அமரர்

## தேவேந்திரா துரைசுவாமி

எங்களின் இதயத்தில் நீக்கமற தெய்வமாக நிறைந்து உற்றார், உறவினர், அயலவர்கள் அனைவரதும் நலன்களை பக்கத்துணை நின்று கவனித்தும் **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என அனைவருடனும் பாரபட்சமின்றி சேர்ந்து உறவாடி அறிவுரைகள் பகிர்ந்து சுகதுக்கங்களில் உறுதுணையாக இருந்த அமரர் தேவேந்திரா துரைசுவாமி அவர்களின் மரணச் செய்தி கேட்கப் பெற்றதும் உடன் நேரில் வந்து துயரத்தில் பங்குகொண்ட அனைத்து அன்பர்களுக்கும், நண்பர்களுக்கும், தொலைபேசி, தந்தி ஊடாக துன்பத்தினை பகிர்ந்துகொண்ட யாவருக்கும் மற்றும் சகல வகையிலும் எங்களுடன் தோளோடுதோள் நின்று உதவி ஒத்தாசை புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் அன்னாரின் குடும்பத்தாரின் நெஞ்சார்ந்த நன்றிகள்.

"பயன்தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் நன்மை கடலின் பெரிது"

84, செட்டித்தெரு,
நல்லூர். (C-1648)

மனைவி, பிள்ளைகள்.


## வேலை வாய்ப்பு

எமது தனித்துவமிக்க AAA GRAND MASTER சதுரங்க பயிற்சி நிலையத்திற்கு கீழ்க்குறிப்பிடும் பணி வெற்றிடங்கள் உள்ளன.

- சதுரங்க பயிற்றுவிப்பாளர் ஆண் / பெண்
- நிலையக் காப்பாளர் (ஆண் மட்டும்)

தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
(நல்லூர் பயிற்சி நிலையத்திற்கு மட்டும்.)

மேலதிக விபரங்களுக்கு (5719)
**AAA GRAND MASTER**
நல்லூர், யாழ்ப்பாணம்
சாவகச்சேரி, மானிப்பாய்
077 667 0108, 076 108 6777


## யாழ். இந்திய தூதரகம் முன் உணவு தவிர்ப்புக்கு மீனவர்கள் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்து யாழ். மாவட்ட மீனவர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தை நடாத்த தீர்மானித்துள்ளனர்.

எல்லை தாண்டிய இந்திய மீனவர்களினால், பல இலட்சம் பெறுமதியான மீன்பிடி வலைகளுக்கு நாளாந்தம் இழப்பு ஏற்படுகின்றது.

ஆகையினால் அதனை கண்டித்து உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடப்போவதாக யாழ். மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய தூதரகத்துக்கு முன்பாக, தமக்கு நியாயமும் இழப்பீடும் கோரியே உணவு தவிர்ப்பு போராட்டத்திலீடுபடப்போவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ம-03)


## ஓலைச்சுவடி சோதிட நிலையம்

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் காண்டம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ளவர்களுக்கு வவுனியாவில் வாசிக்கப்படும். சுபம்

தொடர்புகளுக்கு:- ஓலைச்சுவடி சோதிட நிலையம்
கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில், யாழ்ப்பாணம். (6048)
தொடர்புகளுக்கு. 076 328 7119

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கோண்டாவில் கிழக்கு, இராசபாத வீதியில் மெயின் றோட்டுடன் 10 பரப்புக் பாணி விற்பனைக்குண்டு. (6054)

1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

(இராச வீதிச் சந்தியில் இருந்து 100 மீற்றர் தூரம்.)

தொடர்பு
குரு - 077 468 3354, 077 288 0152

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# மரண அறிவித்தல்



## சின்னம்மா சின்னத்துரை

**தோற்றம் : 04.08.1938 மறைவு : 06.03.2021**

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னம்மா சின்னத்துரை நேற்று (06.03.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தங்கராசா மற்றும் தவராசா, மகேந்திரன், தியாகராணி, விஜயந்தி, ராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற முத்தம்மா, இந்திராணி, ஞானம், கணேசலிங்கம், சற்குணநாதன், கருணாகரன் ஆகியோரின் மாமியாரும் மதி, வினோ, பிரசன்னா, கோபி, கோகிலா, தஜீவன், ரமேசன், அஜந்தன், சாளினி, அஜித், ரூபன், தீபா, நிசாந்தன், றஜீவன், ரஞ்சித், ரமிபியூலா, நேருஜா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.03.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அடக்க ஆராதனைக்காக தாவடியில் அமைந்துள்ள கல்வாரி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (C-1624)

இல. 30, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.
077 912 0422
077 345 4865
தகவல்: குடும்பத்தினர்

# ஈழத் தமிழர்களை ஏமாற்றிய ஐ.நாவின் புதுப்பிக்கப்பட்ட வரைபு

## அரசியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை குறித்த தீர்மானத்தின் புதுப்பிக்கப்பட்ட வரைபில் தமிழ் மக்களின் வேண்டுகோள்கள் எவையும் காணப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

முன்னர் வெளியிடப்பட்டிருந்த நகல்வரைபின் உரையின் மொழியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. எனினும் புதுப்பிக்கப்பட்ட வரைபில் சர்வதேச பொறுப்புக்கூறும் பொறிமுறை இணைத்துக் கொள்ளப்படவில்லை என்றும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை குறித்த தீர்மானத்தின் புதுப்பிக்கப்பட்ட வரைபு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தினை எதிர்கால விசாரணைகளில் பயன்படுத்துவதற்காக மனித உரிமைகள் மற்றும் அது தொடர்பான குற்றங்கள் குறித்த ஆதாரங்களை சேகரித்தல் ஒருங்கிணைத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் என நம்பகத்தன்மை மிக்க விதத்தில் குற்றம் சாட்டப்பட்ட இலங்கை அதிகாரிகளிற்கு எதிராக பயணத்தடைகள், போக்குவரத்து தடைகள் போன்றவற்றை விதிக்குமாறும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் மனித உரிமை ஆணையாளர் முன்வைத்த பரிந்துரைகள் குறித்து எதனையும் புதுப்பிக்கப்பட்ட வரைபு குறிப்பிடவில்லை.

இலங்கையில் தமிழர்கள் முஸ்லிம்கள் அதிகளவிற்கு ஓரங்கட்டப்படுவது, சிவில் சமூகத்தினர் கண்காணிக்கப்படுவது, அச்சுறுத்தப்படுவது ஊடக சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் யுத்தத்தினால் உயிரிழந்தவர்களை பொதுமக்கள் நினைவுகூருவது மீதான கட்டுப்பாடுகள், நினைவுத்தூபிகள் அழிக்கப்படுதல் குறித்த கரிசனைகளும் புதிதாக இடம்பெற்றுள்ளன.

இலங்கையின் மனித உரிமை ஆணையகம் காணாமல்போனவர்கள் குறித்த அலுவலகம் இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகிய வலுவான விதத்திலும் சுதந்திரமாகவும் செயற்படுவதை இலங்கை அரசாங்கம் உறுதிசெய்யவேண்டும் என்ற விடயமும் புதுப்பிக்கப்பட்ட வரைபில் இடம்பெற்றுள்ளது.

எவ்வாறாயினும் தமிழர்களின் எதிர்பார்ப்பை குறித்த வரைபு கொண்டிருக்கவில்லை என்று அரசியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-4)

## தொடரும் உணவுத் தவிர்ப்புப் போராட்டம்

### வவு. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும் இணைவு






(குப்பிழான்)

இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு வலியுறுத்தி நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஆதீனத்திற்கு முன்பாக இடம்பெற்று வரும் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நேற்றுச் சனிக்கிழமை 6 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து மேற்கொண்டு வரும் மேற்படி போராட்டத்தில் நேற்றைய தினம் வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கலந்து கொண்டு இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி தமிழ் மக்களுக்கு நீதி பெற்றுத் தர வேண்டும் என வலியுறுத்தினர்.

மேற்படி போராட்டத்தில் கலந்து கொண்ட வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி சண்முகபிள்ளை சரோஜினி கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் யுத்தம் முடிவடைந்த பின்னர் 12 வருடங்களாக காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகளைக் கேட்டுத் தொடர்ச்சியாகப் போராடி வருகிறோம். இதுவரை அரசாங்கம் எங்களின் உறவுகளின் நிலை என்ன? என்பது தொடர்பில் சரியான பதில் எதனையும் வழங்கவில்லை. இதனால் தான் நாங்கள் சர்வதேசத்திடம் நீதி கேட்டு நிற்கின்றோம்.

தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை ஜெனீவாவில் இடம்பெற்று வரும் நிலையில் அமர்வு நிறைவுபெறுவதற்குள் எமக்கான தீர்வு கிடைக்க வேண்டும். இல்லாவிடில் நாங்கள் அனைவரும் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-18-33)

## அமெரிக்காவின் 'தைரியமான பெண்மணி' விருதுக்கு தெரிவாகியுள்ள ஈழத்துப்பெண்



(வோஷிங்டன்)

இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் குறித்த பேசுபொருள் அனைத்துலக அரங்கத்தில் முக்கிய இடத்தைப்பிடித்துள்ள நிலையில் இலங்கையின் மனிதஉரிமை ஆர்வலரும் வழக்கறிஞருமான ரனிதா ஞானராஜாவுக்கும் அமெரிக்க ராஜாங்கத்திணைக்களம் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு தைரியமான பெண்மணி என்ற விருதை வழங்கியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தால் நேற்று முன்தினம் உலகெங்கிலும் இருந்து விருது பெறுபவர்களின் பட்டியல் அறிவிக்கப்பட்டிருந்தது. இதில் ஒருவராக ரனிதா ஞானராஜாவும் இடம்பிடித்துள்ளார். இலங்கை அரசாங்கத்தால் அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்கள் விடுக்கப்பட்ட போதிலும், ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் உரிமைகளுக்காக ரனிதா ஞானராஜா தொடர்ந்தும் போராடி வருவதாகவும் அமெரிக்கவெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு இலவச சட்ட உதவி உட்பட்ட சேவைகளை வழங்கும் நீதிக்காக ரனிதா ஞானராஜா தனது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளதாகவும் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களுக்குரிய விருது வழங்கும் மெய்நிகர் நிகழ்வு நாளை திங்கட்கிழமை அமெரிக்க ராஜாங்கசெயலாளர் அந்தனி பிளிங்களின் தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-4)

## போலி ஆவணங்களை தயாரித்து விற்பனை சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)போலி ஆவணங்களை தயாரித்து வாகன மோசடியில் ஈடுபட்ட சந்தேக நபர்களிருவரை மேல்மாகாண புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வாடகைக்கு வாகனங்களை வழங்கும் நிறுவனத்தில் வாகனங்களை பெற்று அவற்றுக்கான போலி உறுதிப்பத்திரங்களை தயாரித்து , குறைந்த விலையில் வேறு நபர்களுக்கு விற்பனை செய்த இரு சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-4)

HEAT TRANSFER MACHINES
மற்றும் SUBLIMATION PRODUCTS
Mug Press | Vinyle | Machine Heat Press | Shirt Printing
அனைத்து பொருட்களும் தரமான Quality சிறந்த விலையில் பெற
தமிழ், ஆங்கிலம், சிங்களம் மொழிகளில் கதைக்கலாம்.
THE MAGIC TOUCH
218, Hill Street Dehiwela Tel: 0774242522

காணி விற்பனைக்கு
மந்திகை அரசினர் வைத்தியசாலையிலிருந்து 400 மீற்றர் தூரத்தில் றோட்டுக்கு மிக அண்மையாக 6 பரப்பு குடியிருப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு
0762712681
(C-1621)

10வருட வெற்றிகரமான சேவையில்....
கனடாவில் உயர்கல்வி
குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
எமது வீசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்
புதிய பிரிவுகள் திருமணமாகி லண்டன் செல்பவர்களுக்கான LIFESKILLS A1 வகுப்புக்கள் மற்றும் GERMAN A1 வகுப்புக்கள் IELTS வகுப்புக்கள் 07/03/2020 அன்று காலை 10 மணிக்கு ஆரம்பம். (C-1612)
இதுவரையில் 178 மாணவர்கள் எமது ஆலோசனை வாயிலாக பயன்பெற்றுள்ளனர்
வீசா கிடைக்கமுன்னர் முற்பணம் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது
யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில் கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்
நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...
WORLD EDUCATION CONSULTANCY
அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989

# நியூசிலாந்துக்கு எதிரான 20 ஓவர் கிரிக்கெட்; அவுஸ்திரேலிய அணி மீண்டும் வெற்றி

நியூசிலாந்துக்கு எதிரான 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 50 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து அந்த அணிக்கு எதிராக 5 ஆட்டங்கள் கொண்ட 20 ஓவர் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் 2 ஆட்டங்களில் நியூசிலாந்து அணி முறையே 53 ரன், 4 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 3ஆவது ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 64 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டது.

இந்த நிலையில் அவுஸ் திரேலியா-நியூசிலாந்து அணிகள் இடையிலான 4-வது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி வெலிங்டனில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் முதலில் பட்டிங் செய்த அவுஸ்திரேலியா 6 விக்கெட்டுக்கு 156 ரன்கள் சேர்த்தது. கப்டன் ஆரோன் பிஞ்ச் 55 பந்துகளில் 5 பவுண்டரி, 4 சிக்சருடன் 79 ரன்கள் குவித்து ஆட்டம் இழக்காமல் இருந்தார். கைல் ஜாமிசன் வீசிய கடைசி ஓவரில் மட்டும் பிஞ்ச் 4 சிக்சர்களை தெறிக்க விட்டார்.

அடுத்து களம் இறங்கிய



நியூசிலாந்து 18.5 ஓவர்களில் 106 ரன்னில் அடங்கியது. இதனால் அவுஸ்திரேலியா 50 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கப்டன் வில்லியம்சன் (8 ரன்), கப்தில் (7 ரன்) ஒற்றை இலக்கத்தை தாண்டவில்லை. அதிகபட்ச மாக கைல் ஜாமிசன் 30 ரன் எடுத்தார். அவுஸ்திரேலிய தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் கேன் ரிச்சர்ட்சன் 3 விக் கெட்டும், சுழற்பந்து வீச்சாளர்கள் ஆஷ்டன் அகர், ஆடம் ஜம்பா, மக்ஸ்வெல் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி தொடரை 2-2 என்ற கணக்கில் சமநிலைக்கு கொண்டு வந்துள்ளது. இவ்விரு அணிகள் இடையே தொடரை வெல்வது யார்? என் பதை நிர்ணயிக்கும் 5ஆவது மற்றும் கடைசி 20 ஓவர் போட்டி இதே மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளது. (4)

# மேற்கிந்தியத் தீவுகளுக்கு பதிலடி கொடுத்தது இலங்கை



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 2 ஆவது இருபதுக்கு - 20 போட்டியில் இலங்கை அணி 43 ஓட்டங்களால் வெற்றி பெற்று 3 போட்டிகள் கொண்ட தொடரை 1-1 என சமநிலைப் படுத்திக்கொண்டது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 தொடரில் விளையாடி வருகின்றது.

இதன் முதல் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்று தொடரில் 1-0 என முன்னிலை பெற்றிருந்தது. இந்நிலையில், இரு அணிகளுக்குமிடையில் 2 ஆவது போட்டி மேற்கிந்தியத் தீவுகளின் அன்டிகுவாவில் இடம்பெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் தனுஷ்க குணதிலக 56 ஓட்டங்களையும் பதும் நிஷங்க 37 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக பந்து வீச்சில் டுவைன் பிராவோ 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இந்நிலையில், 20 ஓவர்களில் 160 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு இலங்கை அணியின் பந்து வீச்சாளர்கள் பெரும் சவாலை ஏற்படுத்தினர்.

இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணி 18.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 117 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 43 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக் கொண்டது. (4)





2020 ஆம் ஆண்டிற்கான இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட பயிற்றுநருக்கான தேசிய மட்ட E.காட்டா (நிகழ் நிலை) போட்டியில் பங்கு கொண்ட எஸ். விஜயராஜ் வெள்ளிப்பதக்கம் பெற்றமைக்காக கௌரவிக்கப்பட்டதோடு தேசிய மற்றும் கழகங்களுக்கிடையிலான சர்வதேச போட்டியில் பங்கு கொண்டு 7 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கல பதக்கங்கள் பெற்ற SSKA கராத்தே கழகத்தைச் சேர்ந்த கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம் பயிற்சி பெற்றுவரும் மாணவர்களும் நிலைய நிர்வாகத்தினரால் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

# ஞானம்ஸ் பெயின்ட் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது புரொன்கொஸ்

ஞானம்ஸ் பெயின்ட் வெற்றிக் கிண்ணம் தொடரின் இறுதிப் போட்டி கடந்த மாதம் 28 ஆம் திகதி சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் நல்லூர் புரொன்கொஸ் அணி யாழ்.றோயல்ஸ் அணியை 16 ஓட்டங்களால் வெற்றி பெற்று ஞானம்ஸ் பெயின்ட் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நல்லூர் புரொன்கொஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை மேற்கொண்ட போது 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டியில் பிரியலக்ஷன்-22, டார்வின்-21, பிரதீப்-10, ஜேம்ஸ்-12, தூஜன்-16 ஓட்டங்களைப் பெற்றனர்.




களத்தடுப்பில் யாழ்.றோயல்ஸ் அணி சார்பாக ஜிந்துசன், பிரசன்னா தனா 3விக்கெட்டுக்களையும் சுஜன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

113 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ். றோயல்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது.

இத்தொடரில் நல்லூர் புரொன்கொஸ் அணி 6 போட்டிகளில் பங்குபற்றி 6 இலும் வெற்றி பெற்று **unbetten** அணியாக வெற்றி கொண்டனர்.

இத்தொடரில் ஆகக் கூடிய ஓட்டங்களை பெற்ற வீரராக யாழ்.றோயல்ஸ் அணியின் யனுதாஸும் ஆகக் கூடிய விக்கெட்டுக்களை பெற்ற வீராராக யாழ். றோயல்ஸ் அணியின் பிரசன்னாவும் **super striker** ஆக யாழ்.றோயல் அணியின் வாமணனும் பெறுமதிமிக்க வீரராக யாழ்.றோயல் அணியின் பிரசன்னாவும் தெரிவு செய்யப் பட்டனர்.

இப்போட்டியில் சிறந்த வீரராக நல்லூர் புரொன்கொஸ் அணியின் டார்வின் தெரிவு செய்யப்பட்டார். (4)

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



**பிறப்பு**
**15.01.1961**

**இறப்பு**
**07.03.2019**

அமரர்

**பத்மநாதன் வசந்தி (கிச்சி அண்ணை)**


அன்பான உன் முகத்தை காணாமல் தினம் தினம்
நாம் படும் பாடு உனக்கு புரிகிறா எம் செல்வமே?
இருண்ட நாட்கள் ஓடி இரண்டாண்டு ஆகியதே
நீ எம்முடன் வாழ்ந்த அந்த
நினைவுகள் எம்முடனேயே இருக்கும்
நாம் உயிருடன் உள்ளவரை
உன் நினைவுகளும் எம்முடன் வாழும்.

சிவன்வீதி, உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய்.

(6023)

தகப்பன்
பத்மநாதன்

# ஜூலையில் மாகாணசபை தேர்தல் நடத்தத் திட்டம்



(கொழும்பு)

மாகாண சபை தேர்தலை பழைய தேர்தல் முறைமைப்படி எதிர்வரும் ஜூலை மாதம் நடத்த எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாண சபை தேர்தல் குறித்து கருத்துரைப்பதற்கு எதிர்க்கட்சியினருக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கும் தார்மீக உரிமை கிடையாது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

மாகாண சபை தேர்தல் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபை தேர்தலை இம்மாதத்தில் இரண்டாம் வாரத்தில் நடத்த ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டது.

கொவிட் -19 வைரஸ் தொற்றின் இரண்டாம் அலையின் காரணமாக தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை மக்கள் முழுமையாக பின்பற்றுகிறார்கள். ஆகவே இவ்வாறான பின்னணியில் மாகாண சபை தேர்தலை புதிய தேர்தல் முறைமையின் பிரகாரம் எதிர்வரும் ஜூலை மாதம் நடத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இம்முறை மாத்திரம் பழைய தேர்தல் முறை மையின் கீழ் மாகாண சபை தேர்தலை நடத்தி எதிர்காலத்தில் புதிய தேர்தல் முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்தி, புதிய தேர்தல் முறைமையினை முழுமையாக தேர்தல் முறைமைகளில் செயற்படுத்தலாம் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கிய ஆலோசனை கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

மாகாண சபை தேர்தலை அரசாங்கம் திட்டமிட்டு பிற்போடுவதாக எதிர்த்தரப்பினரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் குற்றஞ்சாட்டுகிறார்கள். மாகாண சபை தேர்தல் குறித்து கருத்துரைக்கும் தார்மீக உரிமை இவ்விரு தரப்பினருக்கும் கிடையாது என அவர் தெரிவித்தார். (நி-4)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.02.2021 புதன்கிழமை அன்று இறைவனடி
சேர்ந்த எமது குடும்பத்தலைவி

**அமரர். சுப்பிரமணியம் பிள்ளையம்மா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள்
05.03.2021 வெள்ளிக்கிழமை காலை 6.00
மணியளவில் "கீரிமலை புனித தீர்த்தக்கரையில்
நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியம் 07.03.2021
இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00
மணியளவில் "அன்னாரின் இல்லத்தில்"
நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்கள் வருகை தந்து
அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும்
தொடர்ந்து நடைபெறும் மதிய போசன
நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

(6019)

70, பருத்தித்துறை வீதி,
(ஆரியகுளம் சந்தி) யாழ்ப்பாணம்.

சந்தி முருகன் வேக்சொப்
அன்சேர்விஸ்.

மகன் - 077 201 8275,
077 711 0199

# பொருளாதார ரீதியாக வடக்கு மக்களை முன்னேற்ற இராணுவம் உதவும்



(நல்லூர்)

**மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி பொருளாதார ரீதியாக வடக்கு மாகாண மக்களை முன்னேற்றுவதற்கு இராணுவம் உதவுமென யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.**

மகளிர் தினத்தை முன்னிட்டு இராணுவத்தினரால் உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் வழிகாட்டுதலின் கீழ் இராணுவத்தினரால் வருமானம் குறைந்த மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு இந்த உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு போசாக்கு உணவு பொதிகள் அத்தோடு கர்ப்பிணி தாய்மார்களுக்கு இந்த உணவுப் பொருட்களை வழங்குவதில் யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி என்ற ரீதியில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இலங்கையில் உள்ள அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது இலங்கை இராணுவத்தின் முக்கிய நோக்கமாகும்.

அதேபோலவே யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தலைமையகம் யாழ்ப்பாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி பொருளாதார ரீதியாக வடக்கு மக்களை முன்னேற்றுவதற்கான சகல வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க தயாராக உள்ளன.

அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய பாதுகாப்பு மட்டுமல்லாது விவசாயம் மற்றும் பொது மக்களின் வாழ்வாதாரத்தை முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் மற்றும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை இராணுவத்தினர் முன்னெடுக்கும் நிலையில்,

இங்கு உள்ள படித்த முதியவர்களின் ஆலோசனைகளை பெற்று இராணுவத்தினராகிய நாங்கள் பல்வேறுபட்ட உதவிகளை பொதுமக்களுக்கு மேற்கொள்வதற்கு எந்நேரமும் தயாராக உள்ளோம் என தெரிவித்தார். (5-4-33)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் உள்ள கலைஞர்கள் மற்றும் கலை மன்றத்திற்கான கலைக்குரிசில் விருதுத் தெரிவு - 2021, இளங்கலைஞர் விருதுத் தெரிவு - 2021, சிறந்த நூற்பரிசுத் தெரிவு - 2021, பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டிகள் - 2021, அரச உத்தியோகத்தர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டிகள் - 2021, நூற் கொள்வனவு - 2021 என்பவற்றிற்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாணப் பண் பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில் வலி.தென் மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ளவர்கள் விண்ணப்பங்களை வலி.தென் மேற்குப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலாளர் திருமதி. யூ.யசோதா அறிவித்துள்ளார்.(5)




## பொதுச்சபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு செல்லக் கதிர்காம ஆலயத்தின் அறங்காவலர் சபையின் பொதுச் சபைக்கூட்டம் - 2021 இன்று 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் ஆலய மண்டபத்தில் ஆலய அறங்காவலர் தலைவர் இ.தயாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறங்காவலர் சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.(5-4-8)

## மரம் நடும் பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனித மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் ஹரித்தாஸ் குடும்பத்தின் வடக்கிற்கான நட்பு பயணத்தின் மரம் நடும் பிரசாரம் நாளை மறுதினம் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் எழுதுமட்டுவாழ் நாகர் கோவில் வீதி நொங்குவில் எஸ்ரேட்டில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பி.ஞானப்பிரகாசம் கலந்து கொள்வார்.(நி-4)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியின் நெறிப்படுத்தலில் யாழ்ப்பாண மாவட்ட பலாலி கட்டளைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் ஆயிரம் பேருக்கு நேற்றையதினம் பல இடங்களில் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா மற்றும் யாழ்.மாவட்ட இராணுவ உயரதிகாரிகள், பலாலி கட்டளை தலைமையக உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். (படம்:-ஐ.சிவசாந்தன், கஜிந்தன்)

## கைதடி கமநல நிலையத்தில் விவசாயிகளைப் பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

கைதடி கமநலசேவைகள் நிலையத்தினால் விவசாயிகளின் தரவுகள் சேகரிப்பு இடம்பெற்று வருகிறது.

இதில் ஒவ்வொரு விவசாயிக்கும் தனித்தனியான விண்ணப்பப்படிவம் நிரப்பப்பட வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

எனவே விவசாயிகள் கடந்த வருடம் ஏக்கர் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு, சந்தாப்பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு, குடும்ப அட்டையின் முன்பக்கப் பிரதி அல்லது குடும்ப அங்கத்தவர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள், பிறந்த திகதி அடங்கிய விபரம், விவசாய வங்கிப் புத்தகம் ஆகியவற்றுடன் நாளை 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 முதல் பிற்பகல் 2.30 மணிக்கிடைப்பட்ட நேரத்தில் நாவற்குழி ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய மண்டபத்திற்கு வருகை தருமாறு நாவற்குழி கமக்கார அமைப்பு அறிவித்துள்ளது. (5-4)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் அரசடி ஸ்ரீ ஞான வைரவர் சுவாமி ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி 10 தினங்கள் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

இதில் 10 ஆம் நாளான எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை சங்காபிஷேகம் இடம்பெறும். (5-4-8)

## தென்னை முக்கோண வலயமாக வடமாகாணத்தை பிரகடனப்படுத்த ஜனாதிபதி உத்தரவு

(சாவகச்சேரி)

இலங்கையின் இரண்டாவது தென்னை முக்கோண வலயமாக வட மாகாணத்தை பிரகடனப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆணையிட்டுள்ளார் என தென்னை, கித்துள் பனை மற்றும் இறப்பர் செய்கை மேம்பாடு இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்த நாட்டின் பொருளாதாரத்தில் தென்னைப் பயிர் மிக முக்கிய பங்குவகிக்கிறது. தென்னை முக்கோண வலயமாக கம்பஹா, புத்தளம், குருநாகல் மாவட்டங்கள் காணப்படுகின்றன.

இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் வட மாகாணத்தை இரண்டாவது தென்னை வலயமாக பிரகடனப்படுத்த வேண்டும் என ஆணையிட்டுள்ளார் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-4-30)

## கண்காணிப்பு கமராக்கள் பொருத்த நடவடிக்கை

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் பொதுக்கூட்டம் நேற்று பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் த.ஐங்கரன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் வடமராட்சி முனியப்பர் கோவில் பகுதியிலிருந்து உடுப்பிட்டி நெல்லியடி கரவெட்டி பிரதான வீதிகளில் சுமார் 25 சி.சி.ரி.வி.கமராக்கள் பொருத்தும் வேலைத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. பொதுஇடங்களில் குப்பை கொட்டுவோரை இனங்காண்பதற்கே குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வேலைத்திட்டம் எதிர்வரும் வாரமளவில் நடைபெறவுள்ளது எனவும் தவிசாளர் தெரிவித்தார். (5-4-60)

# ஐ.நாவின் பிரேரணையில் நாம் தோற்றுப் போனாலும் போர்க்குற்ற விசாரணைகள் என்ற பேச்சுக்கே இடமில்லை

## சரத் வீரசேகர இறுமாப்பு

**(கொழும்பு)**

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரும் பிரேரணை மீது நடத்தப்படும் வாக்கெடுப்பில் நாம் தோற்றாலும்கூட சர்வதேச நாடுகள் இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடும் அதிகாரத்தை வழங்கப்போவதில்லை.**

யார் வலியுறுத்தினாலும் போர்க்குற்றங்கள் தொடர்பில் எந்தவொரு விசாரணையையும் நடத்த இடமளிக்க மாட்டோம் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இந்த விடயங்களில் இந்தியா இப்போது அமைதியாக இருந்தாலும் இறுதி நேரத்தில் எமக்கு ஆதரவாகவே செயற்படுவார்கள் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் இலங்கையின் நிலைப்பாட்டை நாம் ஏற்கனவே அறிவித்துள்ளோம்.

கடந்த காலத்தில் நல்லாட்சி அரசாங்கம் இந்த விடயங்களில் இலங்கையை பாதுகாக்க தவறிய காரணத்தினால் நாம் முன்னின்று போராட வேண்டிய நிலைமை உருவாகியது. ஆனால் இப்போது எமது அரசாங்கம் எதனை செய்ய வேண்டுமோ அதனை மிகச் சரியாக செய்து வருகின்றது.

இலங்கையின் நிலைப்பாடு என்ன என்பதையும், நாம் எவ்வாறான நடவடிக்கைகளை கையாள்வோம் என்பதையும், எமது நோக்கம் என்ன என்பதையும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

எம்மை பொறுத்தவரை மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பில் முன்வைத்த அறிக்கை பொய்களால் தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையாகும்.

இந்த அறிக்கையை நாம் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். பிரேரணையை நாம் நிராகரிப்பதாக தெரிவித்த பின்னரும் எமக்கு ஆதரவாக பல நாடுகள் குரல் கொடுத்துள்ளன.

பிரதான நாடுகள் எம்மிடம் உள்ளன என்பது எமக்கு தைரியமளிக்கின்றது. இலங்கைக்கு எதிராக பிரேரணையைக் கொண்டுவந்து நடத்தப்படும் வாக்கெடுப்பில் நாம் தோற்றாலும், சர்வதேச நாடுகள் இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடும் அதிகாரத்தை வழங்கப்போவதில்லை.



யார் வலியுறுத்தினாலும் போர்க்குற்றங்கள் தொடர்பில் எந்தவொரு விசாரணையையும் நடத்த மாட்டோம். இராணுவத்தை தண்டிக்கும் எந்தவொரு நடவடிக்கைக்கும் அரசாங்கம் இடமளிக்காது. இந்த பேச்சுக்கே இடமில்லை என்பதே அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடாகும்.

இப்போது தமிழகத்தில் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் அங்கு உள்ளக அரசியல் நகர்வுகள் காணப்படும். ஆனால் இந்தியா எப்போதும் இலங்கைக்கு ஆதரவாக செயற்படும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தியா இப்போது அமைதியாக இருந்தாலும் அவர்கள் எமக்கு சாதகமாகவே தீர்மானமெடுப்பார்கள் என வீரசேகர தெரிவித்தார். (நி-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: **M.Sc**, சிரேஷ்ட விரிவுரையாளர் (அரச)<br>எதிர்பார்ப்பு: ஆசிரியை/அரச ஊழியர், மணமகன் திருமணமாகி விவாகரத்து பெற்றவர். உள்நாடு மட்டும்<br>தொ.இ: **B/11548** | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 21 1/4 செவ் 4 சூரி 6 இல்<br>தகைமை/தொழில். **A/L**, பிரான்ஸ் **PR** உண்டு<br>எதிர்பார்ப்பு: பிரான்சில் இருக்கும் மணமகன் வேண்டும். வேறு வந்தாலும் (இலங்கை) பரவாயில்லை. மணமகள் விவாகரத்து ஆனவர். பிரான்ஸ் சென்ற பின் விவாகரத்தானவர். விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: **G/11637** |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 16 1/2 செவ் 10 சூரி 9 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: **HNDA,AAT,** கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் உள்ள பெண். வெளிநாடும் எதிர்பார்க்கப்படும்<br>தொ.இ: **B/11549** | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 38 செவ்.சூரி 1 இல்<br>உயரம்: 5.6<br>தகைமை/தொழில்: **A/L**<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம், அரச சார்பு அற்ற உத்தியோகம்.வெளி நாடும் ஏற்கப்படும்<br>தொ.இ: **G/11641** |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 9 செவ் 5 சூரி 3 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: **O/L,A/L,** முகாமைத்துவ உதவியாளர் (அரச)<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம், உள்நாடு மட்டும். மணமகள் பொது நிறமாக இருத்தல் நன்று<br>தொ.இ: **B/11552** | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 26 1/2 செவ் 9 சூரி 7இல்<br>உயரம்: 5'3'<br>தகைமை/தொழில்: **A/L,N.V.Q(5),** அரச வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் உள்ள பட்டதாரி, உள்நாடு மட்டும்<br>தொ.இ: **G/11645** |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 27 1/2 செவ்.சூரி 1 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:O/L, கட்டார்<br>எதிர்பார்ப்பு: சாதரண படித்த பெண்.வெளிநாடும் எதிர்பார்க்கப்படும்.<br>தொ.இ: **B/11556** | பிறப்பு: 1996 இந்து நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 15 செவ்.சூரி 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: **B.Sc**<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, என்ஜினியர், **B.Sc,** உள்நாடு மட்டும்<br>தொ.இ: **G/11647** |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## தேவை

கொழும்பு,தெகிவளையில் அமைந்துள்ள 3 பேர் கொண்ட வீடொன்றில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. வயது 20-40 வரை சம்பளம் 30,000/ (C-1228)

தொடர்பு:-077 217 7995

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தை Station அருகில் சகல தளபாடங்களுடன் தனி வீடுகள் Separate Sanitizer Rooms with Attached Bathroom வாடகைக்குண்டு. விஷேட வைபவங்களுக்கும் வீடுகள் 2,3,6 அறைகள் Fully Furnished நாள் வாடகைக்கு. (C-1215)

071 066 7511, 077 766 7511

## தேவை

சாடி, சிலைகள் போன்ற சீமெந்து வேலை செய்யக்கூடிய ஆண் வேலையாள் தேவை. (6043)

தொடர்பு:-077 836 2408

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1989 இல் பிறந்த விசாகம் 1ம் பாதம் அரச வங்கி உத்தியோகத்தருக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(செவ்வாய்க்குற்றம் இல்லை)

தொடர்பு:-077 016 4786
077 998 9656 (6040)

## மணமகள் தேவை

பிறந்த வருடம் :- 1978
மதம் :- இந்து சைவபோசனம்
நட்சத்திரம் :- அத்தம் 2
கிரகபாவம் :- 36
தகைமை :- B.SC
தொழில் :- அரசதொழில்
எதிர்பார்ப்பு :- அரச தொழில் புரியும் சைவபோசனமுடைய மணமகள். (6020)

தொடர்பு:-0776913079, 0764174683

## கட்டட வேலைக்கான கூறுவிலை கோரல்

A-9 வீதி முகமாலையில் அமைந்துள்ள சிவபுர வளாகப் பகுதியில் மூதாளர் இல்லப் பயன்பாட்டிற்கான சமையலறை மற்றும் நீர்த்தாங்கி அமைப்பதற்கு பொருத்தமான கட்டட ஒப்பந்தக்காரரிடமிருந்து கூறுவிலை கோரப்படுகிறது.

விண்ணப்பப்படிவங்களையும்,வரைபடங்களையும் எமது அலுவலகத்தில் நேரடியாகப் பெற்று 2021. 03.15 நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

சிவபுர வளாகம்,
A-9 வீதி, முகமாலை.

நிறைவேற்றுப் பணிப்பாளர்,
திரு.கு.குமணன்
077 622 4038 (C-1609)

# பதுளை வைத்தியசாலையில் தொற்றாளர்கள் அதிகரிப்பு

(பதுளை)

பதுளை பொது வைத்திய சாலையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 34ஆக அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை நிர்வாகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த வைத்தியசாலையில் பணிபுரியும் 2 வைத்தியர்கள், 3 சுகாதார ஊழியர்கள் மற்றும் 29 நோயாளர்களுக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, பதுளை வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எனினும், ஏனைய பிரிவுகளில் வைத்திய நடவடிக்கைகள் வழமைபோன்று இடம்பெற்று வருவதாக நிர்வாகப் பிரிவு தெரிவித்தது. (நி-4)

# மிச்செல் பச்லெட்டை இலங்கைக்கு அழைக்க அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டை இலங்கைக்கு அழைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

படையினருக்கு எதிராக மனித உரிமைகள் மீறல் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றின் உண்மை நிலையை அறிந்து கொள்வதற்காக அவர்களை அழைக்க அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

அந்தவகையில் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் மற்றும் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கின்ற முக்கியமான நாடுகளின் பிரதிநிதிகளை இலங்கைக்கு விஜயம் செய்யும்படி அழைப்பு விடுக்கவுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். (நி-4)

# இராவண எல்ல வனப்பகுதியில் தீப்பரவல் இதுவரை 200 ஏக்கர் வனப் பகுதி நாசம்



(பதுளை)

பதுளை- இராவண எல்ல வனப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. இதுவரை சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பு தீக்கிரையாகியுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாததை தொடர்ந்தே **Bell 212** ரக ஹெலிகொப்டரை குறித்த தீயை கட்டுப்படுத்தும் செயற்பாட்டுக்கு இலங்கை விமானப்படை அனுப்பிவைத்துள்ளது.

தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், பொலிஸார், இராணுவத்தினர் உள்ளிட்ட பலர் தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். (நி-4-8)

# போதைக்கு அடிமையானவர்களை புனர்வாழ்விற்கு உட்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

எதிர் வரும் காலத்தில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை சிறைச்சாலையில் அடைக்கப்படாமல் புனர்வாழ்விற்கு உட்படுத்த நடவடிக்கை எடுப்பதாக பொது பாதுகாப்பு தொடர்பான அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்புடைய சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு அமைச்சர் சரத் வீரசேகர இதனை தெரிவித்தார். (நி-4)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 13 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறியமை தொடர்பில் கடந்த வருடம் ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் இது வரையில் 3,307 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவர்களில் 3,250 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளுக்கு புறம்பாக செயற்பட்டதாக நேற்று காலை ஆறு மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலயத்திற்குள் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-4-8)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் முழுப்பொறுப்பும் நல்லாட்சி அரசினுடையதே

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான முழுப் பொறுப்பையும் கடந்த அரசாங்கமே ஏற்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை மிகவும் தெளிவானது எனத் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் தேசிய பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த முக்கியத்துவத்தை கடந்த நல்லாட்சி அரசாங்கம் புறக்கணித்தமையின் ஊடாகவே இத்தாக்குதல் இடம்பெற்றதாவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், குறித்த தாக்குதலுக்கும் தற்போதைய அரசாங்கத்திற்கும் எந்தவித பொறுப்பும் இல்லை என தெரிவித்த அவர், தாக்குதலுக்கு பின்னணியில் இருப்பவர்களை தண்டிப்பதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம் என தெரிவித்தார். (நி-4-8)



# சுற்றாடல் பிரச்சினைகளை தீர்க்க இணையும் அமைச்சுக்கள்

(கொழும்பு)

சுற்றாடல் தொடர்பில் எதிர் நோக்கப்படும் பிரச்சினைகளுக்கு சில அமைச்சுக்கள் ஒன்றிணைந்து அமைச்சுக்களு க்கிடையிலான இணைப்பு வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளன.

உள்ளக அமைச்சு இணைப்பு வேலைத்திட்டத்திற்காக சுற்றாடல் துறை அமைச்சு வன விலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு நீர்வள அமைச்சு, வன ஜீவராசிகள் வன வள அமைச்சு ஆகியன இணைந்துள்ளன.

இந்த அமைச்சுக்களின் அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன் போது முத்து ராஜவெல ஈரலிப்பு நிலத்தை பாதுகாத்தல், அரசாங்கத்தினால் பெறுப்பேற்க்கப்பட்டுள்ள கிராமிய காணி களை மீண்டும் விவசாயி களுக்கு வழங்குதல் மற்றும் சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படுத்தும் வகையில் நட வடிக்கை மேற்கொள்பவர்களை சட்டதின் முன் நிறுத்து வது தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டது.(நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 160 | 200 |
| தக்காளி | 250 | 170 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 50 |
| கோவா | 160 | 120 | 150 | 200 |
| கரட் | 150 | 220 | 220 | 250 |
| பூசணி | 80 | 100 | 80 | 100 |
| புடோல் | 160 | 140 | 150 | 140 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 150 | 200-300 | 240 |
| பெரிய வெங்காயம் | 180 | 190 | 120 | 180 |
| பாகற்காய் | 180 | 200 | 200 | 250 |
| வெண்டிக்காய் | 200 | 180 | 180 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 140 | 200 | 140 | 240 |
| லீக்ஸ் | 100 | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 100 | 80 |
| கறிமிளகாய் | 200 | 150 | 200 | 200 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 120 | 120 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | — | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 25 | 40 | 40 |
| தேசிக்காய் | 160 | 140 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 60-80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 240 | 180 | 160 |
| வெங்காயப்பூ | 120 | 120 | 120 | 120 |
| முள்ளங்கி | 60 | 80 | 100 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 100 | 20 | 30 |
| ஈரப்பலா | 130 | — | — | 100 |

## இராசிபலன்

**07.03.2021**
மாசி 23, ஞாயிற்றுக்கிழமை
நவமி முன்னிரவு 7.55 மணிவரை
மூலம் முன்னிரவு 11.46 மணிவரை
சுபநேரம் 9.25-10.55 மணிவரை
இராகுகாலம் 4.55-6.25 மணிவரை
சந்திராஷ்டமம் - கார்த்திகை, ரோகிணி
வளவன்


மேஷம்
பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வீட்டை அழகாக வைத்தி ருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள்.


ரிஷபம்
சிரித்துப் பேசும் நண்பர்களால் சில சிக் கல்கள் ஏற்படலாம், குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், சுப விரயங்கள் கூடும் நாள்.


மிதுனம்
நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், உடல் நலம் பற்றிய கவலை உருவாகி மறையும், போசன சுகமுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


கடகம்
சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், பல நாட்களாக செய்ய நினைத்த வேலை யொன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.


சிம்மம்
எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பிள்ளைகள் வழியில் பெருமைகள் கூடும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.


கன்னி
விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.


துலாம்
நீண்டநாளைய விருப்பமொன்று நிறை வேறும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


விருச்சிகம்
தொழில் வளர்ச்சி கூடும் நாள், நண்பர் களின் ஒத்துழைப்பால் நலம் காண்பீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு.


தனுசு
சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, சவால் களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.


மகரம்
குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்கள் ஏற்படலாம்.


கும்பம்
குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேர லாம், எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.


மீனம்
மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியா தையும் உயரும் நாள்,பெண் வழி ஒத்து ழைப்பு கிடைக்கும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

ஆயத்தம் செய்யாதவனுக்கு அனைத்தும் திடீர் மரணமே

# பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கை அரசியலில் இருந்து என்னை ஓரங் கட்டும் வகையில் பழிவாங் கும் வகையில் திட்டமிட்டு என் மீது அநாவசியமான பொய்யான குற்றச்சாட்டு க்களை முன்வைத்து உயி ர்த்த ஞாயிறு தினத் தாக்கு தலின் விசாரணை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் தலைவருமான மைத் திரிபால சிறிசேன குற்றஞ் சாட்டினார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக் குதல் விசாரணை அறிக் கையை அடியோடு நிரா கரிக்கின்றேன்.

உண்மைத் தகவல்கள் அதில் மறைக்கப்பட்டுள் ளன. எனது ஆட்சியில் இந் தத் தாக்குதல் நடைபெற்ற படியால் என் மீது திட்டமிட்டு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் தொடர் பில் முன்னரே நான் அறிந்திரு க்கவில்லை. அதேவேளை, இந்தத் தாக்குதல் நடக்கும் போது நான் நாட்டிலும் இருக் கவில்லை.

எனினும், தாக்குதல் சம்பவத்தை அறிந்தவுடனே நாடு திரும்பி எடுக்க வேண் டிய நடவடிக்கைகளை எடுத் திருந்தேன். தாக்குதலின் எதிரொலியாக இன ரீதியில் மத ரீதியில் அரங்கேறக் காத்திருந்த வன்முறை களைத் தடுத்திருந்தேன்.

விசாரணை ஆணைக் குழு முன் நடந்த உண் மைச் சம்பவங்களைத் தெரி வித்திருந்தேன். ஆனால், விசாரணை அறிக்கை அர சியல் ரீதியில் என்னைப் பழிவாங்கும் வகையில் வெளிவந்துள்ளது.

எனினும், எதற்கும் நான் அஞ்சவேமாட்டேன். நான் பொறுமையுடன் இருக்கின் றேன்.

உயிர்த்த ஞாயிறு தாக்கு தல் விசாரணை அறிக்கையை பல அரசியல் கட்சியினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பி னர் நிராகரித்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (நி.4,8)

# மேற்கு முனையத்தை அபிவிருத்தி செய்ய மறுத்தது இந்தியா

## இந்திய வெளியுறவுத்துறை



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை அபிவி ருத்தி செய்ய இந்தியா இணங் கியுள்ளதாக வெளியான கருத் தினை அந்நாட்டு வெளியுற வுத்துறை அமைச்சு உத்தி யோகபூர்வமாக மறுத்துள்ளது.

இலங்கையின் மேற்கு முனையத்தில் முதலீடு செய் வதற்கு அதானி நிறுவனத்தின் முன்மொழிவுக்கு இந்திய உயர்ஸ்தானிகராலயம் இணங் கியுள்ளதாக வெளியான செய் தியில் உண்மை இல்லை எனவும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சு சுட்டிக்காட்டியு ள்ளது.

இதேவேளை கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனை யத்தை 35 வருடகால ஒப்பந்த அடிப்படையில் ஜப்பானுடன் இணைந்து அபிவிருத்தி செய்ய இந்தியா இணங்கியுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச் சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாக வெவ்வேறுபட்ட கருத்துக்கள் வெளியானதை தொடர்ந்தே இந்திய வெளியுற வுத்துறை அமைச்சு இவ்வாறு மறுப்பு தெரிவித்துள்ளது. (நி-4)

# இறக்குமதி செய்யப்பட்ட 6000 வாள்கள்; விபரம் கோருகிறார் சட்டமா அதிபர்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தின தாக் குதல்களுக்கு முன்னர், தற் கொலை குண்டுதாரிகளில் ஒருவரான இன்சாப் அஹமட் என்பவரால் நாட்டுக்கு தருவி க்கப்பட்டதாக கூறப்படும் 6 ஆயிரம் வாள்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசார ணைகளின் நிலைமையை, பாதுகாப்பு செயலர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோ ரிடம் கேட்டறிந்து நீதிமன் றுக்கு அறிவிப்பதாக சட்டமா அதிபர் அறிவித்தார்.

சட்டமா அதிபர் சார்பில் அரசின் சிரேஸ்ட சட்டவாதி கலாநிதி அவந்தி பெரேரா இதனை மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு நேற்று முன் தினம் அறிவித்தார். ரிட் மனு நேற்று முன்தினம் பரிசீலனை க்கு எடுக்கப்பட்ட போதே அவர் இதனை அறிவித்தார்.

இந்த மனுவானது நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதிபதி அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயதுன்ன கொரயா ஆகி யோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் பரிசீலி க்கப்பட்டது.

இம்மனு மீதான மேலதிக பரிசோதனைகள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு ஒத்தி வைக் கப்பட்டது. (நி-4-8)

# சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் ஆராய்வு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறுகின்ற மணல் அகழ்வு, கிரவல் அகழ்வு, கருங்கல் அகழ்வு போன்ற கனிய வளங்களைப் பெற்றுக்கொள்கின்ற இடங்களிலே பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகளும் கனியவளங்களை அழிக்கக் கூடிய வகையிலும் பாரிய சூழலியல் பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படும் அளவிலும் பணிகள் இடம்பெறுகின்றன.

அபிவிருத்தி குழுக் கூட்டங்கள் மற்றும் ஏனைய கூட்டங்களில் பல தடவைகள் பொது அமைப்புகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலையில் குறித்த விடயங்கள் தொடர்பில் ஒரு சீரான ஒழுங்குபடுத்தலுக்குள் கொண்டு வரும் முகமாக குறித்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கைகளை நிறுத்தி அது தொடர்பில் மாவட்டத்தில் ஒரு குழு ஒன்றை அமைத்து அதனுடைய சிபார்சின் அடிப்படையில் இந்த விடயங்களையும் முன்னெடுப்பதாக தீர்மானித்த முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் காதர் மஸ்தான் குறித்த விடயம் தொடர்பில் ஆராயும் முகமாக மாவட்ட குழுவின் கலந்துரையாடலை நேற்று முன்தினம் நடத்தினார்.

சட்டவிரோத அகழ்வு மற்றும் அனுமதிப்பத்திரம் பெற்று அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறி இடம்பெறுகின்ற அகழ்வு நடவடிக்கைகள் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகள் எடுப்பது என்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

தொடர்ந்து தொடர்ச்சியாக முறைப்பாடு செய்யப்பட்ட சில இடங்களை நேரில் சென்று அதிகாரிகள் ஆராய்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

சிலாவத்தை மற்றும் உப்புமாவெளி பகுதிகளில் இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பிலும் அனுமதிப்பத்திரங்கள் பெற்று அனுமதிப்பத்திரத்துக்கு முரணான வகையிலும் இடம்பெறுகின்ற மணல் அகழ்வு தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை தொடர்ந்து குறித்த பகுதியில் சட்டபூர்வமாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட இடத்தில் எவ்வாறு அகழ்வு இடம் பெறுகின்றது என்பது தொடர்பிலும் சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெறுகின்ற சில இடங்களையும் அதிகாரிகள் நேரில் சென்று ஆராய்ந்தனர்.

இக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் புவிச் சரிதவியல் மற்றும் கனிய மணல் சுரங்கங்கள் பணியக (ஜி.எஸ்.எம்.பி.) பொறியியலாளர், காணி உத்தியோகத்தர்கள், பொலிஸ் உயர திகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(5,4,281)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் ஏழாலை தெற்கு ராஜ்குமார் கடைக்கு அருகிலுள்ள தனியார் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

எனவே, குருதிக் கொடை ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

## கண்டெடுக்கப்பட்டது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் மத்தியைச் சேர்ந்த விக்னகுமார் கோபிநாத் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் வாகனஅனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி அட்டை,வங்கி அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு வலம்புரி பத்திரிகை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எனவே உரியவர் இல.3, 2ஆம் ஒழுங்கை பிறவுண் வீதியிலுள்ள வலம்புரி அலுவலகத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளவும். (5-4-6)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை -தம்பசிட்டி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் 70 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் இன்று 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்6.30 மணியளவில்நிலைய மண்டபத்தில் தலைவர் சோ. கங்காதரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை நகரசபை செயலாளர் பு.ரமேஸ்வரன் மற்றும் புலோலி மத்தி ஜே/409 கிராம உத்தியோகத்தர் தினகரப்பிள்ளை ரங்கநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (5-4-8)

# பிரதேச சபையின் நடமாடும் சேவை

(குப்பிழான்)

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் இன்று 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை சுன்னாகம் அறிஞர் ஐயன்னா சனசமூக நிலையத்தில் ஜே/198, ஜே/199, ஜே/200 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிற்கான நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

பொதுமக்கள் மேற்படி நடமாடும் சேவை ஊடாக குப்பை அகற்றல் சேவை, ஆதனப் பெயர் மாற்றம், வியாபார உரிமம் பெறல், சுன்னாகம் பொது நூலகத்தில் அங்கத்தவராக இணைதல், சோலைவரி அறவீடு ஆகிய சேவைகளைப்பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4-18)

# விபத்தில் ஒருவர் காயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-புத்தூர் சந்திப் பகுதிக்கு அருகாமையில் ஏ9 வீதியில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஏ9வீதி வழியாக வந்து கிளை வீதிக்குள் நுழைய முற்பட்ட பட்டா வாகனமும் -கிளை வீதியால் வந்து ஏ9வீதிக்கு செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் விபத்து ஏற்பட்டது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-30)



வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் தொடர்ந்து நேற்று ஆறாவது நாளாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.எதிர்வரும் 8 ஆம் திகதிக்குள் தமக்கான தீர்வினை வழங்காத பட்சத்தில் தமது போராட்டம் உணவு தவிர்ப்பு போராட்டமாக மாற்றமடையும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# மகளிர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பிரான்ஸ் தமிழ் வானொலியும் பூமணி அம்மா அறக்கட்டளையும் இணைந்து நடத்தும் யாழ். பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சேவையாற்றும் மகளிரை கௌரவிக்கும் நிகழ்வு நாளை 8 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நெளுக்குளம் கண்டி வீதியிலுள்ள சர்வோதய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி றோய். றொபின்சன் சோபிகா தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக மகளிர் அமைப்பின் தலைவி ஸ்ரீபத்மநாதன் மிதுளாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்திறந்த வெளி பல்கலைக்கழக பதிவாளர் கந்தவேள், சர்வோதய இணைப்பாளர் இ.யுகேந்திரா, யாழ்.மாவட்ட செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.பஞ்சலிங்கம், மாவட்ட செயலக மகளிர் உத்தியோகத்தர் ந. உதயனி, பூமணி அம்மா அறக்கட்டளை அமைப்பின் செயலாளர் டாக்டர் இ.சற்குருநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (5-4-8)

# விவசாயம் மேற்கொள்ளக்கூடிய வயற்காணிகளை மக்களுக்குப் பகிர்ந்தளிக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு பனிக்கன்குளம், மாங்குளம், கிழவன்குளம், திருமுறிகண்டி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள வயல் காணிகளற்ற குடும்பங்களுக்கு வயல் காணிகளை வழங்குமாறு புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் செ.பிறேமகாந்த் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் போதே இக்கோரிக்கைகள் விடுக்கப்பட்டது.

குறிப்பாக மாங்குளம் பேராற்று வெளியில் காணப்படும் வயற்காணிகளை வனவளத்திணைக்களத்தினர் விடுவிக்கவேண்டும் எனவும் பனிக்கன்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள நாவிக் குளத்தின் கீழான வயற்காணிகளையும் கிழவன் குளத்தின் கீழ் காணப்படும் வயற் காணிகளையும் மற்றும் திருமுறிகண்டி குளத்தின் கீழ் விவசாயம் செய்யக்கூடிய வயற் காணிகளையும் மக்களுக்கு பகிர்ந்து வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நீண்டகாலமாக வயற்காணிகளின்றி விவசாயம் மேற்கொள்ள முடியாது வாழ்ந்து வருகின்ற மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் இது உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (5-4-350)

# கொழும்பில் வாகன விபத்து; ஒருவர் பலி, மூவர் படுகாயம்!



(கொழும்பு)

கொழும்பு - வெள்ளவத்தையில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர் என பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 5.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருகையில்.

மோட்டார் வாகனமொன்று வெள்ளவத்தை பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றை மோதித் தள்ளி வேகமாக தப்பிச் சென்ற போது மேலும் 3 பேர் மோட்டார் வாகனத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளனர். குறித்த சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு மேலும் 3 பேர் காயமடைந்துள்ளனர்.

குடிபோதையில் வாகனம் செலுத்தியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.

அதன்படி, இரவு விடுதியொன்றில் மது அருந்திவிட்டு வாகனத்தை செலுத்திய சாரதி உட்பட அதில் பயணித்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய

## குற்றவாளிகளை காப்பாற்றும் முயற்சியில் சட்டத்தரணிகள்

## தப்பிக்க முடியாது என்கிறார் வீரசேகர



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்ட பிரதான குற்றவாளிகள் எவரும் சட்டத்தில் இருந்து தப்பிக்க முடியாத வகையில் அவர்களுக்கு எதிரான சாட்சியங்களை பலப்படுத்தி வருகின்றோம்.

எந்தவகையிலேனும் அவர்களை விடுதலை செய்வதை தடுக்கும் சகல நடவடிக்கையும் முன்னெடுக்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

குற்றவாளிகளை காப்பாற்ற பிரபல்யமான சட்டத்தரணிகள் முன்வந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணை அறிக்கை தற்போது சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எட்டு இடங்களில் தற்கொலை குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது. இந்த இடங்கள் குறித்த பரிசோதனை அறிக்கையும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


குற்றவாளிகளை எக்காரணம் கொண்டும் விடுதலை செய்யமாட்டோம்.

தற்போது தடுப்புக்காவலில் உள்ள பிரதான குற்றவாளிகள் 32 பேருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபரை வலியுறுத்தியுள்ளோம்.

இவர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கில் ஏதேனும் சிறிய பலவீனத்தன்மை காணப்பட்டாலும் அதனை பயன்படுத்தி குற்றவாளிகளை காப்பாற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவிடும்.

எக்காரணம் கொண்டும் இவர்கள் தப்பிக்கவே கூடாது. இவர்களை விடுதலை செய்து மீண்டும் பிரச்சினைகளை உருவாக்க நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# வாகன விபத்தில் சிக்கி 12 பேர் காயம்



(கொழும்பு)

கொழும்பு- பதுளை பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 12 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்று சனிக்கிழமை காலை, பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்து ஒன்று, எல்ல- ஹல்பே பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள், தெமோதரை மற்றும் பதுளை வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்ல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-4)

# கொரோனாத் தொற்றுடன் பரீட்சை எழுதும் மாணவர்கள்



(கொழும்பு)

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் கொவிட் தொற்றிய 55 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எதுவித பிரச்சினையும் இன்றி நடைபெறுவதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப் பரீட்சையில் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்ட 55 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். இவர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார் (நி-4)

# நீர் மின் உற்பத்தி நிலையத்தில் கொரோனா

(கொழும்பு)

லக்ஷபான நீர் மின் உற்பத்தி நிலைய வளாகத்தில் ஊழியர்கள் 10 பேருக்கு கொவிட்-19 வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையிலேயே ஏனைய 7 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (நி-4)

# தடுப்பூசியை பெற்றார் சவேந்திர சில்வா




(கொழும்பு)

இராணுவத் தளபதியும் கொவிட் ஒழிப்பு செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று சனிக்கிழமை கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக் கொண்டார்.

கொழும்பில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் வைத்து அவர் இதனைப் பெற்றுக்கொண்டார்.

இலங்கையில் கொவிட் தடுப்பூசி வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஒன்றரை மாதங்களுக்குப் பின்னர் இராணுவத் தளபதி தடுப்பூசியை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)



இலங்கையில் தமிழ் மக்களுக்கு முன்னெடுக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச ரீதியில் நீதிவேண்டி வடகிழக்கில் முன்னெடுக்கப்படும் சுழற்சி முறையிலான போராட்டம் மட்டக்களப்பிலும் 4 வது நாளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# சிலிண்டரின் விலையை அதிகரிக்க கோரிக்கை



(கொழும்பு)

எரிவாயு சிலிண்டரின் விலைகளை அதிகரிக்க இரு உள்நாட்டு நிறுவனங்கள் நுகர்வோர் அதிகார சபையிடம் கோரியுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலையில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் குறித்த இரண்டு எரிவாயு விநியோக நிறுவனங்களின் கோரிக்கை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டார். (நி-4)

# கைது செய்யப்பட்டவரின் வீட்டில் கஞ்சா பொதிகள் மீட்பு

(நெளுக்குளம்)

வவுனியா மகாரம்பைக் குளம் ஸ்ரீராமபுரம் பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்த மாசிமாதம் 05 திகதி வவுனியா ஹெப்பற்றிகொலாவ விசேட படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து ஈரட்டை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கி பட்டா வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட 18 கிலோ 270 கிராம் கஞ்சா பொதியினையும், அதனை கடத்தி சென்ற மூவரையும் ஹெப்பற்றி கொலாவ விசேட அதிரடிப டையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரிடமும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் மகாரம்பைகுளம் ஸ்ரீராமபுரத்தை சேர்ந்த ஒருவரின் வீட்டில் மேலதிகமான கஞ்சா பொதிகள் மறைத்து வைக்கப்பட்டு இருப்பதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் வழங்கிய தகவலினை அடுத்து நேற்று முன்தினம் ஸ்ரீராமபுரத்தில் அமைந்துள்ள குறித்த நபரின் வீட்டில் ஈரட்டை பொலிஸார் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 6 கிலோ 540 கிராம் கஞ்சா பொதியினை மீட்டுள்ளனர். (5-4-299)

# மன்னாரில் 138 குளங்கள் புனரமைக்க நடவடிக்கை



(மன்னார்)

"நீர்ப்பாசன செழிப்பு" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய விவசாயக் குளங்கள் மற்றும் அணைக் கட்டுகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் நேற்று சனிக்கிழமை காலை மன்னார் மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் சுமார் 138 குளங்களை மறுசீரமைப்பு செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள தாராபுரம்கோரைக்குளம் மறுசீரமைப்பு பணிகள் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் குறித்த அபிவிருத்தி பணிகளை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமேல், மன்னார் பிரதேசச் செயலாளர், நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர், மன்னார் மாவட்ட திட்டமிடல் உதவித் திட்ட பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், கமநல அபிவிருத்தி ஆணையாளர், பிரதம பொறியியலாளர், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். (5-285)

# இடியன் துப்பாக்கியுடன் இளைஞன் கைது

(நெளுக்குளம்)

வவுனியாவில் சட்டவிரோத துப்பாக்கியுடன் இளைஞன் ஒருவரை விஷேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

புளியங்குளம் விசேட அதிரடி படையினரிற்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட நடவடிக்கையின் போது வவுனியா பாலமோட்டை வயல் பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்ற இளைஞனிடம் சோதனை மேற்கொண்ட போது குறித்த இளைஞனிடமிருந்து சட்டவிரோத இடியன் துப்பாக்கி கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட துப்பாக்கியையும் இளைஞனையும் அதிரடிப்படையினர் ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக ஓமந்தை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (5-4-299)




# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(நெளுக்குளம்)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் அதிபர் ஆ.லோகேஸ்வரன் தலைமையில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. பொதுக்கூட்டத்திலும் புதிய நிர்வாக தெரிவிலும் மாணவர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை பாடசாலையில் பழைய மாணவர் சங்கத்தால் மேற்கொள்ளப்படவுள்ள எதிர்கால திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தனிநபர் பிரேரணைகள் இருப்பின் அவற்றை 12.03.2021 இற்கு முன்னர் பாடசாலை அதிபரின் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (5-4-299)

# 90 ஆயிரம் கிலோ விதை உழுந்து இதுவரை கொள்வனவு

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் இதுவரை 90 ஆயிரம் கிலோ விதை உழுந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக விவசாயத்திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

விதைப்பு தேவைக்காக சுத்திகரிக்கப்பட்ட ஒரு கிலோ உழுந்து 890 ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்படும் என வவுனியா விவசாயத திணைக்களம் அறிவித்திருந்தது.

அந்தவகையில் திணைக்களத்தில் விதைஉற்பத்தி திட்டத்திற்கும் சாதாரண தேவைக்குமாக விதை உழுந்தினை கொள்வனவு செய்த விவசாயிகளிடம் இருந்து குறித்த உழுந்து மீண்டும் கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது.


அதனடிப்படையில் கொள்வனவு செய்யப்படும் உழுந்து தரம்பிரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட ஒரு கிலோ உழுந்து 830ரூபாய் தொடக்கம் 890 ரூபாய் வரை கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது.

இதுவரை 90 ஆயிரம் கிலோ உழுந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், அது சேமிக்கப்பட்டு விதைப்பு தேவைக்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிற்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-299)

# வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் "ஒரு வங்கி ஒரு கிராமம்" செயற்றிட்டம்

(மன்னார்)

வட மாகாண ஆளுநரின் சிந்தனைக்கு அமைவாக ஒரு வங்கி ஒரு கிராமம் எனும் கருப்பொருளில் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள சாளம்பன் கிராமத்தில் வறிய மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் தேசிய செயற்றிட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.




மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில் மக்கள் வங்கியின் பங்களிப்புடன் குறித்த தேசிய செயற்றிட்டத்தினை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

வறிய மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் தேசிய செயற்றிட்டத்திற்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கடன் அடிப்படையில் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டது.

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உட்பட வறிய மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையிலும் அவர்களின் சுய தொழில் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையிலும் குறித்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-285)

# யானைகளின் அட்டகாசத்தால் நெல்மூடைகள் சேதம்



(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கண்டாவளை கோணங்குளம் விளாவோடை முரசுமோட்டை ஆகிய பகுதிகளில் அண்மைக் காலமாக காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

நேற்றிரவு கண்டாவளை கோணங்குளம் பகுதியில் அறுவடை செய்து உலரவிட்டு குவிக்கப்பட்டிருந்த நெல் மற்றும் மூடைகளாக கட்டப்பட்டிருந்த நெல்லையும் உட்கொண்டுடன் மூடைகளைசேதப் டுத்தியும் தூக்கி வீசியு முள்ளன.

இதனால் பல லட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (5-4-315)

எப்போதும் தோல்வியைப்பற்றி நினைத்தால் தோல்வி நம்முடையதாகி விடுகிறது! எதையும் தீர்மானிக்காமல் இருந்தால் எந்த மாற்றமும் ஏற்படாது.
– மகரிஷி மகேஷ்யோகி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர் தாயகம் எங்கும் விவசாயப் புரட்சி ஏற்பட வேண்டும்

தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என இந்த நாட்டில் வாழும் மூவின மக்களின் வாழ்வியல் முறைகள், அவர்களின் தொழில் முயற்சிகள், பண்பாட்டு அம்சங்கள், கல்வி மற்றும் சமூக பொருளாதார நிலைமைகள் என்பவற்றை எடுத்து நோக்கும்போது, தொழில்சார் முயற்சிகளில் நம் தமிழ் இனம் பின்னடை வில் இருக்கிறது என்பதை இங்கு கூறித் தானாக வேண்டும்.

அதாவது சிங்கள முஸ்லிம் மக்கள் ஏதோவொரு தொழில் முயற்சியில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடியும்.

அதாவது வேலையில்லை என்ற பிரச்சினை சிங்கள, முஸ்லிம் மக்களிடம் இல்லை என்று கூறுமளவுக்கு அவர்கள் ஏதாவ தொரு தொழில் முயற்சியைத் தெரிந்தெடுத்து அதனைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

அவர்களிடம் தொழிற்பேதமைகள் எதுவும் கிடையாது. அதுபற்றிய விமர்சனங்களும் அந்த மக்கள் மத்தியில் இல்லை.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் தாம் செய்கின்ற வேலை கௌரவம் மிக்கதாக இருக்க வேண்டும்.

இல்லையேல் மற்றவர்கள் தம்மை விமர்சிப்பார்கள் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

இதனால் தமிழர் தரப்பில் வேலை எதுவும் இல்லை என்று இருக்கக்கூடியவர்கள் அதிகம் என்றே கூற வேண்டும்.

இப்போதெல்லாம் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்கள் ஆற்றுகின்ற தொழில் முயற்சிகளைப் பார்க்கும்போது அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆம், வட பகுதியில் கிடைக்கக்கூடிய பழைய இரும்புகள், தகரங்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் என்பவற்றை மிகக் குறைந்த விலைக்கு வாங்கி அவற்றை கொழும்புக்கு அனுப்பி வைத்த வண்ணமுள்ளனர்.

முஸ்லிம்களின் இந்த வியாபாரத்தால் அவர்கள் வாழுகின்ற யாழ்ப்பாணம் அராலி வீதி, பொம்மைவெளிப் பகுதிகள் வியாபாரத் தளமாக, பழைய இரும்புப் பொருட்களின் விற்பனை நிலையமாக மாறியிருப்பதை அவதானிக்க முடியும்.

இதனால் முஸ்லிம் மக்களில் எவரும் வேலையில்லாமல் இல்லை என்ற அளவில் கடும் முயற்சி உடையவர்களாக இருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேறிய சிறிது காலத்துக்குள் மிகப்பெரிய தொழில் முயற்சிகளை அவர்கள் இங்கு கணிசமாக நிறுவியுள்ளனர்.

இதேபோல வடபுலத்துக்கு வந்து வியாபாரம் செய்கின்ற சிங்கள மக்களைப் பார்க்கின்றோம்.

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திப் பகுதியில் மரக்கறி வியாபாரத்தை முழுநேரமாகச் செய்கின்ற சிங்கள சகோதரர். யாழ்ப்பாணம் இராசபாதையில் நிறுவனம் அமைத்து அங்கு சுத்திகரிப்பு குடிநீரைத் தயாரித்து அதனை வீடு வீடாகக் கொண்டு சென்று விநியோகிக் கின்ற சிங்கள இனத்தவர்.

தளபாடங்களைத் தோளில் சுமந்து விற்பனை செய்கின்ற தென்பகுதி மக்கள் என்று பார்க்கும்போது எங்களிடம் தொழில் முயற்சிகள் மந்தமாக இருக்கின்றன என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இப்பெரும் குறையை உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டுமாயின், விவசாயப் புரட்சியை அதிரடியாக ஏற்படுத்துவதே ஒரே வழியாகும்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உணர்வு பூர்வமாகச் சிந்தித்தால், தமிழர் தாயகத்தில் விவசாயப் புரட்சி பெரும் சாதனை படைக்கும்.

## வவுனியாவில் சில கிராமங்களில் தகவல் சேகரிக்கும் இராணுவத்தினர்

### அச்சத்தில் பொதுமக்கள்

(வவுனியா)

வவுனியாவில் சில கிராமங்களில் இராணுவத்தினர் குடியிருப்பாளர்களின் விபரங்களை சேகரித்து வருவதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

வவுனியா புதியவேலர் சின்னகுளத்தில் கடந்த இரண்டு நாட்களாக வீடுவீடாக செல்லும் நான்கு இராணுவத்தினர் இவ்வாறான பதிவு மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் இப் பதிவின்போது குடியிருப்பாளர்களிடம் வாழ்வாதாரம் தரப்போகின்றோம் என இராணுவத்தினர் தெரிவிப்பதாகவும் வீட்டில் வசிப்பவர்களின் பெயர், அடையாள அட்டை இலக்கம், வயது, தொலைபேசி இலக்கம் என்பனவும் கோரப்படுவதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய சூழலில் இராணுவத்தினரால் இவ்வாறு தகவல் சேகரிக்கப்படுகின்றமை தொடர்பில் தமக்கு அச்சமான நிலை காணப்படுவதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

(ம-3-299)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய "சொல்விளையாட்டு விளையாடுவோம்" கையெழுத்துப் பிரதி நூல் வெளியீட்டு விழா தமிழி அமைப்பின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணிக்கு யாழ். பொது நூலகத்தில இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு ஆறுதல் அமைப்பின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ம-3)

## முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப்பெறவே ஜனாஸாக்களை அரசு அடக்கம் செய்கிறது

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கண்டாவளை)


முஸ்லீம் மக்களின் ஜனாஸாக்கள் தொடர்பில் இலங்கை அரசு கடும்போக்கு சிங்கள மக்களை மக்களைத் திருப்திப்படுத்த செய்த ஒரு விடயமே தவிர இது விஞ்ஞான ரீதியான பிரச்சினை இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ .சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இரணைதீவில் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் நேற்று நேரில் சென்று நிலைமைகளை பார்வையிட்டுள்ளதுடன் அங்கு போராட் டத்தில் ஈடுபட்டிருந்த மக்களுடனும் மக்கள் மற்றும் பங்குத்தந்தை ஆகியோருடனும் கலந்துரையாடியுள்ளனர். இதன்போது கருத்து தெரிவித்த சுமந்திரன் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை கிளிநொச்சி இரணைதீவில் அடக்கம் செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த மக்களால் நான்காவது நாளாகவும் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த இரணைதீவு பிரதேசத்திலே பூர்வீக நிலத்திற்கு திரும்ப வேண்டும் என்று பாராளுமன்றத்தில் குரல் கொடுத்து அதை பிரேரணைகளாக கொண்டுவரப்பட்டது. தமிழ் மக்கள் எவ்வளவு தான் நசுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டாலும் தொடர்ச்சியாக தங்களது உரிமைகளுக்காக எழுந்து நிற்பார்கள் என்பதற்கு இந்த இரணைதீவு மக்களுடைய பிரயத்தனமும் வெற்றியும் சான்றாக அமை கின்றது. இங்கு வந்து மக்கள் குடியேறினாலும் வாழ்வதற்குரிய அடிப்படை வசதிகள் இல்லை. வசதிகளை பெற்றுத் தருவதற்கு தொடர்ந்தும் பல முயற்சிகளை நாங்கள் பல வழிகளிலும் முன்னெடுத்து வருகின்றோம். முஸ்லிம்களுடைய ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு எந்த விதமான விஞ்ஞானரீதியான பிரச்சினைகளும் இல்லை உலக நாடுகளிலேயே தொற்று காரணமாக உயிரிழக்கின்றனர்.இவ்வாறு உயிரிழப்பர்கள் உலகில் 188 நாடுகளில் புதைப்பதற்கான அனுமதிகள் கொடுத்திருந்தபோதும் இதனை ஒரு இனவாத செயலாக இலங்கை அரசாங்கம் தடுத்து இருக்கின்றது.

அதாவது கடும் போக்கு சிங்கள மக்களைத் திருப்திபடுத்த செய்த ஒரு விடயமே தவிர இது விஞ்ஞான ரீதியான எந்த பிரச்சினைகளும் இல்லை. இவ்வாறான இனவாத போக்கை கொண்டிருந்த இலங்கை அரசு ஐ.நா சபையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டு வரப்படுகின்ற காரணத்தினால் தான் ஜனாஸாவை அடக்கம் செய்யும் எண்ணத்தை இலங்கை அரசாங்கம் திடீரென மாற்றிக் கொண்டது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3.315)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



### கடவுள் வழிநடத்துவார்

❖பிரசித்தி பெற்ற பாடகர் சாங்க்கியுடன் அவருடைய மகன் நடந்து சென்றான். அவனுக்கு தான் அணிந்திருந்த கோட்டின் மேல் அளவில்லாத ஆசை. இரண்டு கைகளையும் கோட் பைக்குள் திணித்துக் கொண்டு பெருமையாக நடந்தான்.

❖தகப்பனார் சொன்னார், ""மகனே! மழை பெய்து ஈரமாய் இருக்கிறது. உன் கால்கள் சறுக்கலாம். என் கைகளைப் பிடித்துக் கொள்"" என்றார். ஆனால், சிறுவனோ கோட் பையிலிருந்து தன் கைகளை எடுக்கவில்லை. ஸ்டைலாக நடந்து வந்தான்.

❖திடீரென்று சரளைக் கற்கள் சிறுவனின் கால்களை வாரிவிட்டன. தடுமாறிய அவன் கீழே விழுந்ததால் பலத்த அடிபட்டான். முழங்காலில் ரத்தம் பீறிட்டது. அன்று அவன் ஒரு அருமையான பாடத்தைக் கற்றுக் கொண்டான். பலமுள்ள தன் தகப்பனின் உறுதியான கரங்களைப் பற்றிப் பிடித்து நடக்க தீர்மானித்தான்.

❖கர்த்தர் நம்மை நடத்துகிறார். நித்தமும் நம்மை நடத்துகிறவர்.(ஏசா.58:11) மரணப் பரியந்தமும் நடத்துகிறவர்(சங்:48:14) ஜீவ தண்ணீருள்ள ஊற்றுகள் அண்டைக்கு அவருடைய கரங்களைப் பிடித்து நடப்பது எவ்வளவு பெரிய பாக்கியம்!

# சோமாலியாவில் தற்கொலைத் தாக்குதல் 20 பேர் உயிரிழப்பு, 30 பேர் படுகாயம்



(மொகாடிஷூ)

சோமாலியாவில் நடத்தப்பட்ட தற்கொலை கார் குண்டுத்தாக்குதலில் 20க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததோடு 30பேர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் மொகாடிஷூவில் துறைமுகத்திற்கு அருகிலுள்ள உணவகத்திற்கு வெளியே நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

துறைமுகத்திற்கு அருகிலுள்ளலுல் யேமன் உணவகத்தில் குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது. (நி-4)

## நியூசிலாந்தில் மீண்டும் நிலநடுக்கம்

(வெலிங்டன்)

நியூசிலாந்தின் வடக்கு பகுதியில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.4 ஆக பதிவாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த சில நாட்களுக்கு முன்னர் நியூசிலாந்தில் 8 மணித்தியாலத்திற்குள் 3 மிகப்பெரும் சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள் பதிவாகியிருந்த நிலையில், சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஈராக் சென்றடைந்தார் போப் பிரான்சிஸ்




(பக்தாத்)

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் பாப்பரசர் பிரான்சிஸ் ஈராக்கிற்கு முதல் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

ஈராக்கின் பிரதமர் முஸ்தபா அல் காதிமி போப்பாண்டவரை விமான நிலையத்தில் வரவேற்றார்.

இந்த பயணத்தில், நாட்டின் உயர் அரசியல் மற்றும் மத அதிகாரிகளுடனான சந்திப்புகளும் இடம்பெறும். குறிப்பாக ஈராக்கின் மிகவும் மதிப்பிற்குரிய ஷியா முஸ்லிம் மத குருவை சந்திப்பார்.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து பாப்பரசர் பிரான்சிஸின் முதல் சர்வதேச பயணம் இதுவாகும்.

போப்பின் இந்த முதல் பயணம், வத்திக்கான் தனது முன்னோர்களைத் தவிர்த்த ஆபத்தான பயணம் என விபரிக்கப்பட்டுள்ளது. (நி-4-8)



உலகிலேயே மிகப்பழைமையான டைனோசர் வகைகளில் ஒன்றான நிஞ்ஜாட்டியன் சபாடாய் என்ற வகையை சேர்ந்த டைனோசரின் தொல்பொருள் புதைபடிவத்தை ஆர்ஜெண்டீனாவில் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர் என்று ஆராய்ச்சி எழுத்தாளரான பப்லோ கல்லினா தெரிவித்தார். இந்த டைனோசர்கள் 140 மில்லியன் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்துள்ளதாகவும் இதுவே முதன்முதலில் அழிந்துபோன டைனோசர் வகை எனவும் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

# டில்லி விவசாயிகள் போராட்டம் அட்டைப் படமாக வெளியிட்டது அமெரிக்க டைம் நாளிதழ்




(வோஷிங்டன்)

மத்திய அரசு அமுல்படுத்தியுள்ள வேளாண் சட்டங்களுக்கு எதிராக டில்லியில் விவசாயிகள் நடத்தி வரும் போராட்டம் நூறு நாட்களை எட்டியுள்ளது.

இந்தியாவில் பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு கொண்டு வந்துள்ள வேளாண் சட்டங்களை வாபஸ் பெறக்கோரி, டில்லியை முற்றுகையிட்டு விவசாயிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். விவசாயிகளின் போராட்டத்திற்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

விவசாயிகள் போராட்டம் நேற்று முன்தினத்துடன் 100-வது நாளை எட்டியது. போராட்டக் களத்தில் இதுவரை 20-க்கும் அதிகமான விவசாயிகள் உயிரிழந்துள்ளனர்.

விவசாயிகள் சங்கத்தினருக்கும், மத்திய அரசுக்கும் இடையே நடந்த 11 சுற்றுப் பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில், பிரபல அமெரிக்க இதழான டைம் பத்திரிகையின் மார்ச் மாதத்திற்கான இதழின் அட்டைப்படத்தில் டில்லி திக்ரி எல்லையில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண்களின் படம் இடம் பெற்றுள்ளது. விவசாயிகள் போராட்டத்தின் முன்னணி வீரர்கள் என குறிப்பிடப்பட்டு இந்தப் படம் வெளியாகியுள்ளது.

போராட்டத்தில் பெண்கள் பங்குபெற வேண்டாம் என்கிற உச்ச நீதிமன்றத்தின் பரிந்துரையையும் மீறி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண்களைக் குறித்து டைம் இதழ் இந்த அட்டைப்படத்தை வெளியிட்டுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (நி-4)

# விமான கடத்தல் முயற்சி முறியடிப்பு




(டெஹ்ரான்)

ஈரானில் பயணிகள் விமானத்தைக் கடத்த மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக இஸ்லாமியப் புரட்சிகர பொலிஸார் அறிவித்துள்ளனர்.

ஈரான்-ஏர் நிறுவனத்திற்குச் சொந்தமான IA-334 ஃபோக் கர் 100 பயணிகள் விமானம் அஹ்வாஸ் விமான நிலையத்தில் இருந்து மஷாத் நோக்கி கடந்த வியாழக்கிழமை இரவு 10.22 மணிக்கு புறப்பட்டுச் சென்றது.

விமானத்தில் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் இருந்துள்ளார். இதனையடுத்து புறப்பட்டுச் சென்ற விமானம் ஈரானில் உள்ள இஸ்ஃபாஹான் விமான நிலையத்தில் அவசர அவசரமாகத் தரையிறங்கியது. சந்தேக நபர் குறித்து ஈரான் புரட்சிகர பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து தரையிறங்கிய விமானத்தில் இருந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டு அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையில் விமானத்தைத் திசைதிருப்பி அதனைக் கடத்த முயன்றாக சந்தேகநபர் ஒப்புக்கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-4)

## பொலிஸ்...

இந்தச் சம்பவம் கிளிநொச்சி - பரந்தன் இடையே வயல்வெளிப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மேரி ஜாக்சன் அன்ரனி (வயது-30) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் கிளிநொச்சியிலிருந்து பரந்தன் நோக்கிப் பயணித்த போது மாடு ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார் என்று ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3,60,315,316)

## ஓட்டமாவடியில்...

கொரோனா தொற்று மூலம் மரணித்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு சிபார்சு வழங்கப்பட்டுள்ள நிலையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய இரு தினங்களில் மாத்திரம் கொரோனாவினால் மரணித்தவர்களின் பதினாறு ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டதாக சுகாதார திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ம-3)



















## இரணைதீவில்...

தரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இரணைதீவில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களை நேற்று பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சிறீதரன் ஆகியோர் நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சிறீதரன், ஜெனிவா பிரேரணையை செயலிழக்க செய்வதற்காகவே அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

ஆகவே அரசாங்கத்தின் இந்த பிரித்தாளும் சூழ்ச்சியை தமிழர்களும் முஸ்லிம்களும் நிதானமாக கையாள வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.(ம-3)

## மன்னாரில் ரயிலு...

பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

மன்னாரில் நேற்றுக் காலை தொடருந்துடன் மோதுண்டு உயிரிழந்த 58 வயதுடைய ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவரது சடலத்தில் அன்டிஜன் பரிசோதனை செய்யப்பட்டபோது தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.

அதனையடுத்து பிசிஆர் பரிசோதனையும் செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிசுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட அக்கராயன் குளத்தில் இருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் இருவரும் மல்லாவியில் இடம்பெற்ற இறுதிச்சடங்கு ஒன்றுக்கு சென்று திரும்பிய நிலையில் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள்" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33)

## பெண் ஊடக...

தெய்வேந்திரமுனையிலிருந்து பருத்தித்துறை வரை நடந்து வருவதாக கூறி, சிலர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்குள் நுழைந்துள்ளனர்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அரசு மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது, தமிழ் தரப்பினர் மீதே நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோசமிட வேண்டுமென கூட்டத்தில் கலந்து கொண்டவர்களிற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள், ஆர்ப்பாட்டத்தில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த பெண் ஊடகவியலாளரை பொது வீதியில் வைத்து மிரட்டியுள்ளனர்.

இச் சம்பவம் இடம் பெறும்போது பொலிஸாரும் அருகில் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## இலங்கையில்...

அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு கட்சியின் தலைவர் வி.முத்துசாமியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது முத்துசாமி மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை பாரதிய ஜனதாக் கட்சி என்ற புதிய அரசியல் கட்சி ஒன்றை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். இந்தக் கட்சி அரசியல் என்ற முன்னிலைப்படுத்தாது. அந்த அரசியலுக்கு தமிழ் பேசும் மக்களை தயார்ப்படுத்தும் அல்லது பக்குவப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்கும்.

இலங்கை பாரதிய ஜனதாக் கட்சியின் சேவை ஒரு மதத்துக்கான சேவையாக இருக்காது அனைத்து இனங்களிலும் புறந்தள்ளப்பட்டவர்களை சமூகத்தில் உயர்த்தும் கட்சியாக செயற்படும் என்றார். (ம-3,33)

## இலங்கைக்கு...

பங்களாதேஷும் தென்கொரியாவும் மனித உரிமை பேரவையின் இம்முறை அமர்வில் வாக்களிக்கும் தகுதி பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வாக்குறுதிகளை...

என்றும் அதன் பின்னரே விடுதலை புலிகள் உருவாகியது என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கை அரசின் இணை அனுசரனையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத் தில் இருந்து விலகுவதாகவும் மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையை நிராகரிப்பதாகவும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்திருந்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வில் அவர் தெரிவித்த கருத்து தொடர்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போதைய நிலைமையில் எந்த ஒரு விடயத்திலும் அரசாங்கம் விடுதலைப் புலிகளை காரணம் காட்டிக் கொண்டு இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## கொரோ...

றுக்கு உள்ளாகி மேலும் 4 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தினார்.

அதன்படி நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 497 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## அரசி...

வில்லை என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அரசுக்குள் இருக்கும் சில விஷக் கிருமிகள் அப்புறப்படுத்த வேண்டும் என்பது எமது பணிவான கோரிக்கை" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(ம-3)

## சர்வதேசத்தை...

டும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், இலங்கை அதனை எவ்வாறு கையாள வேண்டும் என்பது குறித்தும், தேசிய ரீதியில் முன்னெடுக்க வேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்தும் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் புதிய ஒரு பிரேரணையை இலங்கைக்கு எதிராக முன்வைத்து வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்த வாக்கெடுப்பில் எம்மால் வெற்றி கொள்ள முடியுமா? என தெரியவில்லை. ஆனால் இந்தப் பிரேரணையின் பின்னர் இலங்கைக்கு பாரதூரமான விளைவுகள் ஏற்படப் போகின்றது என்பது மட்டும் தெளிவாக தெரிகின்றது.

மீண்டும் இந்த அரசாங்கம் தன்னிச்சையான தீர்மானங்களை எடுப்பதாக கூறி மேற்கொள்ளும் நடவடிக்கைகள் காரணமாக, நாட்டுக்கு எதிரான மோசமான பொருளாதார தடைகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது என்றார். (ம-3)


















## காணி விற்பனைக்கு

யாழ். கோப்பாய், நாவலர் பாடசாலைக்கு அருகாமையில்
4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)
( 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட காணி 14 அடி பாதையுடன் )
பருத்தித்துறை வீதியில் இருந்து 40 மீற்றர் நடை தூரம்.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.( தரகர் தேவையில்லை.)
நேற்று 06.03.2021 பத்திரிகையில் 4 பரப்பு என்பதற்கு பதிலாக 6 பரப்பு என தவறுதலாக பிரசுரமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6035)

**077 596 3845, 076 640 0974**

## வேலை வாய்ப்பு

எவரஸ்ட் நிறுவனத்துக்கான Administration பதவி வெற்றிடம் உள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
**தகுதி : MS Office, XL, Customer Care**
மேற்படி தகுதியுடையவர்கள் நிறுவனத்தின் நேர்முக பரீட்சைக்குத் தோற்றலாம். (6050)

**077 077 1377**

## வேலைவாய்ப்பு!

### GRAPHIC DESIGNER
(கிராபிக் டிசைனர்)
தகைமைகள்:
- Photoshop, Illustrator, Corel Draw, Indesign போன்ற மென்பொருட்களில் திறன் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
- முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

Indesign மென்பொருளில் (புத்தக வேலைகள்) அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.


### MARKETING EXECUTIVE
(விற்பனை உதவியாளர்)
தகைமைகள்: (6046)
- A/L சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
- முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**WE NEED WEBSITE & FACEBOOK MAINTAINER**

புதன்கிழமை (10.03.2021) காலை 9.30 மணிமுதல் மதியம் 12.30 மணிவரை நேர்முக தேர்வு நடைபெறும்.
நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:
ANDRA ADVERTISING (PVT) LTD.
379, Kasthuriyar Road, Jaffna.
0776622981 | 0777481696

## ST. ANTONY'S COMPUTER

189, K.K.S Road, Jaffna Town. 021 222 4865 / 0750698608




(C-1604)
Pioneer SECU
PINNACLE OF RELIABILITY FOR A SAFER WORLD
4 Chennal DVR
5MP Camara*4
21500/- Olny

## வேலை வாய்ப்பு

சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ் வரும் வேலையாட்கள் தேவை.
- சப்பிளையர் ( உணவு பரிமாறுபவர்கள் )
- பொதியிடுவோர்
- சமையல் உதவியாளர்கள்
- தோசை போடுபவர்கள்
- பில் கிளாக்
- சுத்திகரிப்பாளர்
- இடியப்பம் போடுபவர்
- மரக்கறி வெட்டுபவர் ஆண் / பெண் இருபாலாரும்
- காசாளர் ( தங்கி நிற்க கூடியவர்கள் )
- கணக்காளர் ( காலை 8 மணி தொடக்கம் மாலை 7மணி வரை )

( 35-50 வயது வரை ) (6012)

பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
**077 791 7753, 021 222 2373**

## மணமகள் தேவை

1987, இந்து கௌரவ குடும்பம் சொந்த இடம் வவுனியா, London இல் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு (6049)
**077 506 8819**

## வேலையாட்கள் தேவை

பேக்கரி வேலைக்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை. (6053)
**075 519 9720**

## வேலையாட்கள் தேவை

வன்னியில் இயங்கும் உணவகத்திற்கு வேலையாட்கள் தேவை.
( சமையல், ரொட்டி, உபசரிப்பாளர் ) (C-1623)
**077 171 1215**

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்)

(C-1606)
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**

எமது கிளைகள்
கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

- பயிற்சிக்கால கொடுப்பனவு -10'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777068777
v2vacancies@gmail.com

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- புத்தூர்
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- மானிப்பாய்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி

(C-1546)
0768226240 DHL

## அன்னா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-1548)

976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் திருமதி. பிரியதர்சினி வாகீசன் அவர்களின் அன்பு மாமியார்
**அமரர்**
### அழகம்மா பொன்னையா
அவர்கள் 02.03.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (C-1624)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

## கறையான்களைக் கட்டுப்படுத்தல்
## TERMITE TREATMENT



பழைய கட்டடங்கள், புதிய கட்டடங்களை கறையான் களிடமிருந்து முற்றாகப் பாதுகாக்க



( உத்தரவாதத்துடன் ) (6052)
ஆலோசனையும் மதிப்பீடும் இலவசமாக வழங்கப்படும்.
**077 151 5897**

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர் க. சயந்தன் அவர்களின் அன்புத் தாயார்
**அமரர்**
### கந்தசாமி பவானி
அவர்கள் கடந்த 05.02.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (C-1625)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

## விற்றுத் தீர்த்தல்

பூ கற்கள், தூண்கள், தூக்கம் போன்ற கொங்கிறீற் பொருட்கள் 50% விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.



சகல அச்சுக்களும் விற்பனைக்குண்டு.
**அம்மன் வீதி, திருநெல்வேலி.** (6051)
தனங்காவில் பிள்ளையார் கோவில் அருகில்
☎-077 757 0150, 077 900 9541

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 299

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 07.03.2021 தொலைபேசி : 021 222 3378







## வையகம் எல்லாம் தமிழர் எழுச்சி...




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திற்கு அமைச்சர் டக்ளஸ் வரவேணுமாம்

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி அவர்களின் தந்தையார் தங்கமுத்து அவர்கள் காலமாகிவிட்டார். அவ ரின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் என்று கூற அனைவரும் மீண்டும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

விதானையார் விசுவலிங்கம் ஆழ்ந்த யோசனையில் இருந்தார்.

இதனை அவதானித்த கங்காணி கார்த்திகேயன் என்ன விதானையார் ஒரு மாதிரியாக இருக்கிறியள் என வினவினார்.

**விதானையார்:** எனக்கென்ன யோசனை எல்லாம் ஐ.நா. எடுக்கப் போகிற தீர்மானம் பற்றித்தான்.

**பண்டிதர்:** உண்மைதான். ஐ.நா. பேரவையில ஒரு சரியான தீர்மானம் எடுக்கப்படா விட்டால், தமிழ் மக்களின்ர எதிர்கால நிலைமை மோசமாகத்தான் போகும்.

**மூப்பர்:** இலங்கை அரசுக்கு முஸ்லிம் நாடுகள் ஆதரவு வழங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கும் போல.

**சிறாப்பர்:** அப்படியான தொரு நிலைமை ஏற்படாமல் எங்கட முஸ்லிம் சகோதரர்கள் பார்த்துக் கொள்ள வேணும்.

**கங்காணி:** முஸ்லிம் நாடுகளின்ர ஆதரவைப் பெறுவதற்காகத்தானே எரிக்கிறது எண்ட முடிவை புதைக்கிறது என அரசாங்கம் மாற்றியமைத்தது.

**விதானையார்:** அதெண்டால் உண்மைதான். ஆனால் இலங்கை அரசாங்கத்தை முஸ்லிம் நாடுகள் நம்புமாக இருந்தால், எல்லாம் அம்போ என்பதாகத்தான் நிலைமை முடியும்.

**பண்டிதர்:** என்ன இருந்தாலும் எங்கட தமிழ் அரசியல் தரப்புகள் ஒன்று பட்டு ஒருமித்துக் குரல் கொடுக்க வேணும்.

**மூப்பர்:** பண்டிதர் சொல் லுற ஒற்றுமை கொஞ்சம் கொஞ்சமாக ஏற்படுகிறதைக் காண முடிகிறது.

**விதானையார்:** உண்மைதான். ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பங்குபற்ற வேணும் எண்டு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கூற, அதனை எம்.பிகளான சிறீதரன், கஜேந்திரகுமார், கஜேந்திரன் ஆகியோர் ஒன்றாக ஆமோதித்திருக்கினம்.

**சாத்திரியார்:** அட! சங்கதி அப்படியோ. முன்பெல்லாம் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வந்தால் நாங்கள் வரமாட்டம் எண்டு சொன்னவியள். இப்ப அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திற்கு வரவேணும் எண்டு சொல்லுகினம் எண்டால் ஏதோ மாற்றம் இருக்குதுதான் போல.

**விதானையார்:** ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங் களில அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வந்தால் நான் வரமாட்டன் எண்டு சுமந்திரன் எம்.பி. முந்தியும் சொல்லல்ல. மற்றவர்கள்தான் அப்படிக் கூறினவியள்.

**வாத்தியார்:** எல்லாம் காலமாற்றம்தான் பாருங்கோ. கடல் திடலாகவும் திடல் கடலாகவும் மாறும் என்பதுதானே இயற்கை.

முன்பு கட்சிகளுக்குள்ள ஒற்றுமை. அதால ஏனைய கட்சிகளை கடுமையாக விமர்சிக்க முடிஞ்சுது. ஆனால் இப்ப உள்ளுக் கல்லோ கடும் உடைவு. அதால ஏனையவர்களோடு ஒற்றுமையாக இருந்தால் தானே ஓரளவுக்கு நிலைமையைச் சமாளிக்கலாம்.

**சிறாப்பர்:** அதுவும் சரி தான். இப்ப வெளிப் பிரச்சினையைவிட உள் பிரச்சினைக்குத்தானே முடிவுகட்ட வேணும். இல்லையெண்டால் எதிர்கால அரசியலிலல்லோ கைவச்சிடும்.

**விதானையார்:** இதுதான் நான் அடிக்கடி சொல்லுறது; எங்கட தமிழ் அரசியல் கட்சிகளுக்கு தமிழ்மக்களின்ர பிரச்சினையைப் பற்றிக் கதைப்பதற்கும் சிந்திப்பதற்கும் நேரமே இல்லை.

தங்கட சொந்தக்கட்சிகளுக்குள்ள இருக்கிற குழப்பங்களை முறியடிப்பதற்காக வேலை செய்யவே நேரம் போதாது எண்டிருக்கையில் யார் என்ன செய்ய முடியும்.?

**மூப்பர்:** எங்கட தமிழர் பகுதியிலெல்லாம் பிரச்சினைதான். இவ்வாறு மூப்பர் சொல்ல இடையில் குறுக்கிட்ட சாத்திரியார் என்ன மூப்பர் சொல்லுறியள் சொல்லவந்ததை கொஞ்சம் தெளிவாச் சொல்லுங்களன் என்றார்.

**மூப்பர்:** தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின்ர அதிபர் விடுதி பாடசாலைக்கு உரியதாக இருந்த போதிலும் அது தங்களுக்கு எண்டு சொல்லி ஒரு தரப்பு அடம்பிடிக்குதாம்.

**சாத்திரியார்:** இதென்ன நாசமறுப்பு. யூனியன் கல்லூரிக்கு உரியதை பிறகு ஆரு எங்களுக்கு எண்டு சொல்லுவினம்.

**மூப்பர்:** யாழ்ப்பாணத்தில சில பாடசாலைகள் சமய நிறுவனங்களின்ர கட்டுப் பாட்டுக்குள்ள இருந்தது தானே. அந்தப் பழக்கத்தில இப்பவும் சில சமய அமை ப்புக்கள் உரிமை கோருகி னம்.

ஆனால் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின்ர அதிபர் விடுதி பாடசாலைக்குரியதென்பது அப்பவே வர்த்தமானி அறிவித்தல் மூலமாக உறுதி செய்யப்பட்டிருக்குது. இருந்தும் விதண்டாவாதம் செய்யிறவியள் அதைவிட மாட்டினம்தானே.

**வாத்தியார்:** உண்மைதான். யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களம் அமைந்திருக்கிற காணியும் தங்கட எண்டு ஒரு குறிப்பிட்ட சமய அமைப்பு உரிமை கோரினது. ஆனால் காணி எப்பவோ வடமாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு உரியதாக ஆக்கப்பட்டிருக்கிறது.

உரிய ஆதாரங்களை எடுத்துக் காட்டின பிறகுதான் சம்பந்தப்பட்ட சமய நிறுவனம் அமைதியாயிற்றுது.

**மூப்பர்:** இஞ்சே உதுகளை வெளியில சொல்லாதிங்கோ. உந்த இடங்களில தொல்லியல் திணைக்களம் தோண்டினால் பழைய நல்லூர் முருகன் ஆலய எச்சங்கள் கிடைக்கும்.

பிறகு இந்தக் காணி நல்லூர் முருகனுக்குரியது எண்டு வந்திடுமல்லோ.

**வாத்தியார்:** அப்படியொண்டும் வராது. அதிலும் சைவசமயத்தில இருந்து பறிக்கப்பட்ட சொத்துக்கள் மீண்டும் சைவசமயத்திற்கு வராது. அப்படி வாறது எண்டால், கிழ க்கில் உதிக்கிற சூரியன் மேற்கில உதிக்க வேணும்.

இப்படி வாத்தியார் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

# தாய் சேய் உறவென்பது தடம்மாறிப் போய்விடலாமோ ?

**சோ**ழ நாட்டை ஆண்ட மனு நீதிகண்ட சோழனின் மகன் அர சர்கள் மட்டும் பயணிக்கும் வீதி யில் தேரில் சென்று கொண்டிருக் கிறான்.

தேர்வேகமாகச் சென்று கொண் டிருந்தபோது அந்த வீதியின் குறுக்கே ஓடிய பசுக்கன்று ஒன்று மனுநீதி கண்ட சோழனின் மகன் சென்ற தேர்ச்சில்லில் அகப்பட்டு இறந்து போகிறது.

தன் கண் முன்னேயே இந்த நாட்டின் அரசனின் தேரில் சிக் குண்டு இறந்துபோன தன் கன் றுக்குட்டிக்கு நீதி கேட்டு தாய்ப் பசு மனுநீதி சோழனின் அரண் மனை நோக்கி விரைகிறது. அரச பையில் சிம்மாசனத்தில் இருந்து நாட்டின் நிலைப்பாடுகளை மந்தி ரிமாரிடம் அறிந்து கொண்டிருந்த மனுநீதி சோழனின் காதில் ஆரா ய்ச்சி மணி ஒலிக்கும் சத்தம் கேட் கிறது.

அதிர்ந்து போனான் மனுநீதிச் சோழ மன்னன். சோழ நாட்டில் யாருக்கும் அநீதி நடந்தால் அந்த மணியை அடித்து நீதியை நிலை நாட்ட முடியும் என்று உயரிய எண்ணத்துடன் நாட்டப்பட்ட ஆராய்ச்சி மணி அதுவரை ஒலி த்ததில்லை என்பதே மன்னனின் அதிர்ச்சிக்குக் காரணம்.

ஆராய்ச்சி மணி இருக்கும் வாயில் பகுதிக்கு விரைந்து செல் கிறான் மனுநீதிச் சோழன்.

அங்கு அவன் கண்ட காட்சி அவனை இன்னும் அதிர்ச்சிக்குள் ளாக்கியது.

ஆம், ஆராய்ச்சி மணியை அடி



த்து நீதிகேட்பது ஒரு பசு என் பதே மன்னனின் அதிர்ச்சிக்குக் காரணம்.

உலகின் ஒப்பில்லா தாய்மை யின் சின்னமே தாய்மையின் கோவிலே பசுவே. என்ன ஆயி ற்று? ஏன் ஆராய்ச்சி மணியை அடி க்கிறாய்? என மனுநீதி சோழன் பசுவிடம் வினவுகிறான்.

கண்கள் இரண்டிலிருந்தும் நீர் சொரிய தாய்ப்பசு கூறுகிறது.

"உனது புத்திரன் எனது பிள் ளையைத் தேர் சில்லில் நசுக்கி கொன்றுவிட்டான். இறந்த என் பிள்ளைக்கும் பிள்ளையை இழ ந்து தவிக்கும் எனக்கும் நீதி வேண்டியே இந்த ஆராய்ச்சி மணியை அடிக்கிறேன்" என்று.

திக்குற்று நின்ற மனுநீதிச் சோழன் ஒரு முடிவுக்கு வந்தான்.

தன் கன்றை இழந்து இந்தத் தாய்ப்பசு தவிப்பது போல தன் மகனை இழந்து தானும் தவிக்க வேண்டும் என முடிவு செய்கிறான்.

உடனேயே தனது புத்திரனை அழைத்து வாருங்கள் என உத்தர விடுகிறான்.

மனுநீதிச் சோழ மன்னனின் புத்திரன் அழைத்துவரப்படுகிறான்.

பசுக்கன்று நசுங்கி இறந்து போன அதே தேர்சில்லில் தனது புத்திரனை இட்டு பாதிக்கப்பட்ட, புத்திர சோகத்தில் வாடிய தாய்ப் பசுவிற்கு நீதி வழங்கி தான் தன் மகனை இழந்து புத்திர சோகத் தால் தவித்தான்.

அந்த மனுநீதிச் சோழன் இன் றும் போற்றப்படுகிறான். நீதி தவ றாத மன்னன் என நீதிக்கே உதா ரணமாய்த் திகழ்கின்றான்.

கடந்த வாரம் சமூக வலைத் தளங்கள் மிகவும் பரபரப்பாக இய ங்கியதை அவதானிக்க முடிந்தது.

"குழந்தை மீட்கப்பட்டது", "குழந்தையை துன்புறுத்திய தாய் கைது", "குழந்தையை பொலிஸார் மீட்டனர்", "பொலிஸாருக்கு நன்றி", "உடன் நடவடிக்கை எடு த்த பொலிஸ் அதிகாரிகளுக்கு பாரா ட்டுகள்" இவ்வாறான விடயங்கள் அதிகம் பரபரப்பாக பரப்பப்பட் டுக் கொண்டிருந்தன.

ஆம், கடந்த வாரம் சமூக வலைத்தளங்களில் வெளியான காணொலி ஒன்றில் ஒரு பச்சிளம் குழந்தையை ஒரு பெண் தடி ஒன் றினால் தாறுமாறாக அடிக்கிறாள். குழந்தை வீரிட்டு அழுகிறது.

ஆனாலும் அவள் குழந்தையை அடிப்பதை நிறுத்தவில்லை.

அடி விழ குழந்தை வீரிட்டு அழ அதிக கோபம்கொண்ட அந்தப் பெண் குழந்தையை ஒரு கையில் பிடித்து தரதரவென இழுத்துக் கொண்டு ஒரு அறைக்குள் சென்று அறையில் குழந்தையைப் போட்டுவிட்டு அங்கும் குழந்தையை சரமாரியாகத் தாக்குகிறாள்.

குழந்தை இன்னும் வீரிட்டு அழுகிறது. ஆனாலும் அந்தப் பெண் அடியை நிறுத்தவில்லை. குழந்தை அந்தப்பெண்ணிடம் இருந்து தப்பிக்க எத்தணிக்கிறது.



ஆனால் அந்தப்பெண் குழந் தையைப் பிடித்து இழுத்து இன் னும் மூர்க்கமாகத் தாக்குகிறாள்.

அதை யாரோ காணொலி எடுப் பதை உணர்ந்த அந்தப்பெண் சடு தியாக அறையின் கதவை மூடுகி றாள். அத்துடன் அந்தக் காணொலி நிறைவு பெறுகிறது.

மனித வார்த்தைகளால் கூற முடியாத அந்த கொடூர செயலே சமூக வலைத்தளங்கள் பரபரப் பாக இயங்கக் காரணம்.

குழந்தையை மூர்க்கத்தனமாகத் தாக்கிய அந்தப்பெண் வேறு யாரு மல்ல. குறித்த குழந்தையின் தாய் என்பது சகிக்க முடியாத உண்மை.

சமூக வலைத்தளங்களில் பரப்ப ப்பட்ட அந்த காணொலி ஆதாரத் தைக் கொண்டு குறித்த பெண் கைது செய்யப்படுகிறாள்.

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பகுதியி லேயே குறித்த கொடுஞ் செயல் நிகழ்ந்துள்ளது.

வெறும் எட்டே மாதங்கள் நிறைந்த குறித்த குழந்தையைத் தாக்கிய பெண் மத்திய கிழக்கு நாட் டில் இருந்து வந்தவர் எனவும் திரு கோணமலையில் இருந்து யாழ்ப் பாணத்திற்கு தொழில் தேடி குடி பெயர்ந்துள்ளார் எனவும் ஆரம்ப கட்ட விசாரணைகள் தெரிவிக்கி ன்றன.

தாய்மை என்பது உயிர்மையு டன் கூடியது. அப்பேற்பட்ட தாய்மை இப்படியான கொடுஞ் செயலைச் செய்ததா? இவ்வாறு செய்தால் அதற்கான காரணங் களை அறிய வேண்டியது எம் சமூகத்தின் கடமையாகும்.

உலகையே பொருளாதார நெரு க்கடிக்குள் தள்ளியிருக்கும் கொரோ னாவின் தாக்கம் இப்பேற்பட்ட பல குடும்பச் சிக்கல்களை ஏற்ப டுத்தியுள்ளமையையும் நாம் இங்கு ஈண்டு கவனிக்க வேண்டியுள்ளது.

உதிரத்தைப் பாலாக்கி சேய்க்க ளிக்கும் ஒரு தாயினால் இவ்வா றான கொடுஞ்செயலைச் செய்ய முடியுமா? என்பது எம்முன் எழு ந்துள்ள கேள்வியாக உள்ளது.

அவ்வாறு அந்தத் தாய் செய்தி ருக்கிறார் எனின் அவளின் மன நிலை குழம்பியுள்ளது என்பதை உணரமுடியும்.

அந்தத் தாயின் மனநிலைக்கு மருந்திட்டு அவள் குடும்பச் சூழ் நிலையினை உணர்ந்து அதன்பால் செயற்படுவதனூடே அந்த அப லத்தாயை கொடிய நெருக்கீட்டில் இருந்து மீட்டெடுக்க முடியும்.

அடிப்பது அன்னைதான் என்று தெரிந்தும் அம்மா அம்மா என கதறும் சிறுகுழந்தையையும் அதன் எதிர்காலத்தையும் நாம் இங்கு கவனித்தே ஆகவேண்டும்.

பிறந்து எட்டே மாதத்தில் தாயி னால் கடுமையாகத் தாக்கப்பட்ட குழந்தை எனும் பெயருடன் வாழும் அந்தக் குழந்தையின் நிலை,

பிறந்த தன் எட்டு மாதக் குழ ந்தையைக் கடுமையாகத் தாக் கியதற்காக தண்டனை அனுபவி க்கும் தாய்.

இந்த இரண்டு விடயங்களுமே சமூகத்தில் மிகவும் தாக்கத்தைச் செலுத்தக் கூடியன.

தாய்மை என்பது உயிரோட்ட மானது. தனது பிள்ளை தேரில் அகப்பட்டு இறந்துவிட ஆராய் ச்சி மணியடித்து மனுநீதி சோழ னிடமே நீதிகேட்டது தாய்ப்பசு.

அப்பேற்பட்ட தாய்மை இன்று தனது எட்டுமாதங்களே நிரம்பிய பிஞ்சுக் குழந்தையைக் கொடுமை யாகத் தாக்குகிறது.

இந்த இரண்டுக்குமிடையி லான சமூக வேறுபாட்டை சாதா ரணமாகக் கடந்து செல்ல முடியாது.

இனி இவ்வாறான நெஞ்சை நொருக்கும் கொடுஞ்செயல்கள் நடக்காமல் இருக்க எம் சமூகம் எழ வேண்டும்.

அது மனவலிமையையும் பொருளாதார வலிமையையும் கட்டியெழுப்பினாலே முடியும்.

**அபிமன்யு**




# முயல் செய்த தந்திரம்



ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அது மிக வும் பலசாலியானதால் கர் வத்துடனும் வாழ்ந்து வந்தது. அது கண்ணில் தென்படும் அனைத்து மிருகங்களையும் உணவுக்காக வும் விளையாட் டுக்காகவும் வேட்டையாடி விடும்.

காட்டில் உள்ள எல்லா மிரு கங்களும் மிகவும் கவலை அடைந்தன. அனைத்தும் சேர்ந்து ஒரு கூட்டம் போட்டு சிங்கத்திடம் பேசவேண்டும் எனத் தீர்மானம் போட்டது. சிங்கத்திடம் எல்லா மிரு கங் களும் சென்றன. நீங்கள் எல்லா மிருகங்களையும் கொள்வது சரியான நியதி கிடையாது.

எனவே நங்கள் ஒரு முடி வெடுத்துள்ளோம். நீங்கள் யாரையும் இனி வேட்டை யாடக்கூடாது. நாங்களே தினமும் ஒருவரை அனுப்பி வைப் போம் எனக் கூறியது. சிங்க மும் சரி எனக் கூறியது.

தினமும் ஒவ்வொரு மிருகமாக சிங்கத்திற்கு உணவாக சென்றது. அன்று முயலின் முறை அது உண வாக சிங்கத்திடம் செல்லவேண்டும். மிகுந்த கவலையுடன் சென்று கொண்டிருக்கும் போது ஒரு கிணற்றை பார்த்தது.

ஒரு முடிவுக்கு வந்த முயல் பிறகு கொஞ்சம் நேரம் விளையாடி விட்டு சிங்கராஜவிடம் சென்றது. சிங்கரா ஜவே என்னை மன்னியுங்கள். நான் தாம தமாக வந்துவிட்டேன் என தலைதாழ்த்தி நின்றது.

சிங்கமும் காரணம் கேட்டது. அதற்கு முயல் "சிங்கராஜவே நான் வரும் வழியில் ஒரு சிங்கத்தை பார்த்தேன். அது என்னை எங்கு செல்கிறாய் என் கேட்டது.

நான் சொன்னேன் எங்கள் சிங் கராஜாவுக்கு உணவாக செல்கிறேன் என்று" அதற்கு அந்த சிங் கமோ, இந்த காட்டில் நான் மட்டுமே ராஜா வேறு யாரும் இல்லை, இங்கு இருக்கும் எல்லா மிருகமும் எனக்கே சொந்தம் என்றது" எனக் கூறியது.

இதனை கேட்ட சிங்க ராஜா வுக்கு மிகுந்த கோபம் வந்தது. முயலுடன் அந்த சிங்கத்தை காண சென்றது. முயலும் அந்த கிணற்றை காட்டியது.

சிங்கம் அதனை எட்டிப்பார்க்க அதன் உருவம் உள்ளே தெரிய. அது நம் உருவம் என அதுக்கு தெரியாமல் கர்ஜித்தது. கர்ஜனை எதிரொலித்ததும் சிங்கம் கிண ற்றுக்குள் பாய்ந் தது.

முயலின் புத்திசாலித்தனம் நிறைவேறியது. காட்டில் எல்லா விலங்கினங்களுக்கும் செய்தி பரவியது. மிக்க சந்தோசத் துடன் வாழ்ந்து வந்தன.

நீண்டகால குத்தகைக்கு

Long Term Leasing



யாழ்நகர மத்தியில் NO.484, Hospital Road இல் ஆஸ்பத்திரிக்கு முன்பாக இயங்கும் Commercial Bank 31.03.2021 அன்றுடன் இடம்மாற இருப்பதால் தற்போதைய Commercial Bank மூன்று மாடிக் கட்டடத்தொகுதியும் (10,000Sq Ft) அதனுடன் இணைந்த 10 பரப்புக் காணியும் நீண்டகால குத்தகைக்கு உண்டு. (6032)

தொடர்பு 076 795 8012

# மகாபாரதம்

12



மகனே, குரு வம் சத்தில் குருடனாக இருப்பவன் அரசாள தகுதியற்றவன். அத னால் சிறந்த மகனை அம் பாலிகையுடன் கூடி பெற்றுத்தர வேண் டும் என்றாள். சத்ய வதி.

வியாசர் கூறியபடி அம்பிகைக்கு ஒரு குருட்டுக் குழந்தை பிற ந்தது. அதுவே "திரு தராட்டினன்".

பின் வியாசரை அழை த்தாள் சத்யவதி. வியா சரும் அம்பாலிகையு டன் சேர்ந்தார். ஆனால் அம்பாலிகை வியாச ரின் கோரத் தோற்றம் கண்டு பயந்து உடல் வெளுத்தாள்.

உடன் வியாசர் "உன க்குப் பிறக்கும் மகனும் வெண்மை நிறத்துடன் இருப்பான். பாண்டு அவன் பெயர். அவனு க்கு 5 பிள்ளைகள் பிறப் பர்" என்றார். அம்பி கையும் அது போல மகனை பெற்றெடுத் தாள்.

இரு குழந்தைகளும் குறைபாடுடன் இரு ந்ததால் "அம்பிகை க்கு இன்னொரு மக னைத் தர வேண்டும்" என சத்யவதி வேண்டி னாள்.

ஆனால் அம்பிகை அவருடன் மீண்டும் சேரமனமில்லாது ஒரு பணிப்பெண்ணை அனு ப்பினாள். பணிப் பெண் ணும் வியாசரும் மன மகிழ்ச்சியுடன் கூடி னர்.

பின் வியாசர் "பணிப் பெண்ணின் அடிமைத் தன்மை நீங்கியது என் றும், அவளுக்கு பிறக் கும் குழந்தை சிறந்த ஞானியாய் விளங்கு வான் என்றும் கூறி அவன் பெயர் விதுரன் என்று சொல்லி மறைந்தார்.

வியாசர் மூலமாக அம்பிகை, அம்பாலிகை, பணிப்பெண் ஆகி யோருக்கு. திருதராட் டினன், பாண்டு, விது ரன் ஆகியோர் பிறந் தனர்.

திருதராட் டிரன், பாண்டு, விதுரர் மூவ ரையும் பீஷ்மர் தந்தை போல் இருந்து கவ னித்துக் கொண் டார். போர்ப்பயிற்சிகளை யும், சாத்திரக் கல் வியையும் அளித் தார்.

அரசு காரியங்களை பீஷ்மரே கவனித்துக் கொண்டதால் நாட் டில் நல்லாட்சியும், அமைதியும் நிலவியது.

மைந்தர்கள் மூவ ரும் மணப்பருவம் அடைய பீஷ்மர் திரு தராட்டினனுக்கு காந் தார நாட்டு மன்னன் சுபவனுடைய மக ளான காந்தாரியை மணமுடித்து வைத் தார்.

(தொடரும்)



## ஜெனீவாப் பிரேரணை தமிழருக்கு நன்மை தருமா?

**சங்கர் இரணைமடு**

**திரையரங்க ஊழியர்களுக்கு கொரோனா என்றால்...?**

தம்பி அவை கடந்த இரண்டு வாரத்துக்குள்ள யாராவது காகில்ஸ் சதுக்க திரையரங்குக்கு படம் பார்க்கப் போனா தயவு செய்து முன் வந்து சொல்லுங்கோடா.

இல்லையென்டால் அது பாரிய விளைவு களை ஏற்படுத்திவிடும்.

உங்கட வீட்டிலையும் அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி என்று வயதானவர்கள் இருப்பினம்.

அவையளும் பாவம் உங்களால் அதுகளுண்ட உயிருக்குத் தான் ஆபத்து அதிகம். பிளீஸ்

**சுதன் குப்பிழான்**

**தமிழ் மக்கள் இலங்கை அரசிடம் ஏமாந் தது போல இந்தியாவிடமும் ஏமாறு வார்களா?**

2009 இறுதியுத்தத்தில் கொத்துக் கொத்தாய் எமது தமிழினம் இறந்து கொண்டிருந்தது.

பயங்கரவாதம் அழிக்கப்படும் போர்வையில் இன அழிப்பே அரங்கேறுகிறது.

எம் தொப்புள் கொடி உறவே இந்தியாவே காப் பாற்று என தமிழினம் ஓலமிட்டபோது இந்தியா வேடிக்கை பார்த்துக் கொண்டே இருந்தது.

அப்போதே தமிழினம் இந்தியாவை நம்பி ஏமாந்து தோற்றுவிட்டது. அதன் பின்பே இலங்கை அரசு தமிழினத்தை ஏமாற்றியது.

**ஆகாஷ் எழுதுமட்டுவாழ்**

**துரோகிகளை மன்னித்து விடுவது நியா யமானதா வியாசரே?**

எம்முடனேயே கூட இருந்து எம் முதுகில் குத்தி எம்மை படுகுழியில் தள்ளியவர்களை மன்னித்து விடுவதில் ஒன்றும் தவறில்லை.

ஆனால் அப்பேர்ப்பட்டவர்களை மீண்டும் நம்பி எம்முடன் வைத்திருப்பது தவறானது.

ஏனென்றால் விரோதிகள் திருந்துவார்கள். துரோ கிகள் ஒருநாளும் திருந்தமாட்டார்கள் இதை மனதில் வைத்து நடந்து கொண்டால் எம்மை வீழ்த்துவதற்கு யாரா லும் முடியாது.




**திருக்ஷ் வடமராட்சி**

**தமிழர் பிரச்சினை தீருமென்று நீங்கள் நினைக்கிறீர்களா வியாசரே?**

தமிழினம் ஒன்றாய், ஒற்றுமையாய் இணை யாதவரை தமிழர் பிரச்சினை என்பது தீர்க் கப்படாத ஒன்றாயே இருக்கும்.

ஒரு இனத்தின் பிரச்சினை அரசியல் வடிவம் எடுத்து அந்த வடிவத்தின் தன்மையைச் சீர் குலைத்துவிட்டது என்பதே உண்மையானது.

தமிழினத்தின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டிய எமது தமிழ்த் தரப்புகள் நீ, நான் என மல்லுக்கட்ட, இந்த மல்லுக்கட்டை ஜல் லிக்கட்டாய் மாற்றி அந்த கரகோசத்தில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது பேரின வாதம். அவ்வளவே.

**தாரு வதிரி**

**ஏதும் நல்ல கருத்துள்ள கதை இருந் தால் கூறுங்களேன்?**

தந்தை வாங்கிய புதிய காரில் ஐந்து வயதான மகன் சிறிய கம்பியால் எதையோ கிறுக்கிக் கொண்டிருந்ததைக் கண்ட தந்தை கோபத் தில் அவன் கையில் பலமாக அடித்துவிட்டார்.

மகன் வலியால் துடித்த பின்புதான் தெரிந் தது அவர் அடித்தது ஸ்பனரால் என்று.

மகனைத் தூக்கிக் கொண்டு வைத்தியசா லைக்கு ஓடுகிறார். வைத்தியர் சிறுவனின் விரல்கள் முறிவடைந்து விட்டன என கைவிரிக் கின்றனர்.

விரக்தியடைந்த தந்தை தனது புதிய காரை காலால் உதைக்கிறார். அப்போது மகன் கிறு க்கிய கிறுக்கல்கள் அவர் கண்ணில்பட்டது. அதில் எழுதியிருந்தது ஐ லவ்யூ அப்பா என.



## ஏதும் நல்ல கருத்துள்ள கதை இருந் தால் கூறுங்களேன்?

**சிவன் நெல்லியடி**

**பழங்கள் அனைத்திற்கும் இப்போது மருந்து அடித்து பழுக்க வைத்து விற் பனை செய்கிறார்களே. இவர்களுக்கு மனச்சாட்சியே இல்லையா?**

மனச்சாட்சியை மண்ணாங்கட்டியாக்கி காசு ழைத்து கர்மாவைத் தேடுகிறார்கள்.

திரைப்பட நடிகர் ஒருவர் நேர்காணலில் கூறிய விடயம். யானை ஒன்றிற்கு நான் ஒரு அப்பிள் பழத்தைக் கொடுத்தேன். அதை வாங்கிய யானை அதை உண்ணாமல் எறிந்துவிட்டது.

யானையின் பாகன் சொன்னான் இந்த அப்பிளில் அது பழுதடையாமல் இருக்க மெழுகு பூசியிருக்கிறது. அதை வெட்டி அகற்றிவிட்டுக் கொடுங்கள் என்றான்.

நான் அதைச் செய்ய யானை அந்தப் பழத்தை மகிழ்வாய் உண்டதாக கூறியிருந் தார்.

இயற்கையினை விட்டு விலகி செயற்கை என்கின்ற மாயைக்குள் வீழ்வது மனித இனம் மாத்திரமே.


**சயன் யாழ்ப்பாணம்**

**ஜெனீவாப் பிரேரணை தமிழருக்கு நன்மை தருமா?**

ஆரம்பம் ஏதோ நன்றாகத்தான் இருக் கிறது. ஆனால் இதன் இறுதி எப்படி இருக்கப் போகிறது எனும் விடயம் மனதில் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

இதற்கு முன்னரும் பல பிரேரணைகள் வந்தும் அவற்றை எல்லாம் கால்பந்தாய் இலங்கை அரசு உதைத்துவிட்டு இறுமாப்பு காட்டியதை நினைக்கும்போது, இந்தப் பயம் ஏற்படுகிறது.

பொறுத்திருந்து பார்ப்போம். பாதிக்கப்பட்ட இனத்திற்கு சர்வதேசம் தரும் பரிகாரம் என்ன என்பதை. இம்முறை தவறினால் இனி தமிழினத்திற்கு நீதி கிடைக்காது என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.



**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை **021 567 1532** எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

# பெண்ணினமே



மனையோடு உறவாடும் மனதோடு விளையாடும்
மாற்றானை நினைத்து இருப்பதெல்லாம் அவனுக்கு
இரையாகக் கொடுத்து இழிவான கதைகளுக்கு
இசையாயும் இருந்து

உடலாலும் உயிராலும் மானத்தைத் துறந்து
உற்றார், உறவினர் அத்தனையும் இழந்து
உள்ளொன்று வெளியொன்று பேசும் அவன் பேச்சில்
உன்னையே அவனுக்கு அர்ப்பணமாய்க் கொடுத்து

பண்பாடு அற்றவன் பணப்பையில் இருப்பான்
பறித்தவுடன் உன்னுறவைத் துச்சமென நினைப்பான்
வாழ்வோடு விளையாடும் குடும்பத்துப் பெண்ணே
நீ குலவிளக்காய் எந்நாளும் கணவனுக்கே இருப்பாய்
இடையிட்டு வந்ததெல்லாம் இரந்து கொண்டு போவர்
எடுத்துவிட்டு அத்தனையும் தன்னகத்தே வைப்பர்
என்றென்றும் இன்னொன்றை ஏங்கியே அலைவர்
பெண்களின் கண்ணீரால் காலத்தைக் கழிப்பர்

கல்யாணப் போர்வைக்குள் கண்டுண்ட மாட்டார்
காதல்தான் வாழ்க்கையென்று கற்பனையில் மிதப்பர்
வாலிப வயதினிலும் வயதான கோலம்
வழிதெரியா நிலைமாறித் தடுமாறித் திரிவர்

பெண்களின் வாழ்க்கையினைப் பிடுங்கி விடும் பேய்கள்
பித்தனாக என்றென்றும் புலம்பியே திரிவர்
பெண்ணடிமை போதுமென விழித்தெழுந்த பெண்கள்
பூமியிலே தடம்பதித்த மகளிர் தின நாளாம்

பி.வாசுகி
கொழும்பு


# பெண்ணே எழு



வீறு கொண்டு எழு பெண்ணினமே
அடிமைப்பட்ட பெண்மை இனி
விடுதலை பெறட்டுமே
தாய்மை என்ற புனிதத்தைப் போற்றுவோம்
பெண்மை என்ற அவதாரத்தில்
தாய், சகோதரி, மனைவி, மகள் என்று
பல கதாபாத்திரங்கள் பெண்ணில்
அன்புக்காய் அடிமைப்பட்டது போதும்
பெண்ணே நீ எழுவாய்
பெருமையுடன் இப்பூமியைப்
போற்றுவாய்

நவாலியூர்
வி.லலிதாம்பிகை

# மௌனத்தின் தேடல்- 518




## ஏமாற்றப்படுவரோ...

ஜனாஸா இன்னமும்
தகனம் தான் ஆயிரமும்
கானல் நீராகி, மலையில்
கண்ணீர் வடிக்கிறதா?
காணாமல் ஆக்கப்பட்ட
உறவுகள் கைக்கு வரவில்லையா?
ஏமாறும் பேர்வழிகளுக்கு
ஏமாற்றப்படுவோரே இரை

கந்தவாசன்
காவலூர்

# மௌனத்தின் தேடல்- 519



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## நினைவில் கொள்

மனதினில் ஏதோ மயக்கம்...
கண்களில் எத்தனை ஏக்கம்...
முகம்தனில் தீராத் தாகம்– என்னை
இருகரம் கொண்டல்ல நீ
இரும்புக்கரம் கொண்டு அடக்க
நினைத்தாலும்
என்கரம் கொண்டு எழுவேன்
இன்னும் இன்னும் உயர்வாய்
அதை நீ நினைவில் கொள்

வல்லைக்கமல்
வல்வெட்டித்துறை

## தடைகளை உடை

தலையை நெரித்திடும்
தடைகளை உடைத்திடு
தன்னம்பிக்கையோடு
தளர்வின்றி நீ நடைபோடு
எதிர்காலம் சிறக்க
ஒளியோடு வழிபிறக்கும்
வீண் சிந்தையும் விபரீத எண்ணமும்
நிந்தையோடு உன் நிலை குலைக்கும்
தலைவெடித்திடுவென
இறுக்கிடும் கரங்களை
விலக்கிப் போராடு

சி.திவ்வியா, யா/ப.மெ.ம.வி.

## மாறாத பித்தம்

எல்லையில்லாப் பணப் போதைக்கு– மனிதம்
அடிமையானதால் உறவுகளின்
எல்லையும் தூரத்தில்...!
வேலைப்பளுவால் பித்தம் தலைக்கேற,
மனதுக்கு ஒத்தணம் கொடுக்க
இங்கு யாருமில்லை...!
கண்களில் ஒற்றிய பண நோட்டுக்களே
இங்கு மிச்சம்–இது மாறாப் பித்தம்

சண்.தியாளேஸ்,
நுணாவில் மத்தி

## நீ தேடும் பதில்- நிதானம்

எண்ணங்கள் சிதறடிக்கப்படும்
சிந்தனைகள் எதற்கடா?
வீறுகொண்டு போய் வீழ்வதற்கா?
விவேகம் இல்லாமல் தடுமாறவா?
காதல் தலைக்கேறி தற்கொலைக்கா?
தகாத வார்த்தைகள் உன்னை இழப்பதற்கா!
போதுமே நீ படும் பாடு– நிதானம் கொள்!
நீ! யாரெனப் புரியும் உனக்கு!

நிருஷினி ஆனந்தராஜன்

## கையிரண்டும்தான் உதவும்

எண்சாண் உடம்புக்கு
சிரசே பிரதானம் இனும்
மூளை பிதுங்கும் வரை
முளைத்த சிக்கல் தான் என
சித்தம் கலங்குதற்கு இவ்
உலகு செய்த சொல் ஏது
கவலை விட்டெழுந்து
கையிரண்டும் தான் உதவும்

த.சிவகாமி
நல்லூர்

# மூழ்கிப்போன மூன்று உயிர்கள் !

வட்டக்கச்சிக் கிராமம் என்றாலே யாவருக்கும் நினைவுக்கு வருவது மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிதான். சவாரிக்காக தேர்ந்தெடுக்கப்படும் மாட்டுக் கன்றுகளை சாதாரண வளர்ப்பிலிருந்து விடுக்கப்பட்டு விசேடமாக வளர்க்கப்படும். இவைக்கு நெல்லுமா, கடலை, உழுந்து, பயறு என்பன உணவாகக் கொடுப்பர். இந்த உணவினால் திமில் திரண்டு வளரும், போர்க்குணம் பெருகும். சவாரி மாடுகளுக்குப் பயிற்சிகளைக் கொடுப்பார்கள்.

இந்த மாட்டையும் மாட்டு வண்டியையும் போட்டித்திடலையும் காண பல மாவட்டங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள் குவிவார்கள்.

பல மக்களை இணைத்துப் அந்தப் பாரம்பரியம் பேணுகின்ற கிராமம் 2021.03.03 அன்று மூழ்கிப்போன மூன்று உயிர்களைத் தேடுவதில் பல்லாயிரக்கணக்கான மக்களை இணைத்திருந்தது. பெற்றதாயே தனது மூன்று பிள்ளைகளையும் கிணற்றுக்குள் வீசியெறிந்த சம்பவம் உலகில் வாழும் மானிட நெஞ்சங்களை நெருட வைத்தது. மூன்று பிள்ளைகளில் ஒரு பிள்ளையாவது தப்பிக்க முயலவில்லையா? ஒவ்வொரு பிள்ளையாகத்தானே கிணற்றுக்குள் போட்டிருக்க முடியும். அப்போது ஏனைய இரண்டு பிள்ளைகளும் கத்திக் குழறி ஓடியிருக்கமாட்டார்களா? எப்படி ஒரே நேரத்தில் மூன்று குழந்தைகளையும் கிணற்றுக்குள் போட்டிருக்க முடியும். எப்படி மூன்று குழந்தைகளையும் கிணற்றுக்குள் வீசியெறிந்த தாயார் உயிர்தப்ப முடிந்தது? எனப்பல கேள்விகள் மக்களிடையே பரவலாக எழுந்தன.


### மூழ்கிப்போன மூன்று உயிர்கள் யார்?

அபி என்று செல்லமாக அழைக்கப்படுகின்ற கிருத்திகா 2013.08.01 ஆம் திகதி பிறந்தவள். எட்டு வயதுடைய சிறுமி. வீட்டில் மூத்த பிள்ளை. அச்சு என்று செல்லமாக அழைக்கப்படுகின்ற அக்சயா வீட்டில் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தாள். ஆறு வயது நிரம்பிய இந்தப் பாலகி 2015.09.05 ஆம் திகதி பிறந்தாள். கடைசிப்பிள்ளையான ரெனோஜன் 2019.06.13 ஆம் திகதி பிறந்தான். இவனைச் செல்லமாக ரெனோஸ் என்று அழைப்

## நடந்தது என்ன?

பார்கள். இரண்டு வயது நிரம்பிய பாலகன். கிருபாகரன் உஷாந்தினி ஆகியோருக்கு பிறந்தவர்களே இந்த மூன்று பிள்ளைகளும்.

முப்பத்தொராவது பிறந்தநாளில் ஏன் இந்த முடிவு. ஐந்து வீட்டுத்திட்டம், கட்சன் வீதி, வட்டக்கச்சியில் வாழ்ந்து வந்த திருமதி. கி.உஷாந்தினி நந்தா என்று அழைக்கப்படும் மூன்று பிள்ளைகளின்



தந்தையுடன் எடுத்த செல்பி

தாயார் தனது முப்பத்தொராவது பிறந்தநாளன்று மூன்று குழந்தைகளோடு ஒற்றைக் கைப்பிள்ளையார் கோவில் கிணற்றுக்குள் விழுந்து தற்கொலை செய்ய முயன்றுள்ள போது மூன்று குழந்தைகளும் இறந்துவிட்டார்கள். தாயார் இறுதிப்பிள்ளையை அணைத்தபடி கிணற்றுக்குள்ளிருந்த படிக்கட்டைப் பிடித்துக்கொண்டதால் தாயார் மட்டும் உயிர்தப்பிக்கொண்டார். மூன்று பிள்ளைகளையும் தூக்கிக்கிணற்றுக்குள் போட எப்படித் தாய்க்கு மனம் வந்தது. ஏன் இன்னமும் அவல அடையாளங்களிலிருந்து முன்னேற முடியாமல் தவிக்கின்றோம். மூன்று பிள்ளைகளை இழந்த தந்தை (வயது-33) அழுதழுது அவரது குரல் அடைத்துப் போயிருந்தது. கண்ணீரில் முகம் நனைந்திருந்தது. சோகத்தால் முகம் வாடியிருந்தது. தனது பிள்ளைகளின் நாளாந்தச் செயற்பாடுகள், குறும்புச் செயுற்பாடுகளைச் சொல்லிச் சொல்லி அழுதார்.

சம்பவம் அன்று எனது மனைவிக்குப் பிறந்தநாள். முதல் நாள் இரவு வயலில் வேலையிருந்தது. வேலை செய்துவிட்டு விடியத்தான் வந்தனான். காலை எட்டு மணி இருக்கும். நான் கேட்டன் என்ன சாப்பாடு என்று? இன்னும் சாப்பாடு தேடவில்லை என்றாள். நான் உடன இவ்வளவு நேரமாகியும் சாப்பாடு தேடல என்று பேசிட்டு தடியெடுத்து ஓங்கினன். அடிக்கவும் இல்லை. உடன வீட்டை விட்டு ஓடிப்போட்டா. அப்படியே இன்றைக்கு அவாக்குப் பிறந்த நாள்தானே. அந்தப்பெட்டிக்கடையில போய் கற்பூரம் ஒரு பெட்டி வாங்கிக் கொண்டு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு கோயிலுக்குப் போனா. பிள்ளைகளுக்கு கோயில் என்றால் மிகவும் சந்தோசம். பிள்ளைகள் கோயிலுக்கு என்றுதான் போனார்கள். இப்படியொரு காரியம் நடக்கப்போறது என்டா போயிருக்கமாட்டார்கள். மனைவி மூன்று பிள்ளைகளையும் கிணற்றுக்குள்ள தூக்கிப் போட்டிட்டு தானும் குதிச்சிட்டா. பின்நேரம்தான் எங்களுக்குத்தெரியும் கிணற்றுக்குள்ள விழுந்த சம்பவம். உடன நாங்கள் எல்லாரும் போனோம். மனைவியும் கடைசிப்பிள்ளையும் நனைந்தபடி கிணற்றடியில் நிக்கினம். கோயில்ல கொஞ்சப் பெடியள் O/L பரீட்சைக்காக படிக்கிறவங்கள். அந்தன்று இரண்டு பெடியள் படிக்க வந்திருந்தார்கள். கிணத்துக்குள்ள குழறிக்கேட்க அவங்கள் தான் துஸக்கினவங்கள். உடனே மனைவியையும் கடைசிப் பிள்ளையையும் அன்புலன்ஸ்சில ஏற்றிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனது.

சிறிது நேரத்தில கடைசிப்பிள்ளையும் இறந்திட்டு. மற்ற இரண்டு பிள்ளைகள் கிணற்றிற்குள்ளிருந்து அன்று மீட்கமுடியாது அடுத்த நாள் காலையில தான் இரண்டு பேரையும் கடற்படையினர் மீட்டெடுத்தனர். முப்பது அடி ஆழக்கிணறு பதினைந்து அடி வரை இறைத்தும் அன்றையதினம் எனது பிள்ளைகளை எடுக்க முடியவில்லை.

கிணற்றடியில் பூ, கற்பூரம், பிள்ளைகளின்ர பாட்டா, தொப்பி எல்லாம் சிதறிக்கிடந்தது. என்னில கோபம் என்றால் என்ர மனைவி எனக்கு சாப்பாட்டில விசம் கலந்து தந்திருக்கலாம். ஏன் என்ர அருமந்த பிள்ளைகளைச் சாகடித்தாள்.

பிள்ளைகளைத் கிணற்றுக்குள் தூக்கிப்போடும் போது என்ர பிள்ளைகள் எவ்வளவு துன்பத்தை அனுபவித்திருக்குங்கள். ஏன் இப்படித்துன்பத்தை என்ர குழந்தைகளுக்குக் கொடுத்தவள். அப்பா வாங்கோ நாங்கள் செல்பி எடுப்போம் என்று மூன்று பேரும் நானும் சேர்ந்து எடுப்போம். சாகிறதிற்கு நான்கு நாட்களுக்கு முதல் மூத் தவள் சொன்னாள் அப்பா நீங்களும் நானும்தான் கறுப்பு. வாங்கோ அப்பா என்று பிங்பவுடர் லிப்ஸ்டிக் எல்லாம் அடித்து மேக்ப் எனக்கும் போட்டு இருவரும் வெள்ளை யாகி இறுதியாகச் செல்பியும் எடுத்துக் கொண்டோம்.

### உஷாந்தினியின் தாயாரின் கருத்து...

என்ர வீட்டுவாசல் றோட்டில அழுது கொண்டிருந்தாள். என்னடி என்று கேட்டன். இவர் அடிச்சிட்டார் என்றாள். ஏன்ரி அடிச்சவர் என்று கேட்க சாப்பாடு தேடல அதனால் என்றா. நீ இவ்வளவு நேரம் என்ன செய்தனீ? விடிய எழும்பி சட்டிபானை கழுவி, முற்றம் கூட்டி, உடுப்புத்தோய்த்து, பிள்ளைகளுக்குத் திரிபோசா குழைத்து கொடுத்தன் என்று கூறினாள்.

மாலை 3.45 மணிக்கு போன்வந்தது. நந்தா பிள்ளைகளோடு கிணற்றுக்குள்ள வீழ்ந்திட்டாள் என்று. நானும் பதறி அடிச்சுக்கொண்டு கோயில் கிணற்றடிக்குப் போனன். அங்க ஊர்ச்சனமே திரண்டு நின்றது. மகளும் கடைசிப்பிள்ளையும் நனைந்தபடி கிணற்றடியில் நின்றார்கள். நான் எங்கடி மற்ற பிள்ளைகள் என்று கேட்க ரெண்டு பேரையும் கோவிலுக்குள்ள வைத்துப் பூட்டிட்டன் என்று சொன்னாள். நான் கோவிலடியில தேடி எல்லா இடமும் தேடி அபி, அச்சு அம்மம்மா வந்துநிற்கிறன் வாங்கோ என்று கத்துறன். ஆட்கள் வரல உடன மகளுக்கு ஓர் அடிவிட்டன். அப்பதான் உண்மை சொன்னாள் கிணற்றுக்குள்ள போட்டிட்டன் என்று கதறி அழுதார்.

ஆத்திரம் .கோபத்தில் சடுதியாக எடுக்கும் முடிவு எப்போதும் தவறானது என்பதை இந்தத்துயரம் உறுதிப்படுத்தியுள்ளது.


எத்தனையோ கனவுகளுடன் வாழவேண்டும் என பூத்த இந்த மூன்று மலர்களும் இன்று இல்லை.

மூன்று பிஞ்சுகளின் உயிரிழப்பு இந்த சமூகத்தை தட்டி எழுப்புமா என்ற கேள்வி நெஞ்சை முட்ட கண்களின் ஓரம் நனைந்தது அந்தப் பிஞ்சுகளின் உயிரைக் குடித்த அந்தக் கிணற்றை வெறித்துப்பார்த்தபடி மெல்ல அந்த இடத்தில் இருந்து நகர்ந்து சென்றேன்.

ஜெயம் ஜெகன்

# -நேரம்-

“விளையாட்டு... அப்படியொரு விளையாட்டு. இருட்டாவதற்கு வெகு நேரமெடுக்கும். மாலைப்பொழுது நீண்டதாக இருக்கும். அதே மாலைப்பொழுது, உங்கள் நாற்பது வயதில் வெகு சீக்கிரமாக முடிந்துவிடும். சிறுவனொருவனுடைய நாள் நீண்டதாகவும் ஒரு வயோதிபருடைய நாள் குறுகியதாகவும் இருக்கும்.”



‘நேரம் என்றால் என்ன’ என்பதை எப்போதாவது சிந்தித்திருக்கிறீர்களா... மனிதன் அறிந்தவற்றில் ஆச்சர்யமானதும் மர்மமானதும் நேரமென்றால் உங்களால் நம்ப முடிகிறதா... ‘நேரத்தில் என்ன மர்மம் இருக்க முடியும்’ என்றுதான் நினைப்பீர்கள். ஆனால், நேரம் பற்றிய நிஜம் தெரிந்தால் ஆச்சர்யப்படுவீர்கள். நீங்கள் அதைச் சிந்திக்கும் விதமே மாறிவிடும். நேரம் பற்றி அறிவியல் என்ன சொல்கிறது தெரியுமா? ‘நேரம் ஒரு மாயை’ (Time is an Illusion) என்கிறது.

ஆனால், அது மாயை இல்லை என்பதுதான் உங்கள் புரிதல். கடிகாரத்தின் ஒவ்வொரு நொடியின் ‘டிக் டிக்’ ஒலியும் நிஜமானது. காலை, மாலை, நாளை என்பவற்றை நீங்கள் உணர்ந்துதான் இருக்கிறீர்கள். அப்படியென்றால், நேரம் எப்படி மாயையாக முடியும்? அறிவியல் தப்பாகச் சொல்லாது என்பதும் உங்களுக்குத் தெரியும். அதையே நாம் விரிவாகப் பார்க்கப்போகிறோம். அங்கு என்ன ஒளிந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளப் போகிறோம்...

நீங்களே இப்படியான அனுபவங்களைச் சந்தித்திருப்பீர்கள். உங்களுக்கு நடந்திருக்கக்கூடிய சில எளிமையான சம்பவங்களையே உதாரணமாகச் சொல்லப்போகிறேன். ஓர் இளைஞன், 6 மணிக்கு வருவதாகக் கூறிய காதலிக்காகக் கடற்கரையில் காத்திருக்கிறான். கைக் கடிகாரத்தில் மணி 5:50. அவனால் இருக்கவே முடியவில்லை. ஒவ்வொரு நொடியும், வருடங்களாகக் கடக்கின்றன.

பதினைந்து நிமிடங்கள் கழித்து மீண்டும் கடிகாரத்தைப் பார்க்கிறான். மணி 5:53. ‘வெறும் மூன்றே நிமிடங்கள்தானா?’ என்று சலித்துக்கொள்கிறான். ஒருவழியாகப் பல ஆண்டுகளின் பின்னர் ஆறு மணிக்குக் காதலி வருகிறாள்.

அப்புறம் நேரம் போவதே தெரியவில்லை. பதினைந்து நிமிடங்கள் கழித்துக் கடிகாரத்தைப் பார்க்க, மணி பத்தாகியிருந்தது. என்ன இது, இப்போதுதானே வந்தாள், அதற்குள் நான்கு மணிநேரம் முடிந்துவிட்டதா? மீண்டும் சலித்துக் கொள்கிறான். இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவன் ஒருவனே. காத்திருப்பின் அவதியில் நேரம் மெதுவாகக் கடந்தது. மூன்று நிமிடங்கள், பதினைந்து நிமிடங்களாகத் தெரிந்தன.

ஆனால், அவன் மகிழ்வுடன் இருக்கும்போது கடப்பதே தெரியாமல் நகர்ந்துவிடுகிறது. நான்கு மணி நேரம், பதினைந்து நிமிடங்களாகத் தெரிந்தது. இது எப்படி? மகிழ்ச்சியின்போது விரைவாகவும் கவலையின்போது மெதுவாகவும் நேரம் நகருமா? “நேரம் எப்போதும் ஒரே அளவில்தான் நகர்கிறது. அவனின் உணர்வுகளைப் பொறுத்து, நேரத்தை மாற்றிப் புரிந்துகொள்கிறான்” என்பீர்கள். சரி, இந்த உதாரணத்தையும் பார்த்துவிடுங்கள்.

நீங்கள், 7 அல்லது 8 வயதுச் சிறுவனாக இருக்கும்போது, பாடசாலையிலிருந்து வீடு வந்ததும் புத்தகப் பையைத் தூக்கியெறிந்துவிட்டு நண்பர்களுடன் விளையாடச் சென்றுவிடுவீர்கள். விளையாட்டு... விளையாட்டு... அப்படியொரு விளையாட்டு. இருட்டாவதற்கு வெகு நேரமெடுக்கும். மாலைப்பொழுது நீண்டதாக இருக்கும்.

அதே மாலைப்பொழுது, உங்கள் நாற்பது வயதில் வெகு சீக்கிரமாக முடிந்துவிடும். சிறுவனொருவனுடைய நாள் நீண்டதாகவும் ஒரு வயோதிபருடைய நாள் குறுகியதாகவும் இருக்கும். இது உண்மை கணிப்பு. கணிதச் சமன்பாட்டாலும் இதை நிறுவியிருக்கிறார்கள். உங்கள் வாழ்விலும் இதை உணர்ந்திருப்பீர்கள். “அட! முந்தநாள்தானே புதுவருடம் பிறந்தது. அதற்குள் பெப்ரவரி வந்தாச்சா?” என்று அங்கலாய்ப்பீர்கள். அப்படியென்றால், சிறுவர்களின் நேரம் மெதுவாகவும், பெரியவர்களின் நேரம் வேகமாகவும் ஓடுகிறதா? இதற்கும் நீங்கள், “சிறுவர், பெரியவர் அனைவருக்கும் நேரம் ஒன்றுதான். அவரவர் பார்க்கும் விதத்தில்தான் வித்தியாசம் தெரிகிறது” என்பீர்கள். ஆனால் பாருங்கள், சிறுவர்கள் விளையாட்டுகளில் ஈடுபட்டு, மகிழ்ச்சியாக இருப்பார்கள். பெரியவர்களுக்கு அவை குறைவாகவே இருக்கும். மேலே பார்த்த இளைஞனின் உதாரணத்தின்படி, மகிழ்ச்சியாக இருப்பவர்களுக்குத்தானே நேரம் விரைவாக நகர வேண்டும்... முதியவர்களுக்கு மெதுவாகத்தானே நகரும். இங்கு தலைகீழாக அல்லவா நேரம் நகர்ந்திருக்கிறது. அது எப்படி? மனிதனுக்கு மனிதன், சூழ்நிலைக்கேற்ப நேரம் மாறுகிறதென்று எடுத்துக்கொள்ளலாமா... இதனால்தான், நேரம் ஒரு மாயையென்று அறிவியல் சொன்னதா? இல்லை!

அறிவியல் சொன்னது இதையல்ல. அது வேறு. ஒரு நொடியில், ஒரு நொடியைக் கடந்து செல்வதே நேரம் என்பது உங்களுக்கு நன்கு தெரியும். அதன்படிதான் கடிகாரங்கள் நேர்த்தியான நேரத்தைக் காட்டிக்கொண்டிருக்கின்றன. 24 மணியில், ஒரு நாளையும் கடக்கிறோம். அப்படியே மாதம், வருடம் எல்லாம் கடக்கின்றன. ஆனால், இவையெல்லாம் சரியான கணிப்பீடுகள்தானா... நேரம் என்பது கடிகாரம் என்னும் ஓர் இயந்திரம் கணிக்கும் கால அளவீடு மட்டும்தானா?

கடிகாரம் 24 மணி நேரத்தைக் காட்டுகிறது. 24 மணி எப்படி வந்தது? பூமி தன்னைத்தானே ஒரு தடவை சுற்றி வருவதற்கு ஒருநாள் தேவைப்படு கிறது. அதாவது, அதற்கு 24 மணி நேரம் தேவையாகிறது. பின்னர் அதை வகுத்து, நிமிடங்களும், நொடிகளைப் பெறுகிறோம். கடிகாரம் எனும் இயந்திரமும் அந்த அளவீட்டின்படிதான் உருவாக்கப்பட்டிருக்கிறது.

அப்படிப் பார்த்தால் நேரம், பூமிசார்ந்ததாகிவிடும். வெள்ளிக் கோள் தன்னைத் தானே சுற்றுவதற்கு 243 பூமியின் நாட்கள் ஆகின்றன. வெள்ளியின் ஒரு நாள், பூமியின் 243 நாட்களுக்குச் சமம். ஒவ்வொரு கோளுக்கும் தனித்தனியே வெவ்வேறு நாட்கள் இருக்க முடியாதல்லவா... பிரபஞ்சம் முழுவதற்குமான பொதுவான நேரத்தை எப்படி எடுத்துக் கொள்வது? ஒரு பேச்சுக்கு, பூமியின் நேரத்தைப் பிரபஞ்சத்துக்குப் பொதுவானதாக எடுத்துக்கொண்டாலும் பூமி தன்னைத் தானே சுற்றி, ஒரு நாளை முடிப்பதற்கு 24 மணி நேரம் என்பதே தப்பான கணிப்பு.

23 மணி, 56 நிமிடங்கள், 4 நொடிகளில் பூமி ஒரு தரம் சுற்றுகிறது. 3 நிமிடம் 56 நொடிகள் குறைவான நேரம். நமது நாள் மணி நேரக் கணக்கீடே மொத்தமாகத் தவறாகிறது அல்லவா? ஒரு நாள் 24 மணி என்பதே தப்பாகும்போது, ஏனைய காலக் கணக்குகள் எப்படிச் சரியாக அமைய முடியும்? நேரம், பூமிக்கு மட்டும் சொந்தமானதல்ல, மொத்தப் பிரபஞ்சத்துக்கும் பொதுவானது. பிக்பாங் பெருவெடிப்பு, 13.8 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமானது எனும் கால கணிப்புகள், மொத்தப் பிரபஞ்சத்துக்கும் சொந்தமானவை. அதனால், சரியான அளவீட்டைத் தரக்கூடிய ‘சீசியம் அணுக்கடிகாரம்’ (Cesium Atomic Clock) கண்டுபிடிக்கப்பட்டது.

அதன் மூலமே தற்சமயம் சரியான நேரத்தை கணிக்கிறோம். சீசியம் அணுவுக்குள் ஏற்படும் அதிர்வுத் துடிப்புகளைக் கணக்கிட்டு, அந்தக் கடிகாரம் இயங்குகிறது. ஒரு நொடிக்கு, மிகச்சரியாக 9,19,26,31,770 துடிப்புகளை சீசிய அணு கொண்டிருக்கிறது. இதுவே இன்றிருக்கும் மிகத்துல்லியமாக நேரத்தை அளவிடும் கடிகாரம். நேரத்தைத் துல்லியமாக அளக்க முடியும்போது, எதற்காக அதை மாயை என்று சொல்ல வேண்டும்? இந்த இடத்தில்தான் ஐன்ஸ்டைன் வந்து எட்டிப்பார்க்கிறார்.

‘ஒவ்வொரு நொடிக்கும் ஒரு நொடியாக, ஒரே இடைவெளியில் கடப்பதுதான் நேரமென்று நாம் நம்புகிறோம். நிஜத்தில் அது அப்படியல்ல. நேரம் ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்துவமானது’ என்று ஐன்ஸ்டைன் கூறினார். “நீங்கள் அசையாமல் நிற்கும்போது, உங்கள் நண்பர் வேகமாகக் கடந்து சென்றால், உங்கள் கடிகாரத்தின் நேரத்துக்கும், அவரது கடிகாரத்தின் நேரத்துக்கும் வித்தியாசம் இருக்கும்’ என்றார்.

இயங்கும் மனிதனின் வேகத்தைப் பொறுத்து, அவனது நேரமும் மாறிக் கொண்டிருக்கும். விரைவாகச் செல்பவனின் கடிகாரம் மெதுவாக ஓடும். வேகம் அதிகரித்துச் செல்லச் செல்ல, நேரமும் குறைந்துகொண்டே வரும். பிரபஞ்சத்தில் அதிக வேகமாகச் செல்வது ஒளியென்பது உங்களுக்குத் தெரியும்.


ஒளியின் வேகத்தை ஒருவன் அடைந்துவிட்டால், அவனுக்கான நேரமும், பூச்சியத்தை அண்மித்துவிடும். இதிலிருந்து, கடிகாரம் எனும் இயந்திரத்தில் நேரம் தங்கியிருக்கவில்லை என்பது புரிகிறதல்லவா? ஒவ்வொருவனின் இருத்தலையும் அசைவையும் பொறுத்து இயங்குவதே நேரம். ஐன்ஸ்டைன் இன்னும் ஒன்றையும் சொன்னார். ‘ஈர்ப்புவிசையாலும் நேரம் மாற்றமடைகிறது’ என்றார்.

கடல் மட்டத்தில் வசிக்கும் ஒருவரின் கடிகாரத்தைவிட, மலை உச்சியில் வசிப்பவரின் கடிகாரம் மெதுவாகவே நகரும். ஈர்ப்புவிசை குறையக் குறைய நேரமும் மெதுவாகும். உயரம்மேலே போகப் போக ஈர்ப்புவிசை குறைய ஆரம்பிக்கிறது. 20,000 கிலோ மீற்றர் உயரத்தில் பறக்கும் ஜிபிஎஸ் சட்டலைட்டுகளின் கடிகாரங்கள், இந்த நேர வித்தியாசங்களைக் கணக்கில்கொண்டே அமைக்கப்பட்டிருக்கின்றன.

எங்கெல்லாம் ஈர்ப்புவிசை அதிகமோ, அங்கெல்லாம் நேரம் அதிகமாக மாறிவிடும். இதன்படி, பூமியின் கடிகாரத்துக்கும் வியாழன் கோளின் கடிகாரத்துக்கும் அதிக வித்தியாசம் காணப்படும். பிரபஞ்சத்தின் ஒவ்வோர் இடமும் வெவ்வேறு ஈர்ப்புவிசையைக்கொண்டவை. பிரபஞ்ச வெளியின் ஈர்ப்புவிசைக்கு ஏற்ப அதன் வெளியும் வளைகிறது. அதனால், நேரமும் மாறுகிறது. சர்ரியலிச ஓவியரான சல்வடார் டாலியின் கடிகார ஓவியம்போல நேரமும் வளைகிறது எனலாம்.

இந்த அடிப்படைகளைவைத்தே நேரம் ‘ஒரு மாயை’ என்று அறிவியல் கூறுகிறது. ஆனாலும், இது இன்னும் ஆழமானது. அவற்றைச் சொல்வதால், நம்மை ஆழமான அறிவியலுக்குள் இறக்கிவிடும். இப்போது, உங்கள் கைக் கடிகாரத்திலோ செல்போனிலோ நேரம் என்னவென்று பாருங்கள்... ஓர் எளிய புன்னகையோடு அதைச் சந்தேகப்படுவீர்கள்!

# ஆன்ம விடுதலை எப்படிக் கிடைக்கும்?



கோயில் வாசலில் உள்ள பெட்டிக்கடையில், பக்திப் பழமாக உட்கார்ந்திருப்பார் ஒருவர். அவர், 'எனக்கு ஆசையே இல்லை. பந்தங்களில் இருந்து விடுபட நினைக்கிறேன். இன்னும் அதற்கான வேளை வரவில்லை!' என்றபடியே இருப்பார்.
ஒருநாள், கோயிலுக்கு வந்த சந்நியாசியிடமும் இதையே சொல்லிப் புலம்பினார் அந்த ஆசாமி. இதைக் கேட்டதும், "சரின்னு சொன்னா இப்பவே உன்னை அழைச்சிக்கிட்டுப் போயிடுறேன். என்ன சொல்றே?" - கேட்டார் சந்நியாசி.
"நானும் இதைத்தான் நினைச்சேன். ஆனா, வீட்ல விவரம் தெரியாத வயசுல புள்ளைங்க இருக்கறப்ப, எப்படி விட்டுட்டுப் போறதுன்னுதான் ஒரு யோசனை. அவங்களுக்கு கல்யாணம் காட்சின்னு ஆயிட்டா... அப்புறம் நிம்மதியா கிளம்பிடலாம்!" என்றார் ஆசாமி. சிரித்தபடியே கிளம்பிச் சென்றார் சந்நியாசி.
ஆண்டுகள் ஓடின!
ஒருநாள்... கோயிலுக்கு வந்தார் சந்நியாசி. அதே சந்நியாசி அதே பெட்டிக் கடை அதே ஆசாமி அதே புலம்பல்.
சந்நியாசி மெள்ள புன்னகைத்தபடி, ""சரி... இப்பவாவது புறப்பட்டேன்!" என்றார்.
""பிள்ளைங்களுக்குக் கல்யாணம் பண்ணி வச்சுட்டேன். பேரப்பிள்ளைங்களையும் கண்ணாலே பார்த்துட்டா. என் கவலையெல்லாம் தீர்ந்துடும்!" என்று விவரித்தார் நம்ம ஆள்!
சில ஆண்டுகளுக்குப் பிறகு, சந்நியாசி வந்தார்.
"இப்போதாவது வருகிறாயா?"- இது சந்நியாசி.
"கோர்ட்ல கேஸ் இருக்கு. வழக்கு முடிஞ்சிட்டா வந்துடலாம்"- பதிலுரைத்தார் ஆசாமி. வழக்கமான புன்னகையுடன் கிளம்பினார் சந்நியாசி.
ஆண்டுகள் பல கழிந்தன. மீண்டும் வந்தார் சந்நியாசி. ஆனால், அந்த ஆசாமியைக் காணோம். கடையில் இருந்தவரிடம் நம்மவர் குறித்து விசாரித்தார் சந்நியாசி.
கடையில் இருந்தவர், "சாமி... எங்க அப்பாதான் அவரு. 'எல்லா பந்தங்களையும் விட்டுட்டு உங்ககூட வந்துடணும்னு சொல்லிகிட்டே இருந்தாரு, போன வருஷம் ஒருநாள்... நெஞ்சு வலின்னவரு, பொட்டுனு போயிட்டாரு. அப்பா இந்நேரம் உயிரோட இருந்திருந்தா, நிச்சயம் உங்க கூட வந்துருப்பாரு சாமீ..."- கவலையுடன் சொன்னார் நம்மவரின் மகன்.
இதைக் கேட்ட சந்நியாசி, "உங்க அப்பன் எங்கேயும் போயிடலே. இங்கதான் இருக்கான். அதோ... அங்கே பார்... அதென்ன?"
""அது நாய்... இங்கேதான் சுத்திக் கிட்டிருக்கு!"
"அதான் உங்க அப்பன். இப்ப பாரு" என்றவர், கையைத் தட்டினார். அந்த நாய் வாலாட்டியபடியே ஓடி வந்தது. நாயின் தலையைத் தட்டினார்.
உடனே அது, "எனக்கு ஆசையே இல்லே.."என பேசத்தொடங்கியது.
"அடேய்... என்னோட வந்துடறியா?" - சந்நியாசி கேட்டார்.
"சாமி! ஏராளமா சொத்து சேத்து வச்சுட்டேன். பிள்ளைங்க அதை சரியா காப்பாத்துவாங்கன்னு தோணலீங்க.
கடையை சரியா பூட்டாமே போயிடறாங்க. அதுதான் நாயா பிறந்து காவல் காத்துக்கிட்டு கிடக்கிறேன்!"- இப்படி நாய் சொன்னதும், 'கடகட'வெனச் சிரித்தார் சந்நியாசி. பிறகு அவர் சொன்னார் ""அறியாமையில் சுகம் கண்டவர்களுக்கு ஆன்ம விடுதலை எப்படிக் கிடைக்கும்?" இன்றைக்கு ஆலயங்களைத் தேடிப் போகிற அன்பர்கள், முதலில்... அறியாமை சுகத்திலிருந்து விடுபட வேண்டும்... பிறகு, ஆன்மிக சுகத்தை அடையாளம் காணவேண்டும்!

# மீன் பொரிச்ச எண்ணெய்



-இந்திரபுத்திரன்-

சினிமா மனித வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்டது என்றே கூறவேண்டும். அதிலும் திரை அரங்கில் எமக்குப் பிடித்த நடிகரின் படத்தை முதல் நாள் முதல் காட்சியில் பார்ப்பதென்பது மிகவும் சவாலானதும் சுவாரஸ்யமானதுமான விடயம்.
திரை அரங்கு என்றதும் தற்போது யாழ். நகரின் திரையரங்கு ஒன்றில் பணியாற்றும் ஊழியர் ஏழு பேருக்கு கொரோனாத் தொற்றுறுதியே நினைவில் வரும்.
இது 1970களில் வின்சர் தியேட்டரில் நடந்த ஒரு சிரிப்பூட்டும் விடயம்.
அன்று இரவு பத்து மணிக்கு எம்.ஜி.ஆர். படம். இந்திரனின் தந்தை கண்டிப்பானவர். பின்னேரம் ஆரம்பித்த வெத்திலை கொழுந்து இறைப்பு இரவு எட்டு மணிக்கே முடிந்தது.
முடிந்த கையோடு தந்தையிடம் படம் பார்க்க அனுமதியை வாங்கி விட்டார் இந்திரன்.
உடனடியாக தகவல் சொட்டனுக்குப்போக குளித்து வெளிக்கிட ஆரம்பித்தான். மாவிட்டபுரத்திலிருந்து யாழ். நகர் சைக்கிளில் வர ஒரு மணித்தியாலமாவது வேண்டும்.
அந்தரப்பட்டு வெளிக்கிட்ட சொட்டன் நல்லெண்ணெய் என நினைத்து உறியில் தொங்கிய சூடைபொரித்த எண்ணெயைத் தலைக்கு வைத்துவிட்டார்.
அவசரத்தில் போனவர்களுக்குப் புரியவில்லை. யாழ். வின்சர் திரையரங்கில் சனக்கூட்டம். எம்.ஜி.ஆர்.படமென்றால் இருக்காதா பின்ன. அடித்துப்பிடித்து ரிக்கெட் எடுத்து திரையரங்கின் உள்ளே சென்றனர். படம் தொடங்கி சிறிது நேரத்தில் அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் ஏதோ முணுமுணுத்தனர்.
உன்னிப்பாக காதைக் கொடுத்தார் சொட்டன்.
சூடை பொரிச்ச மணம் எங்கிருந்து வருகிறது எண்டு பேசிக்கொண்டிருந்தார்கள்.
அப்போதுதான் சொட்டனுக்குப் புரிந்தது தான் எண்ணெய் மாறி வைத்த விடயம்.
பிறகென்ன இந்திரன் அதை ஊரில் பறைசாற்றிவிட சாதாரண சொட்டன் பொரிச்சமீன் சொட்டன் ஆகிவிட்டார்.



"பேஷன்ட் எப்படியிருக்கிறார் டாக்டர்?"
"ஓபரேஷனுக்கு முந்தி நல்லாத் தான் இருப்பார்!"



"எதிரிநாட்டு மன்னர் போருக்கு அழைப்பு விடுத்ததும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றதே, எதைப் பற்றி
பதுங்கு குழியில் என்னென்ன பொழுதுபோக்கு அம்சங்கள் இடம்பெற வேண்டும் என்பதைப் பற்றித்தான்



" என்ன அந்த அறையில் ஒரே சிரிப்பு சத்தம்?"
"தேர்தல் அறிக்கை தயாரிக்கிறாங்க"



ஒரு போருக்கும் மற்றொரு போருக்கும் இடைப்பட்ட நாட்களில் மட்டும் மன்னாக இருப்பேன் என்று பதவிப்பிரமாணம் எடுத்துக் கொள்வது கொஞ்சம்கூட நல்லாயில்லை மன்னா!



"அன்பே சிவம்"னு நான் எழுதிய ஓலைக்கு எதிரியிடமிருந்து பதில் வந்ததா அமைச்சரே?"
"அம்பே பலம்"னு பதில் வந்திருக்கு மன்னா!



"அண்டை நாட்டுக்கு மூன்றுநாள் பயணம் மேற்கொண்ட மன்னர் ஒரே நாளில் திரும்பிட்டாரே?
"என்ன செய்வது... அந்நாட்டு ராணுவம் அணிவகுத்து நின்றது அவரை வரவேற்கத்தான் என்பதை எடுத்துச் சொல்வதற்கு முன்பாகவே ஓடி வந்திட்டார்"

# சிங்கப் பெண்ணே...

2020... உலக வரலாற்றைப் புரட்டிப்போட்ட ஆண்டு. ஆனால், பெண்கள் வீட்டிலும் வேலை செய்தார்கள். அலுவலகப் பணிகளையும் கூடுதலாக வீட்டிலேயே செய்து முடித்தார்கள். இவையெல்லாம் தாண்டி நிர்வாகம் முதல் விண்வெளி வரை வெற்றிக்கொடி நாட்டினார்கள். சேவையிலும் மனிதநேயத்திலும் சிகரம் தொட்டார்கள். இப்படி யாதுமாகி நின்ற பெண்களை இங்கு மட்டுமல்ல உலகெங்கும் கண்டோம். நாளை சர்வதேச மகளிர் தினம். இத்தினத்தில் அந்த முத்திரை பெண்களில் முக்கியமான சிலரை இங்கு அறிவோம்...



**கமலா ஹாரிஸ்**

அது மூன்றாம் உலக நாடு அல்ல... அமெரிக்கா. அங்கேயும்கூட ஒரு பெண் உயர்ந்த பொறுப்புக்கு வருவதற்கு 230 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. அப்படித் தான் அமெரிக்க வரலாற்றில் துணைக் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற முதல் பெண் என்கிற மாபெரும் சாதனையைப் படைத்திருக்கிறார் கமலா ஹாரிஸ். 56 வயதான இவர், இந்திய ஆபிரிக்க அமெரிக்கர். 2016ஆம் ஆண்டு ஜனநாயகக் கட்சியின் சார்பாக, மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'சுதந்திரம் சமத்துவம் சமாதானம்' ஆகிய கருத்துகளை முன் வைத்து இயங்கி வருகிறார் கமலா. இவரது பூர்வீகம் உலகின் மூன்று பகுதிகளைச் சார்ந்ததாக இருப்பதால், உலகெங்கும் சொந்தம் கொண்டாடப்படுகிறார். இவரின் செயற்பாடுகள் அந்த மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கட்டும்.



**லுஜெயின் அல் ஹத்லோல்**

இந்த நூற்றாண்டிலும் பெண்கள் வாகனம் ஓட்டும் உரிமைக்காகவெல்லாம் போராட வேண்டியிருக்கிறது என்பது எவ்வளவு துயரம்... 2017ஆம் ஆண்டு 'வுமன் கான் டிரைவ்' என்ற ஹேஷ் டேக்கைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களில் தகவல்களைப் பரிமாறினார். அதோடு, 'பெண்கள் வாகனம் ஓட்டக்கூடாது' என்கிற சவுதி அரசின் கட்டுப்பாட்டைமீறி வாகனம் ஓட்டியதற்காக கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார் லுஜெயின். இவருக்கு வயது 31. போராட்டத்துக்குப் பிறகு பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டாலும் வாகனம் ஓட்டும் உரிமை கேட்டுப் போராடிய பெண்களைச் சிறையிலிருந்து விடுவிக்கவில்லை அந்த அரசு. லுஜெயினின் குற்றம் உறுதி செய்யப்பட்டு, ஐந்தாண்டு கால கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. மனித உரிமை ஆணையம் உட்பட பல்வேறு அமைப்புகளும் நாடுகளும் கொடுத்த நெருக்கடியின் விளைவால், இப்போது லுஜெயின் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.



**கீதாஞ்சலி ராவ்**

உலகப் புகழ்பெற்ற ஹடைம்' இதழ் ஆண்டுதோறும் சிறந்த மனிதர்களைத் தேர்ந்தெடுத்து வருகிறது. இந்த ஆண்டு முதன்முறையாக சிறந்த குழந்தையைத் தேர்வு செய்துள்ளது.இந்தப் பெருமையைப் பெற்றிருக்கிறார் 15 வயது கீதாஞ்சலி ராவ். இவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். இளம் விஞ்ஞானியாகவும் கண்டுபிடிப்பாளராகவும் செயற்படுகிறார். உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் காரீயம், குடிநீரில் கலந்திருப்பதை கீதாஞ்சலி கண்டுபிடித்த கருவியின் மூலம் கண்டறிய முடியும்.



**இமானுவேல் சார்பென்டியர்**

ஒரு பெண்ணால் கடினமான துறைகளிலும் கால்பதித்து சாதிக்க முடியும் என்பதற்கான உதாரண மனுஷி சார்பென்டியர். பிரான்ஸ் நாட்டவரான இவர் பேராசிரியராகவும் விஞ்ஞானியாகவும் பணியாற்றுகிறார். மரபணுவியல், நுண்ணுயிரியியல், உயிர்வேதியியல் எனப் பல்துறைகளில் ஆராய்ச்சிசெய்து வருகிறார். 2020ஆம் ஆண்டு வேதியியலுக்கான நோபல் பரிசு இம்மானுவேல் சார்பென்டியருக்கும் ஜெனிஃபர் டௌடுனாவுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது. மரபணுத் தொகுதியைத் துல்லியமாக நறுக்கிப் பிணைக்கும் கிரிசிப்பர் நுட்பத்தைக் கண்டுபிடித்ததற்காகவே இந்த நோபல் பரிசு.

2015ஆம் ஆண்டு முதல் பெர்லினில் உள்ள மார்க்ஸ் ப்ளான்க் இன்ஸ்டிட்யூட்டின் தொற்று உயிரியல் துறையின் தலைவராகப் பொறுப்பு வகிக்கும் பெருமைக்குரிய பெண் சார்பென்டியர். தொற்று உயிரியல்துறையின் தலைவராகப் பொறுப்பு வகிக்கும் பெருமைக்குரிய பெண் சார்பென்டியர்.



**ஜெனிஃபர் டௌடுனா**

இணைந்த கைகளில் இரண்டாவது கை இவருடையது. அமெரிக்க உயிர் வேதியியலாளரான ஜெனிஃபர், கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் மூலக்கூறு மற்றும் உயிரணுவியல் துறையின் பேராசிரியராகச் செயலாற்றுகிறார். இமானுவேல் சார்பென்டியருடன் இணைந்து வேதியியலுக்கான நோபல் பரிசை வென்றவர் இவரே.




**கெர்ஸ்டி கல்ஜுலைட்**

எஸ்டோனியா நாட்டின் ஐந்தாவது குடியரசுத் தலைவராக இருக்கிறார் இவர். 46 வயதில் இந்த உயர் பதவிக்குப் பொறுப்பேற்றதால், உலகின் இரண்டாவது இளம் பெண் குடியரசுத் தலைவர் என்ற சிறப்பைப் பெற்றிருக்கிறார் (இதற்கு முன் ஸ்லோவிக் குடியரசின் தலைவராக 45 வயது பெண்மணிஸுஸுனா கேபுடோவா தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரே உலகின் முதல் இளம் பெண் குடியரசுத் தலைவர்).



**கிறிஸ்டினா கோக்**

'விண்ணைத் தாண்டி வந்தவள்' என கிறிஸ்டினாவை நினைத்து நாம் பெருமிதம் கொள்ளலாம். விண்வெளியில் நடக்கும் மகளிர் மட்டும் திட்டத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, விண்வெளிக்குச் சென்ற பெண் இவர். சக விண்வெளி வீராங்கனை ஜெஸிகாவோடு விண்வெளிநடை மேற்கொண்டவரும்கூட. நீண்டகாலம் (328 நாட்கள்) விண்வெளியில் தங்கியிருந்த பெண் என்ற மகத்தான சாதனையை, கடந்த ஆண்டு நிகழ்த்தியவர். இப்போது நிலவில் பெண்ணை இறங்க வைக்கும் 'ஆர்டிமிஸ்' திட்டக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.



**காஜா கல்லாஸ்**

கொரோனா பெருந்தொற்றுக் காலகட்டத்தில் இவர் ஆற்றிய பணிகளின் பலனாக, இந்த ஆண்டு ஜனவரி மாதம் எஸ்டோனியாவின் பிரதமராகப் பொறுப்பேற்றிருக்கிறார் 43 வயதேயான காஜா கல்லாஸ். இவர் 'ரிஃபார்ம்' கட்சியின் தலைவராகவும் இருக்கிறார். இவரின் அமைச்சரவையில் 46.7 சதவிகிதத்தினர் பெண்களே.



**ஸ்வாதி மோகன்**

நாசாவின் ஹமார்ஸ் 2020' திட்டத்தின் வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டுச் செயற்பாட்டுத்தலைவராகச் செயற் படுகிறார் ஸ்வாதி மோகன். ரோவரைச் சுமக்கும் விண்கலத்தின் செவ்வாய்க் கோள் பயணத்தின்போது, கோளின் மேற்பரப்பில் தரையிறங்கும் போது அது சரியான திசையில் நிலைப்படுத்தப்பட்டிருப்பதை உறுதிசெய்வதற்கான பொறுப்பை மேற்கொண்டவர் இவரே. 2021 பெப்ரவரி 18 அன்று பெர்சிவீரன்ஸ் ரோவர் செவ்வாயில் பத்திரமாகத் தரையிறங்கியிருக்கிறது.




**கிரெட்டா துன்பெர்க்**

இந்த இளம் போராளி, பல பெண்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறார். பருவநிலை மாற்றத்துக்கு எதிராகப் போராடிவரும் கிரெட்டா துன்பெர்க் ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்தவர். வயது 18. உலகம் முழுவதும் ஏராளமான இளைஞர்களை சூழலைக் காக்கும் போராட்டத்தில் ஈடுபடுத்துவதே இவரின் முதன்மைப் பணி. போர்த்துகீசிய நாட்டின் மனிதநேயத்துக்கான 'குல்பென்கியன்' விருதைப் பெற்றிருக்கிறார் கிரெட்டா. இந்த விருதின் மூலம் கிடைத்த ஒரு மில்லியன் யூரோ பணத்தை, பருவநிலை மாற்றத்துக்கு எதிராகப் போராடும் தொண்டு நிறுவனாங்களுக்கு வழங்கிவிட்டார்.

# கடல் புறா

## வீரர்கள் திட்டம்

காலத்தின் பதிவு **60**




சாதாரண நாட்களாயிருந்தால் நிச்சயமாக இந்தத் திட்டத்தை நான் நிறைவேற்றியிருப்பேன். ஆனால் இன்று பாலூர் குழப்பமான நிலைமையிலிருக்கிறது. காவல் பலமாயிருக்கிறது. முதன் முதலில் கோட்டை வாசலிலேயே வண்டி சோதிக்கப்படலாம். சோதிக்கும முறை தெரியுமா?"

"சொல்லுங்கள்"

"நீர்க்குடங்களைக் காவலர் கழிகளால் தட்டிப் பார்ப்பார்கள்.நீர் இருக்கும் குடங்களின் சத்தம் வேறு அப்படி அவர்கள் வித்தியாசத்தைக் கண்டு பிடித்துவிட்டால் நாம் உடனே நடவடிக்கை தொடங்க வேண்டும்.!"

"என்ன நடவடிக்கை?"

"அருக்கிலிருக்கும் காவலரை நான் என் சிறு கத்திகளை வீசிக் கொன்றுவிடுவேன். நான் எச்சரிக்கைக் குரல் கொடுத்ததும் குடங்களிலிருந்து நீங்கள் எழுந்து மற்றக் காவலர்களில் இரண்டொருவரை வெட்டிவிட்டுக் கடற்கரை நோக்கி ஓட வேண்டும். மடக்கப்பட்டால் போரிட வேண்டும். ஒன்று தப்புவோம், இல்லையேல் மடிவோம்."

இதைக் கேட்ட மற்றவர் மௌனமாயிருந்தனர். அமீர் மேற்கொண்டு சொன்னான்: "கீழ்க் கோட்டை வாசலில் சோதனை நடக்காமல் தப்பி, கடற்கரையோரம் சென்றால் அங்கு எனது குருநாதரின் படகு நமக்காகக் காத்திருக்கும், நீர்க்குடங்கள் இறக்கப்பட்டதும் குடங்களை இறக்க ஆட்களை அழைக்கக் கூடாது. குடங்களிலிருந்து நீங்கள் வெளி வந்து படகில் ஏறிவிட வேண்டும். அங்குள்ள சுங்க அதிகாரிகள் ஒரு வேளை நம்மைக் கண்டு கொண்டால் அங்கும் சண்டையிருக்கும்.

படகில் ஏறிய பிறகும் நமக்குப் பாதுகாப்பு இல்லை. சுங்கக் காவலரின் படகுகள் நமது படகை உடனடியாகத் தொடரலாம். தொடர்ந்து கொண்டே அம்புகளை எய்யலாம். வேல்களையும் வீசலாம். அவற்றிலிருந்து பிழைத்து நமக்குப் படகின் துடுப்புகளை வேகமாகத் துழாவித் தப்பினால், பிறகு கஷ்டமில்லை" இதைச் சொன்ன அமீர், "திட்டம் சரிதானா குருநாதரே?" என்றும் வினவினான்.

"இந்த ஊர் உள்ள சூழ்நிலையில் இதைவிடச் சிறந்த திட்டத்தைத் தயாரிக்க முடியாது. ஆபத்து நிரம்பியது தான் இரண்டு இடங்களில் சோதனையும் சண்டையும் ஏற்படுகிறது. இருப்பினும் வேறு வழியில்லை. ஆனால் அமீர்! இவர்கள் இந்தத் திட்டத்தை ஒப்புக்கொள்வது கஷ்டம்?" என்றான் சீனக் கடலோடி.

"ஏன்?" என்று கேட்டான் அமீர்.

"அதோ அவர்கள் முகங்களைப் பார். அநபாயர், இளையபல்லவர், காஞ்சனாதேவி மூவர் முகங்களும் வீரக்களை சொட்டும் முகங்கள். நீர்க்குடத்தில் பதுங்க அவர்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்" என்றான் அகூதா.

"வேறு வழி?" கவலையுடன் எழுந்தது அமீரின் கேள்வி.

"நீர்க்குடங்களில் காஞ்சனாதேவியும் அவர் தந்தையும் நான் விடுதலை செய்த இந்த இரு தமிழரும் பதுங்கி வரட்டும். நீ வண்டியை ஓட்டு. அநபாயரும், இளைய பல்லவரும் உன் அடிமைகளைப் போல் மாறு வேடம் பூண்டு வண்டியின் பின்புறத்தில் உட்கார்ந்து வரட்டும். போரிட வேண்டியிருந்தால் இவர்கள் உடனடியாக வாளை உருவிக் காவலரைத் தாக்க முடியும். இது வீரர்கள் திட்டம். இதற்கு அவர்கள் மறுப்புக் கூறமாட்டார்கள்" என்றான் அகூதா.

அகூதாவின் திட்டத்தைக் கேட்ட அநபாயனும், இளைய பல்லவனும் அதை உடனே ஒப்புக் கொண்டார்கள்!"

"ஏன்? நானும் என் தந்தையும் மட்டும் கோழைகளா?" என்று கேட்டு தன் இடையிலிருந்த வாளையும் தட்டிக் காட்டினாள் காஞ்சனாதேவி.

அகூதாவே அவளுக்குச் சமாதானம் சொன்னான். தேவி! உங்கள் வீரத்தைப் பற்றி நான் சந்தேகப்படவில்லை. அன்று நீதி மண்டபத்தில் நீங்கள் செய்த சாகசச் செயலைக் கண்டு பாலூர் அதிசயப்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் இங்கு வரும்போதே மக்கள் அதைப் பற்றி வழிநெடுகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆகவே மற்றவர்களை விட உங்களைத் தான் அதிகமாக காவலர் தேடுவார்கள்.

காவலர் தீ வட்டியைத் தூக்கிப் பிடித்து சோதனை செய்தால் நீங்கள் என்னதான் மாறுவேடம் அணிந்தாலும் உங்கள் கண்கள் உங்களைக் காட்டிக் கொடுத்துவிடும். உங்கள் கண்களே உங்களுக்குப் பெரும் விரோதி என்று சொல்லி நகைத்த அகூதா பெண்கள் மறைவில் இருப்பது தவறல்ல தேவி. அதுமட்டுமல்ல நீங்கள் கடல் கடந்து சோழர் உதவி நாடி வந்திருப்பதை இவர்கள் பேச்சில் இருந்து புரிந்து கொண்டிருக்கின்றேன்.

ஆகவே உங்களை பத்திரமாக சோழ நாடு சேர்ப்பது இவர்கள் பொறுப்பு. அதுமட்டுமல்ல யாராவது நீர்க்குடங்களில் பதுங்க வேண்டும். எல்லோரும் மாறுவேடம் அணிந்து கும்பலாக வண்டியில் போக முடியாது. சற்று நீங்கள் விட்டுக் கொடுங்கள் இந்த வீரர்களுக்காக என்று இளையபல்லவனையும் அநபாயனையும் சுட்டிக்காட்டினான்.

காஞ்சனாதேவி முதலில் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் இளையபல்லவன் மெள்ள ஒப்புக் கொள்ள வைத்தான். அநபாயன் கேட்டான் நாம் எப்போது புறப்படவேண்டும்? என்று.

"நாளை இரவு." "ஏன் நாளை இரவு?"

"நாளைக்குப் பௌர்ணமி முடிந்து நான்காவது நாள் எட்டு நாழிகைக்குப் பிறகுதான் நிலவு புறப்படும். அதுவரை இருட்டு இருக்கிறது. இருட்டு நமது திட்டத்துக்குப் பெரிதும் உதவும்" என்றான் அமீர்.

"ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் அநபாயன். அதற்குமேல் பேச எதுவுமில்லாமாற் போகவே அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு அகூதா வெளியே சென்றான்.

அவர்கள் படுக்கத் தனித்தனி அறைகளை ஒதுக்கிய அமீர் மேற்கொண்டு தனது அலுவல்களைக் கவனிக்க வெளியே சென்றான். இரவின் ஜாமம் வெகு வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. தனக்கு ஒதுக்கப்பட்ட அறையில் தீவிர சிந்தனையுடன் பஞ்சணையொன்றில் படுத்துக் கிடந்தாள் காஞ்சனாதேவி.

அவள் அஞ்சன விழிகள் மூடிக் கொண்டிருந்தனவேயொழிய அவள் மனத்தின் சஞ்சல விழிகள் மூடாததால் வேதனையுடன் படுத்திருந்தாள் அவள். உள்ளம் எங்கோ ஓடிக்கொண்டிருந்ததால் அறையில் நிகழ்ந்த எதையும் அவள் கவனிக்கச் சக்தியற்றவளானாள்.

அப்படிப் கவனித்திருந்தால் மெள்ள சாளரத்தின மூலம் ஏறிக்குதித்து ஓசைப்படாமல் சுவரோரமாகப் பதுங்கிப் பதுங்கி அவள் பஞ்சணையை ஓர் உருவம் அணுகிக் கொண்டிருப்பதை அவள் உணர்ந்திருக்க மாட்டாளா என்ன?

### அமைதியும், அபாயமும்

பௌர்ணமி கழித்து மூன்று பகல்கள் பறந்துவிட்டதால் ஆறு நாழிகைகளுக்குப் பின்பே வான விளிம்பில் தலை நீட்டிய சற்றே தேய்ந்த வெண்மதி, இரவு பெரிதும் ஏறிவிட்ட அந்தச் சமயத்தில் சஞ்சலத்தின் வசப்பட்டுப் பஞ்சணையில் கிடந்த கடாரத்தின் அஞ்சுகத்தைக் காண அஞ்சிய காரணத்தால் தன் கிரணங்களால் அந்த அறைச் சாளரத்தின் கட்டைமீது மட்டும் மெள்ளத் தொட்டு ஏறித் திருடன் போல உள்ளே நோக்க முயன்று கொண்டிருந்தான்.

கட்டிலில் கிடந்த அந்தக் கட்டழகியை அந்தத் திருட்டு மதி காணும்படி விடக்கூடாதென்று திட்டமிட்டுச் சாளரத்தின் மேற்புறத்தில் தொத்தி ஏறிய பூங்கொடியொன்று சாளரத்தை அரைப்பாகம் மறைத்துவிட்டதன்றி, தொங்கிய தன் கரங்களால் சாளரக் கட்டையில் பாய்ந்திருந்த வெள்ளி கிரணங்களையும் அகற்றிவிட அப்படியும் இப்படியும் அசைந்துகொண்டிருந்தது.

அந்தக் கொடியின் மனநிலையைப் புரிந்துகொண்டது போல் சற்று தூரத்திலிருந்த பெரிய இலவ மரமொன்றும் அதற்குத் துணை செய்ய இஷ்டப்பட்டுத்தன் இலைகளைக் கொண்டு சந்திரன் சிருஷ்டியைப் பெரிதும் தடுத்ததல்லாமல், கடற்காற்றில் இலைகளைச் சலசலக்க விட்டு அறையில்துயின்ற பூங்கொடியின் சஞ்சல நிலை தனக்கும் புரிகிறதென்பதைப் புலப்படுத்திக் கொண்டு நின்றது. (தொடரும்)

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : ஹலோ மிஸ்டர் ஜமீன்தார்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : விஸ்வநாதன் இராமமூர்த்தி
பாடியவர் : பி.பி.ஸ்ரீனிவாஸ்



ஒஹோஹோஹோ ஹோ ஹோ ஹோ ஹோ
அஹா அஹா ஹ ஹா ஹா ஹா
ஒஹோ ஒஹோ ஒஹோஹோ

இளமை கொலுவிருக்கும் இனிமை சுவையிருக்கும்
இயற்கை மணமிருக்கும் பருவத்திலே பெண்
இல்லாமல் சுகமில்லை உலகத்திலே

இளமை கொலுவிருக்கும் இனிமை சுவையிருக்கும்
இயற்கை மணமிருக்கும் பருவத்திலே பெண்
இல்லாமல் சுகமில்லை உலகத்திலே

அணைத்து வளர்ப்பவளும் தாயல்லவோ?
அணைப்பில் அடங்குவதும் அவளல்லவோ?
அணைத்து வளர்ப்பவளும் தாயல்லவோ?
அணைப்பில் அடங்குவதும் அவளல்லவோ?
கவிஞர் பாடுவதும் கலைஞர் நாடுவதும்
இளைஞர் தேடுவதும் பெண்ணல்லவோ? பெண்
இயற்கையின் சீதனப் பரிசல்லவோ?

இளமை கொலுவிருக்கும் இனிமை சுவையிருக்கும்
இயற்கை மணமிருக்கும் பருவத்திலே பெண்
இல்லாமல் சுகமில்லை உலகத்திலே

பொன்னும் பொருளும் வந்து
மொழி சொல்லுமா? ஒரு
பூவைக்கு மாலையிடும் மணம் வருமா?
பொன்னும் பொருளும் வந்து
மொழி சொல்லுமா? ஒரு
பூவைக்கு மாலையிடும் மணம் வருமா?
இன்று தேடி வரும் நாளை ஓடிவிடும்
செல்வம் சிரித்தபடி அழுதிடுமா? எந்த
செல்வமும் பெண்மையின் சுகம் தருமா?

இளமை கொலுவிருக்கும் இனிமை சுவையிருக்கும்
இயற்கை மணமிருக்கும் பருவத்திலே பெண்
இல்லாமல் சுகமில்லை உலகத்திலே

இளமை கொலுவிருக்கும் இனிமை சுவையிருக்கும்
இயற்கை மணமிருக்கும் பருவத்திலே பெண்
இல்லாமல் சுகமில்லை உலகத்திலே

# விலையுயர்ந்த 7 உணவுகள்

"நான் எல்லாம் வாழுறதே சாப்பிடறதுக்குத்தான்" எனச் சொல்லும் உணவுப் பிரியரா நீங்கள், எந்த ஊருக்குப் போனாலும் முதலில் உணவகம் தேடி, அந்த ஊரின் ஸ்பெஷலிட்டி உணவை ருசி பார்க்கும் இரசிகரா? அப்படியானால் இது கட்டாயம் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய மெனு. உலகின் மிக பெறுமதியான உணவுப் பதார்த்தங்களின் முழு விபரங்களுடனான மெனு... என்ஜோய்!

### ரோயல் பிரியாணி

விலை: சுமார் ரூ. 20 ஆயிரம்.

இடம்: மும்பை பர்ரோ உணவகம், டுபாய்.



பிரியாணியில் 23 கரட் சாப்பிடக் கூடிய தங்கம் சேர்க்கப்பட்டுள்ளது. பிரியாணியுடன் காஷ்மீர் ஆட்டு கபாப், பழைய டில்லி ஆட்டுக்கறி, ராஜ்புத் சிக்கன் கபாப், மொகாலி கோப்தாஸ் மற்றும் மலாய் சிக்கன் ஆகியவையும் வழங்கப்படும்.

### லிண்டெத் ஹொவி சொக்லேட் புட்டிங்

விலை: சுமார் ரூ. 25 இலட்சத்து 36 ஆயிரம்.

இடம்: லிண்டெத் ஹொவி ஹோட்டல், இங்கிலாந்து.



பெல்ஜியம் நாட்டின் சிறந்த வகையான சொக்லேட், விலையுயர்ந்த ஷாம்பெய்ன் ஜெல்லி, காவியர் (caviar), இவற்றோடு தங்க இதழ்கள் சேர்த்து தயாரிக்கப்பட்டது. செர்ரிக்குப் பதிலாக 2 கரட் வைரம் வைத்து அலங்கரிக்கப்பட்டது. 2 வாரங்களுக்கு முன்னரே முன்பதிவு செய்தால் மட்டுமே கிடைக்கும்.

### டாகோ

விலை: சுமார் ரூ. 18 இலட்சத்து 11 ஆயிரம்

இடம்: கிராண்ட் விலாஸ் லாஸ் காபோஸ், மெக்ஸிகோ.



தங்க இதழ்கள் மற்றும் சோளம் கலந்து செய்யப்பட்ட டோர்டில்லா எனப்படும் ஒரு வகை பிரட். உலகின் விலையுயர்ந்த ஜப்பானிய கோப் மாட்டிறைச்சி, லாப்ஸ்டர் இறால், பிளாக் ட்ரஃபிள் சீஸ், அல்மாஸ் பெலுகா காவியர் எனும் அரிய வகை மீன் முட்டை (உலகின் மிக விலை உயர்ந்த உணவு பொருள்). இந்த காவியர் மட்டுமே ஒரு கிலோகிராம் 25 இலட்ச ரூபாய் மதிப்புள்ளது. இதற்கு பயன்படுத்தப்படும் சோஸ் தயாரிக்க மிகவும் அதிக விலையுள்ள மிளகாய், உலகின் விலை உயர்ந்த டக்கீலா மற்றும் உலகின் அதிக விலையுடைய கோபி லுவாக் காபி ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன.

### ஸ்டில்ட் ஃபிஷெர்மன் இன்டல்ஜன்ஸ்

விலை: சுமார் ரூ. 10 இலட்சத்து 60 ஆயிரம்

இடம்: தி ஃபோர்ட்ரெஸ் ஹோட்டல், இலங்கை.



இலங்கையின் பிரத்தியேக மீன்பிடி முறையான ஸ்டில்ட் ஃபிஷ்ஷிங் செய்யும் மீனவர்களின் உருவம் மற்றும் உயர்ரக சொக்லேட் கொண்டு செய்யப்படும் டெஸெர்ட் உணவு இது. உடன் இத்தாலியன் கஸாட்டா எனும் இனிப்பு வகை, ஐரிஷ் பெய்லி கிரீம் எனும் மதுபான வகை மற்றும் மாம்பழம், மாதுளை பழங்களால் தயாரிக்கப்பட்ட கம்போட் எனும் பிரெஞ்சு இனிப்பு ஆகியவை சேர்த்து இந்த டெஸெர்ட் உணவு தயாரிக்கப்படுகிறது. இதன் மீது இறுதி அலங்காரமாக தங்க இதழ்கள் தூவப்படுகின்றன. இவற்றோடு வாடிக்கையாளர் எடுத்துச் செல்ல 80 கரட் நீலக் கல் அலங்காரமாக வைக்கப்படுகிறது.

### லூயிஸ் XIII பிட்சா

விலை: சுமார் ரூ. 8 இலட்சத்து 79 ஆயிரம்.

இடம்: ரெனாட்டோ வயோலா, இத்தாலி.



இந்த பிட்சாவிற்கான பிரட் தயாரிக்க மட்டும் 72 மணி நேரம் செலவாகிறது. இந்த பிட்சாவிற்கு ஆர்டர் கொடுத்தால் ஒரு பிட்சா செஃப், ஒரு வைன் (wine) ஸ்பெஷலிஸ்ட் வீட்டிற்கே வந்து சமைத்து பரிமாறுவார்கள். இதற்கென பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட உணவுக் கலன்களும் கொண்டுவரப்படும். இந்த பிட்சா தயாரிக்க உலகின் விலையுயர்ந்த பெலுகா காவியர் மற்றும் வேறு இரு வகையான காவியர்கள் பயன்படுத்தப்படுகின்றன. எருமைப்பாலில் தயாரிக்கப்பட்ட ஆர்கானிக் மோசரெல்லா சீஸ் மற்றும் வேறு உயர்ரக 7 வகை சீஸ்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவுஸ்திரேலியாவின் முர்ரே ஆற்றிலிருந்து எடுக்கப்பட்ட சுவைமிகுந்த பிங்க் உப்பு சேர்க்கப்படுகிறது. இவற்றோடு சிலேண்டோ இறால், மான்டிஸ் இறால் மற்றும் லோப்ஸ்டர் என விலையுயர்ந்த கடல் உணவுகள் சேர்த்து தயாரிக்கப்படுகிறது. இவற்றோடு உயர் ரக மதுபானம் இரண்டும் சேர்த்து பரிமாறப்படுகிறது.

### ஃப்ளூர் பர்கர் 5000

விலை: சுமார் ரூ. 3 இலட்சத்து 67 ஆயிரம்.

இடம்: ஃப்ளூர் ரெஸ்டோரண்ட், லாஸ் வேகாஸ், அமெரிக்கா.



ப்ரோய்ஷ் ரக ஃபிரெஞ்சு சிறப்பு பன் இந்த பர்கருக்கு பயன்படுத்தப்படுகிறது. உலகின் விலையுயர்ந்த வாக்யூ மாட்டிறைச்சி, பிரத்தியேகமாக உணவூட்டப்பட்டு வளர்க்கப்பட்ட வாத்து ஈரல் மற்றும் வாத்து கொழுப்பு மற்றும் விலையுயர்ந்த கறுப்பு டிரஃபுல் எனும் பூஞ்சை வகை உணவு ஆகியவை சேர்த்து இந்த பர்கர் தயாரிக்கப்படுகிறது. இதனோடு மிகவும் விலையுயர்ந்த அரிய வகை மது வகையான 1995 பெட்ருஸ் சேர்த்து பரிமாறப்படுகிறது.

### வின்ஸ்டன் காக்டெய்ல்

விலை: சுமார் ரூ. 8 இலட்சத்து 81 ஆயிரம்.

இடம்: கிளப் 23, மெல்பேர்ன், அவுஸ்திரேலியா.




உலகின் மிக விலையுயர்ந்த மதுபானம் என கின்னஸ் சாதனை படைத்தது இந்தப் பானம். வின்ஸ்டன் சர்ச்சில் நினைவாக வின்ஸ்டன் என பெயர் பெற்றது. குளிரூட்டப்பட்ட க்ரே கூஸ் வோட்காவுடன் சிறிதளவு எலுமிச்சை சாறு சேர்த்து கலக்கப்பட்டது. இதன் விலைக்குக் காரணம், மிகவும் விலையுயர்ந்த ஒரு கரட் வைரம் உங்கள் கோப்பையின் அடியில் கிடைக்கும். நீங்கள் அருந்தும்போது, "டைமண்ட் இஸ் ஃபாரெவர்" பாடல் பின்னணியில் லைவ் குழுவினரால் வாசிக்கப்படும்.

## நயன்தாராவுக்குப் போட்டியாக பூஜா ஹெக்டே



தமிழ் சினிமாவில் அதிக சம்பளம் வாங்கும் ஒரே நடிகை நயன்தாரா. ஒரு படத்திற்கு அவர் வாங்கும் சம்பளம் 5 கோடி வரை என்கிறது ஹொலிவுட் வட்டாரம். மற்ற நடிகைகள் அவருடைய சம்பளத்தில் பாதி வரை தொட்டாலே அதிகம். தெலுங்கில் முன்னணி நடிகையாக இருக்கும் பூஜா ஹெக்டே, தமிழில் "முகமூடி" படத்தில் அறிமுகமானவர். அதன்பின் இங்கு நடிக்க வரவேயில்லை. தற்போது நெல்சன் இயக்கத்தில் விஜய் நாயகனாக நடிக்க உள்ள படத்திற்கு பூஜா ஹெக் டேவை கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தம் செய்துவிட்டதாகத் தகவல் வெளியாகி உள்ளது. அதற்காக அவருக்கு 3.5 கோடி சம்பளம் தரப்பட்டுள்ளதாக டோலிவுட் வட்டாரங்களில் தெரிவிக்கிறார்கள். அதோடு, பூஜாவிற்கு தெலுங்கு, ஹிந்தியிலும் மார்க்கெட் உள்ளதால் அவ்வளவு சம்பளத்தைக் கொடுத்துள்ளதாகச் சொல்கிறார்கள். பூஜா மீண்டும் தமிழுக்கு வந்தால் நயன்தாராவுக்குப் போட்டியாக மாறவும் வாய்ப்புள்ளது.

## திரைக்கு வருகிறது "அருவி" ரீ–மேக்




2017 ஆம் ஆண்டு வெளியாகி பலருடைய கவனத்தை ஈர்த்த அருவி திரைப்படம் இந்தியில் ரீமேக் ஆவதை உறுதி செய்திருக்கிறார்கள். அதிதி பாலன் நடிப்பில் 2017 ஆம் ஆண்டு வெளியான படம் 'அருவி'. அருண் பிரபு இயக்கிய இப்படத்தை ட்ரீம் வாரியர்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்து இருந்தது. இப்படம் விமர்சனம் ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் வெற்றி பெற்றது. இந்த திரைப் படம் இந்தியாவிலும் சர்வதேச திரைப்பட விழாவிலும் பெரும் விமர்சனங்களை பெற்றது. அருவி படம் இந்தியிலும் ரீமேக் செய்யப்பட இருப்பதாக தகவல் வெளியானது. தற்போது அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது. தங்கல் புகழ் இளம் மற்றும் திறமையான நடிகை, பாத்திமா சனா ஷேக் அதிகாரப்பூர்வ இந்தி ரீமேக்கில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இ.நிவாஸ் இப்படத்தை இயக்குகிறார்.






## சின்னத்திரை நடிகைகளின் லேட்டஸ்ட் போட்டோ ஷூட்










# பொல்லாதவன் இந்த பொலார்டு...




இந்த 6 சிக்ஸர் அடிவாங்குவதற்கு முந்தைய ஓவரில்தான் ஹட்ரிக் விக்கெட்டுகள் எடுத்திருந்தார் அகில தனஞ்செய. எவின் லூயிஸ், கிறிஸ் கெய்ல், நிக்கோலஸ் பூரன் என வெஸ்ட் இண்டீஸின் முக்கிய பட்ஸ்மன்கள் மூவரையும் அடுத்தடுத்த டெலிவரிக்களில் வெளியேற்றி மிரட்டியிருந்தார்

இருபது-20 யுகத்தில் கிரிக்கெட் மொத்தமும் பட்ஸ்மன்களின் கேமாக மாறிவிட்ட நிலையில், கடந்த காலங்களில் அசாத்தியமாக பார்க்கப்பட்ட சாதனைகள் அனைத்தும் இன்றைய பட்ஸ்மன்களால் அசால்ட்டாக அடித்து நொறுக்கப்பட்டு வருகிறது. அதேநேரத்தில், 6 பந்துகளில் 6 சிக்சர்கள் என்கிற சாதனை மட்டும் இந்த தலைமுறை பட்ஸ்மன்களுக்கு இன்னமும் கைகூடவே இல்லை.

2007 ஆம் ஆண்டு கிப்ஸும், யுவராஜ் சிங்கும் 6 பந்துகளில் 6 சிக்சர்களை அடித்திருந்தனர். கிட்டத்தட்ட 14 வருடங்களாக இந்தச் சாதனையை எந்த மாடர்ன் இருபது-20 பட்ஸ்மனாலும் நிகழ்த்திக்காட்ட முடியவில்லை. கொஞ்சம் தாமதமானாலும் சாதனைகள் எப்போதும் சரியான நேரத்தில் சரியான நபர்களால் நிகழ்த்தப்பட்டுக் கொண்டேதானே இருக்கும்!

ஆம், இந்த 14 ஆண்டுகளில் யாரும் செய்யாத சாதனையான 6 பந்துகளில் 6 சிக்சர்களை அடித்து மிரட்டிவிட்டார் கரிபியனின் கீரன் பொலார்ட். கிப்ஸ், யுவராஜ் சிங் வரிசையில் ஒரே ஓவரில் 6 சிக்சர்களை பறக்கவிட்டு மாஸ் என்ட்ரி கொடுத்திருக்கிறார் பொலார்ட்.

இந்திய நேரப்படி அதிகாலை நடைபெற்ற இலங்கைக்கு எதிரான முதல் இருபது-20 போட்டியில் இலங்கையின் ஆஃப் ஸ்பின்னரான அகில தனஞ் செய வீசிய ஒரு ஓவரின் 6 பந்துகளையும் சிக்சராக்கியிருக்கிறார் பொலார்ட். இதில் என்ன விசேஷம் என்றால், இந்த 6 சிக்ஸர் அடிவாங்குவதற்கு முந்தைய ஓவரில்தான் ஹட்ரிக் விக்கெட்டுகளை எடுத்திருந்தார் அகிலா தனஞ்செய. எவின் லூயிஸ், கிறிஸ் கெய்ல், நிக்கோலஸ் பூரன் என வெஸ்ட் இண்டீஸின் முக்கிய பட்ஸ்மன்கள் மூவரையும் அடுத்தடுத்த டெலிவரிக்க ளில் வெளியேற்றி மிரட்டியிருந்தார். ஆனால், பொலார்ட் இதையெல்லாம் நினைத்து ஒரு இன்ச் கூட கவலைப்பட்டதாக தெரியவில்லை.

ஆட்டத்தின் ஆறாவது ஓவரில் இரும்புக்கை மாயாவியாக க்ரீஸுக்குள் நின்றுகொண்டே லாங்-ஆன், லாங்-ஆஃப் என பௌலரின் தலைக்கு மேலே 6 சிக்சர்களையும் பறக்கவிட்டார். வேறு ஏதாவது பட்ஸ்மனாக இருந்தால் ஹட்ரிக் எடுத்த பௌலர் என்பதற்காக சுமாரான பந்தாக வீசினாலும் டிஃபன்ஸ் செய்து ஜாக்கிரதையாக ஆடியிருப்பார். ஆனால், பொலார்டுக்கு அதெல்லாம் ஒரு பொருட்டே இல்லை. சிக்சர் அடிக்க வேண்டியது என் வேலை, எதிரில் யார் இருந்தாலும் அதைப்பற்றி எனக்கு கவலையில்லை என்கிற இந்த அணுகுமுறைதான் பொலார்டின் சிக்சர்களுக்கு பின்னால் ஒளிந்திருக்கும் ரகசியம்.

கிரிக்கெட் உலகில் சமீபத்தில் மிகப் பெரிய அளவில் வெற்றிகரமான வீரராக வலம் வந்துகொண்டிருப்பவர் பொலார்ட் மட்டுமே. டெஸ்ட் ஸ்பெஷலிஸ்ட்கள் என்பதையே மறந்து ஒட்டுமொத்தமாக இருபது-20 அணியாக வெஸ்ட் இண்டீஸ் உருமாறி கரீபிய வீரர்கள் உலகம் முழுவதும் ப்ரீமியர் லீக் போட்டிகளில் கலந்துகொண்டு அதிரடியில் வெளுத்து வாங்கினாலும் கெய்ல், ரஸல், பிராவோ, பூரன், ஹெட்மயர் என அசால்ட்டாக சிக்சர்களை பறக்கவிடும் பல வீரர்கள் இருந்தாலும் அவர்கள் யாராலும் செய்ய முடியாத 6 சிக்சர்கள் சாதனை பொலார்டால் மட்டுமே செய்ய முடிந்திருக்கிறது. காரணம், அவர் ஒரு பட்ஸ்மன் மட்டுமில்லை. அவர் ஒரு கப்டனும் கூட. லொக்டௌனுக்குப்பிறகு நடைபெற்ற கரீபியன் ப்ரீமியர் லீகில் பொலார்ட் கப்டனாக தலைமை தாங்கிய டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணியே சம்பியன் பட்டத்தை வென்றது.

இந்த சீசனில் ஒரு போட்டியை கூட டிரின்பாகோ அணி தோற்கவில்லை. இதுவே மிகப்பெரிய சாதனை. அண்மையில் நடந்து முடிந்த சுப்பர் 50 உள்ளூர் தொடரில் பொலார்ட் கப்டான ட்ரினிடாட் அணியே கோப்பையை வென்றிருந்தது.

இதிலும், அந்த அணி ஒரு போட்டியை கூட தோற்கவில்லை. இடையில், ஐ.பி.எல்.இல் மும்பை அணியிலும் சில போட்டிகளில் கப்டனாக இருந்தார். மும்பை அணியும் சம்பியன் ஆகிவிட்டது. இப்படி கடந்த 6 மாதத்தில் பொலார்ட் தொட்டதெல்லாம் ஹிட்தான் என்கிற நிலையே இருக்கிறது.

இந்த கப்டன்ஷிப் அனுபவங்கள் பொலார்டை ஒரு பட்ஸ்மனாகவும் கூடுதலாக மெருகேற்றியிருக்கிறது. அவரால் எளிதில் எதிரணியின் திட்டங்களையும், எதிரில் இருக்கும் பௌலர்களின் மனநிலையையும் கணித்துவிட முடிகிறது.

“ஹட்ரிக் சிக்சர்களை அடித்தவுடனேயே பௌலரின் மீது ப்ரஷர் விழுந்திருக்கும் என்பதால் அப்போதே 6 சிக்சர்களையும் அடித்துவிட வேண்டும் என முடிவெடுத்துவிட்டேன்” என்று சிக்ஸ் சிக்ஸர் சீக்ரெட்டை சொன்னார் பொலார்ட்.

உள்ளூர் போட்டிகளில் அறிமுகமாகி சிறப்பாக செயற்பட்ட பிறகு 2007 உலகக்கோப்பையின் போது வெஸ்ட் இண்டீஸ் அணியில் பொலார்டுக்கு இடம் கிடைத்தது.

அடுத்தடுத்த சில ஆண்டுகள் சிறப்பாக அமையாவிட்டாலும் 2010 இற்குப்பிறகு இருபது-20 போட்டிகளில் தவிர்க்க முடியாத வீரராக பொலார்ட் வளர்ந்தார்.

முக்கியமான வீரராக உருவெடுக்கும்போதே வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் போர்டில் இருந்த சில பிரச்சினைகள் காரணமாக ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டு அணியிலிருந்தே நீக்கப்பட்டார்.

இதனால் 2015 உலகக்கோப்பை தொடரில் கூட பொலார்டால் ஆட முடியவில்லை. ஆனால், அடக்கினால் அடங்குகிற ஆளா பொலார்ட்டு. உலகம் முழுவதும் ப்ரீமியர் லீக் போட்டிகளில் வெளுத்தெடுத்தார்.

குறிப்பாக, மும்பை இந்தியன்ஸ் சம்பியனான அனைத்து சீசனிலும் வெறித்தனமான பங்களிப்பை அணிக்காக செய்திருந்தார். கிரிக்கெட் போர்டில் சில மாற்றங்களுக்கு பிறகு மீண்டும் வெஸ்ட் இண்டீஸ் அணியில் இடம் பிடித்தார்.


யாரின் ஒப்பந்தத்தை ரத்து செய்து அணியை விட்டே வெளியேற்றினார்களோ அவர்தான் இப்போது வெஸ்ட் இண்டீஸ் அணியின் லிமிட்டெட் ஓவர் கப்டன்!

வெஸ்ட் இண்டீஸ் வீரர்கள் சும்மா பட்டை தூக்கினாலே என்டர்டெயின்மென்ட்தான். இப்போது பொலார்ட் 6 சிக்சர்களை அடித்து கிரிக்கெட் ரசிகர்களை வெகுவாக குஷிப்படுத்திவிட்டார்.

குறிப்பாக, மும்பை இந்தியன்ஸ் ரசிகர்கள் “இப்பவே கப்ப தூக்கி எங்க கைல குடுங்கப்பா” என்கிற லெவலுக்கு ஜாலியாகிவிட்டனர்.

பொலார்ட் இதே போர்மை தொடர்ந்தால் 2021 ஈ சாலா கப்பும் நம்தில்லையா கோலியன்ஸ்?!

## குழப்பத்தில் புஜாரா



ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு ஐ.பி.எல். தொடரில் விளையாட செத்தேஷ்வர் புஜாராவை ஏலத்தில் எடுத்திருக்கிறது சென்னை சுப்பர் கிங்ஸ். 50 இலட்சம் ரூபாய்க்கு புஜாரா ஏலம் எடுக்கப்பட்டதும் ஐ.பி.எல். தலைவர் பிரிஜேஷ் பட்டேல் தொடங்கி எல்லா அணியின் உரிமையாளர்களும் கைதட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

டெஸ்ட் ஸ்பெஷலிஸ்ட் எப்படி இருபது-20 ஆடப்போகிறார் என இந்திய ரசிகர்கள் காத்திருந்த நிலையில், இந்த ஆண்டு புஜாரா ஐ.பி.எல். தொடர் முழுவதும் பங்கேற்பதே சந்தேகம்தான் என்கிற தகவல்கள் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன.

செத்தேஷ்வர் புஜாரா, ராகுல் டிராவிட்டுக்குப்பிறகு டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தியாவின் மினி சுவர் என அழைக்கப்படுகிறார். டெஸ்ட் கிரிக்கெட்டில் இவரது விளையாட்டைப் பார்த்தவர்களுக்கு இவர் குறைந்த ஓவர் போட்டிகளில் ஆடப் போகிறார் என்றால் வியப்பாகத்தான் இருக்கும். அந்த அளவுக்கு நிதானமாக ஆடுவார். ஆனால், இப்போது டெஸ்ட் சம்பியன்ஷிப்பா, ஐ.பி.எல். தொடரா... எது முக்கியம் என்கிற கேள்வி புஜாராவின் முன்வந்து நிற்கிறது.

டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இங்கிலாந்துக்கு எதிராக இந்தியா இன்னும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடயிருக்கிறது. இரண்டு டெஸ்ட்களுமே அஹமதாபாத்தில் நடைபெற இருக்கிறது. இந்த இரண்டு டெஸ்ட்களிலும் இந்தியா வென்றுவிட்டால் ஜூன் 18 ஆம் திகதி லண்டனில் நடைபெற இருக்கும் இறுதிப்போட்டியில் நியூஸிலாந்தை எதிர்த்து விளையாடும்.


அதுமட்டுமல்லாமல் தொடர்ந்து இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரும் அங்கே நடைபெற இருக்கிறது. இந்நிலையில் ஐ.பி.எல்.போட்டிகள் இந்தமுறை ஏப்ரல் தொடங்கி ஜூன் முதல் வாரம் வரை நடைபெற இருப்பதால் ஒருவேளை இந்தியா இறுதிப்போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுவிட்டால் அதற்கு பயிற்சிகள் எடுக்க, புஜாரா மே மாதமே கவுன்ட்டி கிரிக்கெட் விளையாடச் செல்வார் எனத் தெரிகிறது.

“குறைந்த ஓவர் போட்டிகளில் விளையாட வேண்டும் என்பது எனது நீண்ட நாள் விருப்பம். ஐ.பி.எல்.இன் ஒரு பகுதியாக இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கும் நன்றி. இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளுக்கு முன்பு எனக்கு கால அவகாசம் இருக்கிறது.

அதனால் அந்தக் காலத்தில் கவுன்ட்டி கிரிக்கெட்டும் ஆட நினைக்கிறேன். ஆனால், தற்போது என் கவனம் முழுவதும், அடுத்த இரண்டு டெஸ்ட் போட்டிகளில் வென்று டெஸ்ட் சம்பியன்ஷிப் வாய்ப்பைத் தக்க வைப்பதில்தான் இருக்கிறது. அதன்பிறகு தான் ஐ.பி.எல்.பற்றிச் சிந்திப்பேன்” எனத் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் டெஸ்ட் ஸ்பெஷலிஸ்ட்டாக இருப்பவர் புஜாரா. அதனால், இந்தியா இறுதிப்போட்டியில் ஆடத்தகுதிபெற்றுவிட்டால் பி.சி.சி.ஐ., புஜாராவை விடுவிக்க சென்னை சுப்பர்கிங்ஸிடம் கோரிக்கைவைக்கும் என்றே தெரிகிறது.

# அலெக்சாண்ட்ரியாவின் கலங்கரை விளக்கம்





கடலுக்குள் மூழ்கி கிடக்கும் அலெக்சாண்ட்ரியாவின் கலங்கரை விளக்கத்தின் கற்கள்.

*(28.02.2021 திகதிய தொடர்ச்சி)*

அதற்குப்பிறகு கலங்கரை விளக்கத்தின் சுவடுகளைத் தேடி பல்வேறு ஆராய்ச்சிகள் நடைபெற்றாலும் பிரெஞ்சு தொல்லியல் நிபுணர் ஜீன்யூல்ஸ் எம்பெரர் தலைமையில் 1994 ஆம் ஆண்டு நடந்த அகழ்வாராய்ச்சியில் பல ஆதாரங்கள் கிடைத்தன.

ஐநூற்றுக்கும் மேற்பட்ட கலங்கரை விளக்கத்தின் பாகங்களை அவரது குழுவினர் கண்டுபிடித்தனர். அவ்வாறு எடுக்கப்பட்ட பாகங்களில் முக்கியமான சில பகுதிகள் மட்டும் அலெக்சாண்ட்ரியாவின் கோம் எல்டிக்கோ அருங்காட்சியகத்தில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

யுனெஸ்கோவின் தொல்லியல் துறை அலெக்சாண்ட்ரியாவை புராதான நகராக அறிவித்து அதன் கடல் பிரதேசத்தையும் கலங்கரை விளக்கம் இருந்த நிலப்பகுதியையும் சேதமடையாமல் கவனமாகக் கையாளும்படி எகிப்து அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது. நவீன கருவிகள் எதுவுமின்றி மனித மூளை மற்றும் உடலுழைப்பைக் கொண்டு மிகப் பிரம்மாண்டமான முறையில் அசாத்திய கட்டடங்களை பண்டைய கிரேக்க தேசத்து மக்கள் கட்டி உலகை வியப்பில் ஆழ்த்தியிருக்கின்றனர். நவீன காலத்து கலங்கரை விளக்கங்கள் முற்றிலும் வேறுபட்டவை.


அவை விஞ்ஞான வளர்ச்சியால் உருவாக்கப்பட்ட இராட்சத இயந்திரங்கள் கொண்டு கட்டப்பட்டவை. அலெக்சாண்ட்ரியாவின் கலங்கரை விளக்கத்துக்கு அவை ஒருபோதும் ஈடாக முடியாது.

(முற்றும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2247

### துஷாந்தன்

அனு அனுவாய் இரசித்து வாழ வேண்டிய வாழ்க்கையில் சற்று அனுசரித்தும் வாழ்வது என்பது மிகவும் அவசியமாகிறது!!!




### அனுசிகா



கெட்டவனுக்கு கூட நன்மை செய், அது தப்பல்ல. ஆனால் நல்லவனுக்கு மட்டும் கெடுதல் செய்யாதே, அது தர்மமல்ல.

### மனஸ்வினி

யார் உன்னை மிதிச்சாலும் மனம் தளராமல் வாழ்க்கையில முன்னாடி போக வேண்டும் என்று முதன் முதலில் எனக்கு பாடம் கற்றுக் கொடுத்த குரு... "சைக்கிள்" தான்...



### துர்க்கா

ஒரு கிலோ தேனை பெறுவதற்காக தேனீக்கள் 4 மில்லியன் பூக்களில் தேன் குடிக்கிறது...



அற்ப மனிதன் ஒரு தோல்விக்கே துவண்டு விடுகிறான்...!

### சாருஜா

ஜப்பான்காரன் வேலை செய்யலைன்னா செத்துடுவான்...



நம்ம சொந்தக்காரன் நாம சந்தோஷமா இருந்தா செத்துடுவான்...

### ரவி

அனுபவித்த துன்பங்களை மறந்து விடு...



அனுபவம் அளித்த பாடங்களை மறந்து விடாதே...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 244

# சிந்தனைக்கு...

### வெற்றிலை பாவம்

பலகோடி பற்களை அழித்து பல்லாயிரக்கணக்கானவர்களின் அழகையும் ஆளுமையையும் கெடுத்து வாய், குடல் என்பவற்றை எரித்து பலருக்கு புற்றுநோய்களை ஏற்படுத்தி ஆபத்து விளைவித்து பல சுகாதார பிரச்சினைகளை ஏற்படுத்தி வரும் பாக்கு, புகையிலை சப்பும் பழக்கம் தொடர்கதையாகத் தொடர்ந்து வருகிறது.

வெற்றிலை பாவம். இவற்றுடன் கூட்டுச் சேர்ந்திருப்பதால் தனது பெயரை கெடுத்துக் கொள்கிறது. வெற்றிலை, பாக்கு என்பன எமது கலாசாரத்துடன் மட்டுமல்ல வியட் நாம், சீனா உட்பட்ட பல நாடுகளின் கலாசார பாரம்பரிய மரபுகளுடன் ஒன்றிப்போய் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இவற்றை அளவுக்கு அதிகமாகப் பாவித்து அவற்றிற்கு அடிமையாகிப் போவது துரதிர்ஷ்டமே.

### சேதனப் பசளையாக்க

குப்பைகளையும் கழிவுப்பொருட்களையும் எரிப்பதனால் சுற்றாடல் மாசடைவதுடன் எமது சூழலும் வெப்பமடைகிறது. அத்துடன் பயன் மிக்க இயற்கையான சேதனப் பச ளையாக மாறக்கூடிய இந்தப் பொருட் கள் அழிவடைந்து விடுகின்றன.

எனவே வீட்டுக் கழிவுகளையும் குப்பைகளையும் ஓரிடத்தில் சேகரித்து சேதனப் பசளை யாக்குவதற்கு முயற்சி எடுப்போம். எமது சுற்றா டலை வளப்படுத்துவோம்.

### எமது சொந்த உணவு முறையை காக்க



எமது சொந்த மண்ணில் உற்பத்தியாகும் ஆரோக்கியமான இயற்கையான உணவுப் பொருட்களான தீட்டாத அரிசிமா, ஊர்க் கோழி முட்டை, உடன் பசும்பால், மோர், விளாம்பழம், கொய்யாப் பழம், முருங்கை இலை, தவசி முருங்கை, அகத்திப்பூ, தேசிக்காய், ஒடியல், இராசவள்ளி, இளநீர், இளநீரின் வழுக்கல், நுங்கு போன்ற பல அற்புதமான உணவுவகைகளில் நாம் அக்கறை காட்டாமல் இருந்து வருகிறோம்.

இவற்றை பாவித்து வருவோமாக இருந்தால் சத்துமாப் பேணிகளோ விற்றமின்குளிசைகளோ பாவிக்க வேண்டிய தேவை இருக்காது.

காலம்காலமாக பிற தேசத்தவரிடம் அடிமைப்பட்டு கிடந்த நாம் உணவுப்பழக்கத்திலும் அவர்களின் முறைக்கே மாறப்போகிறோமா? அல்லது எமது சொந்த உணவு முறையை காக்கப்போகிறோமா?

சொந்த சுகாதாரக் கவனிப்பு முறைகளில் தன்னிறைவு பெற்று ஆகவேண்டும். புதிய மருத்துவ ஆய்வுகள் ஒவ்வொருவரினதும் சுகாதாரக் கவனிப்புமுறைகள், அவர்களின் கலாசாரம், பாரம்பரியம், நம்பிக்கைகள், மொழி, இனம், சுற்றாடல், உணவு முறை போன்ற பல விடயங்கள் சார்ந்ததாக அமையவேண்டும் என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது. மேலைத்தேய சுகாதாரக் கவனிப்பு முறைகள் அனைத்தையும் அப்படியே கண்மூடித்தனமாக நாம் கடைப்பிடிக்க முடியாது. அது சரியானதாகவும் அமையாது.

எனவே எமது சொந்த சுகாதாரக் கவனிப்பு முறைகளில் நாம் தன்னிறைவு பெற்று ஆகவேண்டும். எமது மக்களுக்கு ஏற்ற வகையில் மருத்துவக் கவனிப்புக் கள் அமைய வேண்டும்.

தன்னம்பிக்கை அற்ற பதற்றபுணம் உள்ளவர்களே கோண் ஒலி எழுப்பியவாறு செல்கின்றனர்.

மன அமைதியும், சுற்றாடல் அமைதியும் சுகாதாரத்திற்கு இன்றியமையாததாகும். நாளாந்தம் எம்மில் பலர் சில மணி நேரங்களையாவது போக்குவரத்தின் போது செலவிடுகிறோம்.

துர் அதிர்ஷ்டவசமாக எம்மில் பலருக்கு கோண் ஒலி எழுப்பாமல் வாகனம் செலுத்தத் தெரிவதில்லை. வாகனம் ஒடுவதில் தன்னம்பிக்கை அற்ற பதற்ற குணம் உள்ளவர்களே பயம் காரணமாக கோண் ஒலி எழுப்பியவாறு செல்கின்றனர்.

இந்த ஒலி சுற்றாடலை மாசாக்குகிறது என்பதோ தெருவில் செல்பவர்களையும் தெருவோரங்களில் இருப்பவர்களையும் இதுநோயாளி ஆக்குகிறது என்பதோ பலருக்கு தெரியாது.

வாகனங்கள் செலுத்தும் பொழுது அநாவசியமாக ஒலி எழுப்பும் பழக்கத்தை எம்மால் மாற்றிக் கொள்ள முடியுமா?

Dr.சி.சிவன்சுதன்
மருத்துவ நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்